www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 12 | ஜனவரி 2005 | பக்கம்12 | விலை 12/- | சுழற்சி 76

# மனிதப் பேரழிவுக்கு அரசாங்கமே பொறுப்பு!

## இயற்கை தந்த பாடத்தை இனவாதிகள் படிப்பார்களா?

கடந்த டிசம்பர் 26ம் திகதி இந்தோனேஷியத் தீவான சுமத்திராவுக்கு அண்மித்த கடல் பிராந்தியத்தில் 9.0 ரிட்சர் அளவிலான பாரிய பூமிய திர்ச்சி ஏற்பட்டது. அதன் காரணமாக எழுந்த கடல் அலை (சுனாமி) தெற்கு, தென்கிழக்கு ஆசிய நாடுகளை நோக்கி வேகமாக வந்து கொண்டது. கரைகளை விட்டு மேலெழும்பி கரையோரப் பகுதிகளுக்குள் புகுந்து மனித உயிர்களைப் பறித்தும் உடமைகளை அழித்தும் ஒரு சில மணி நேரத்திற்குள் ஊழித் தாண்டவமாடிச் சென்றது.

இதனால் இலங்கை வரலாற்றில் கண்டிராத மிகப் பாரிய மனிதப் பேரழிவைக் காண நேர்ந்தது. வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு கரையோரங்கள் அனைத்தும் சுனாமி கடல் அலை வேகத்தால் அடியுண்டது. அழிவுகள் அளவிட முடியாதவைகளாகி உள்ளன. முப்பதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் ஒரு சில மணி நேரத்திற்குள் இன மத மொழி பிரதேச வேறுபாடின்றி மனிதப் பேரழிவுக்கு உள்ளாயினர். மேலும் பல ஆயிரம் பேர் கடல் அள்ளிச் சென்றதால் காணாமல் போயினர். காயங்களுடன் அரைகுறை உயிர் தப்பியோர் மேலும் பல்லாயிரமாகக் காணப்படுகின்றனர். இவற்றுக்கும் அப்பால் கரையோர வீடுகள் இருப்பிடங்கள் தொழில் உபகரணங்கள் பேரலைகளால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. எஞ்சியவைகளும் இடிந்து அழிவுற்றுக் காணப்படுகின்றன. எங்கும் அவல ஓலங்களே கேட்ட வண்ணம் உள்ளன. குடும்பங்களில் தமது அன்புக்குரிய உறவுகளை இழந்தும் குடும்பங்களை முற்றாக இழந்தும், மக்கள் வர்ணிக்க முடியாத துக்கத்திலும் சோகத்திலும் ஆழ்ந்து போயுள்ளனர். அவர்களுக்கு எத்தகைய ஆறுதலையும் கூற முடியாத அவலநிலையே காணப்படுகின்றது. உயிர் தப்பியுள்ளார்கள் என்பதை விட வாழ்நாள் பூராவும் தமது அன்புக்குரிய உறவுகளை இழந்த அவல நினைவுகளுடன் பேரலையின் பேரதிர்ச்சியுடன் வாழப் போகிறார்களே என்பது தான் கொடுமையிலும் கொடுமையானதாகக் காணப்படுகின்றது.

இவ்வாறான மனிதப் பேரழிவுக்கு உட்பட்டவர்கள் சிங்களவர் தமிழர் முஸ்லீம்கள் மலையகத்தமிழர் என்றோ வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என்றோ பார்க்கப்படுவதை விடுத்து மனிதர்களே என்ற உயர்ந்த மனிதநேய அடிப்படையில் பார்க்குமாறே இச் சுனாமிப் பேரலையின் இயற்கை அனர்த்தம் உணர்த்தி நிற்கின்றது. ஆனால் இன மத மொழி பிரதேச வாத வக்கிரங்களால் மக்களைப் பிளவுபடுத்தி ஆண்டு அனுபவித்து வரும் சொத்து சுகம் படைத்த ஆளும் வர்க்க மேட்டுக் குடியினர் இயற்கை தந்த பாடத்தைப் படிப்பினையாகக் கொள்வார்களா? இல்லவே இல்லை என்று தான் கூறமுடியும்.

சுனாமிப் பேரலையின் அனர்த்தத்தை முற்று முழுதாகத் தடுத்திருக்கலாம் என்பது இயற்கையின் யதார்த்தத்தையும் விஞ்ஞான உண்மைகளையும் மறுப்பதாகும். ஆனால் முன் கூட்டியே சில நடவடிக்கைகளை எடுத்திருந்தால் அழிவுகளின் அளவை முடிந்தளவிற்கு குறைத்திருக்க முடியும். அவ்வாறு முன் கூட்டியே நடவடிக்கை எடுப்பதில் அரசாங்கம் முற்றிலும் அக்கறையற்றதாகவே இருந்து வந்துள்ளது. இதில் இன்றைய அரசாங்கம் மட்டுமன்றி

தொடர்ச்சி 12ம் பக்கம்






## நிவாரணம் புனர்வாழ்வு புனரமைப்பில்

# நேர்மை ஐக்கியம் புரிந்துணர்வு அவசியம்

சுனாமி பேரழிவால் வடக்கிலிருந்து தெற்குவரை தமிழ் சிங்கள முஸ்லீம் அனைவரும் மிகப் பாரிய பாதிப்புக்களைப் பெற்றுள்ளனர். அவர்களுக்கான உடனடி மனிதாபிமான நிவாரண உதவிகள் பல தரப்புகளில் இருந்தும் கிடைத்து வருகின்றன. பாதிக்கப்படாத மக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைந்து சென்று பல நிலைகளிலும் உதவி வருகின்றனர். பொது அமைப்புகள் சமூக நிறுவனங்கள் அரசாங்க திணைக்களங்கள் என்பன வற்றின் ஊடே பலதரப்பட்ட பணிகள் இடம் பெறுகின்றன. தவறுதல் குறைபாடுகள் பின்னடிப்புகள் விமர் சனங்கள் காணப்பட்ட போதிலும் மக்களுக்கான நிவாரணங்கள் முடிந்தளவுக்கு முன்னெடுக்கப் பட்டு வருகின்றன.

இதில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் இணைந்தும் செயல்பட வேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டுள்ளது. நிவாரணம் புனர் வாழ்வு புனரமைப்பில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயல்பட முன் வந்திருப்பதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

அதற்கான உத்தியோக பூர்வ அழைப்பை விடுதலைப்புலிகளுக்கு ஜனாதிபதி செயலகம் விடுத்திருக்கிறது. அதே நேரம் கிளிநொச்சியில் புலிகள் இயக்கத்தின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன வெளியிட்டுள்ள அறிக்கையில் சமாதானச் சூழலின் இறுக்கத்தை இன்றைய மனித அவலத்தைக் கருத்தில் கொண்டு ஒதுக்கி வைத்து விட்டு மக்களுக்கு நேர்ந்திருக்கும் பாரிய அவலத்தைத் துடைப்பதற்காக அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்படத் தயாராக இருப்பதாகக் கூறி உள்ளார்.

இவ் இருதரப்பு நிலைப்பாடும் இன்றைய சூழலில் வரவேற்கப் பட வேண்டியதாகும். அரசாங்கம் புலிகள் இயக்கம் ஆகிய இருதரப்பினரின் ஐக்கியப்பட்ட புரிந்துணர்வுடனான செயற்பாடு நேர்மையுடன் முன்னெடுக்கப்படுவது மிக மிக அவசியமாகும். இருதரப்பும் தமக்குள் பொதிந்துள்ள இனத்துவ அரசியல் முரண்பாட்டு அம் சங்களுக்கு அப்பால்

தொடர்ச்சி 12ம் பக்கம்




## ஆழ்ந்த அஞ்சலியும் அனுதாபமும்

கடந்த டிசம்பர் 26ம் திகதி காலை இந்து சமுத்திரத்தில் உருவாகிய சுனாமி கடற் கோள் ஏற்படுத்திய பேரழிவினால் உயிர்களைத் துறந்தும், உறவுகளை இழந்தும் உடமைகளைப் பறிகொடுத்தும் நிர்கதியாகி நிற்கும் வடக்கு கிழக்கிலிருந்து தெற்கு மேற்கு வரையான அனைத்து கரையோர மக்களின் துன்பதுயரத்திலும் மீளமுடியாத சோகத்திலும் புதிய ஜனநாயக கட்சியும் - புதிய பூமியும் பங்கு கொள்கின்றன. உயிர் துறந்தோருக்கு ஆழ்ந்த அஞ்சலியையும் உறவுகளுக்கும் மக்களுக்கும் இதய பூர்வ அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதிய ஜனநாயக கட்சி - மத்திய குழு
புதிய பூமி - ஆசிரியர் குழு

## சுனாமி பற்றி அறிவிக்காத

# அமெரிக்காவின் நயவஞ்சகம்

பேரலை ஏற்படப் போவது பற்றி தெரிந்திருந்தும் பாதிப்புக்குட்படப் போகும் நாடுகளுக்கும் மக்களுக்கும் அறிவிக்காது அமெரிக்க ஏகாதிபத்தியம் நயவஞ்சகம் செய்துள்ளது. சுனாமி அலைகள் பற்றிய முன்னெச்சரிக்கை நிலையங்கள் ஐக்கிய அமெரிக்காவின் ஹவாய், அலாஸ்கா மாநிலங்களில் இருக்கின்றன. அம்மாநிலங்கள் சுனாமி அலை அபாயத்திற்குட்பட்ட பிரதேசங்களாகும். தேசிய சமுத்திர சமயோசித நிர்வாகம் (NOAA) என்ற நிறுவனம் கடந்த 26 ஆம் திகதி அதிகாலையில் இந்தோனிசிய தீவுகளில் ஒன்றான சுமத்திரா தீவுக்கடலில் ஏற்பட்ட சுனாமி கடல் அனர்த்த அலை பற்றியும் அது இந்து சமுத்திர பிராந்தியத்திலும் பரவும் என்பதையும் முன்னறிந்திருந்தும் அதுபற்றி இந்தோனிசியாவிற்கோ, இந்து சமுத்திர நாடுகளுக்கோ அறிவிக்கவில்லை. அவ்வாறு அறிவிக்கப்பட்டிருந்தால் பாரிய உயிர்ச்சேதங்களை பெருமளவு தவிர்த்திருக்க முடியும்.

ஆனால் அனர்த்தங்கள் ஏற்பட்டு இந்து சமுத்திரப் பிராந்தியமே பிணக் காடுகளாக மாறிய பிறகு NOAA நிறுவனம் சுனாமி அலை பற்றி இந்தோனோசிய அதிகாரிகளுக்கு மின் அஞ்சல் மூலம் செய்தியை அனுப்பியிருந்ததாகக் கூறி பாசாங்கு பண்ணுகிறது.

தியாகோகார்சியா தீவிலுள்ள அமெரிக்க கடற்படை தளத்திற்கு உரிய நேரத்தில் அறிவித்திருந்தபடியால் அக்கடற்படை தளத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு குறைக்கப்பட்டுள்ளது. அவ் வறிப்பை அமெரிக்க கடற்படை தள அதிகாரிகள் தியாகோகார்சியா தீவிலுள்ள மக்களுக்கு அறிவிக்கவில்லை.

தொடர்ச்சி 12ம் பக்கம்




www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# தொடர்மாடி வீடுகள் வேண்டாம் 20 பேர்ச்சஸ் காணி வேண்டும்!

## மலையகத் தோட்ட தொழிலாளர்கள் கோரிக்கை

தோட்டங்களிலுள்ள லயங்களை அழித்துவிட்டு அவை இருந்த இடங்களில் தொடர்மாடி வீடுகளைக் கட்டுவதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகளுக்கு மலையகத் தமிழ் மக்கள் எதிர்ப்புக்களை தெரிவித்து வருகின்றனர். தொடர்மாடி வீடுகளுக்குப் பதிலாக வீடுகளை கட்டிக்கொள்ள குடும்பமொன்றுக்கு ஆகக்குறைந்தது 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆறுமுகம் தொண்டமான் தோட்ட உட்கட்டமைப்பு, வீடமைப்பு அமைச்சராக இருந்த போது சில தோட்டங்களில் தொடர்மாடி வீடுகள் கட்டப்பட்டன. ஏற்கனவே இருந்த லயங்களை அழித்துவிட்டு அதே இடங்களிலேயே தொடர்மாடி வீடுகள் கட்டப்பட்டன. இதனால் தோட்டத் தொழிலாளர்கள் அவர்களின் சொந்த செலவில் திருத்தம் செய்து வைத்திருந்த லய வீடுகள்அழிக்கப்பட்டன. அவற்றுக்குப் பதிலாக அதே இடங்களில் அவற்றை விட வசதிக்குறைவான தொடர்மாடி வீடுகள் கட்டப்பட்டன. இத் தொடர்மாடிகள் வாழ்வதற்கு தேவையான வசதிகளைக் கொண்டனவாக இல்லை. இதுவரையும் லய வீடுகளுக்கு எவ்வித கொடுப்பனவையும் தொழிலாளர்கள் கொடுப்பதில்லை. மாடி வீடுகளில் குடியேறியவுடன் மாதாந்தம் ஒரு தொகைப் பணம் அவர்களின் சம்பளத்திலிருந்து பிடித்துக்கொள்ளப்படுகிறது. அதற்கு அவர்களது **E. P. F** பணம் பிணையாக வைக்கப்படுகிறது. வீட்டிற்குரிய மொத்தப் பணம் கட்டி முடிக்கப்படாது விட்டால் **E.P.F** பணத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படும். தோட்டங் களில் தற்போது வேலை செய்யாதவர்களும் லய வீடுகளில் வாழ்கின்றனர். தோட்டங்களில் வேலை செய்யாதோருக்கு தொடர்மாடிவீடுகள் வழங்கப்படுவதில்லை. மாதாந்தக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியாது என்பதாலும், **E. P. F** பணம் பிணையாக பெற்றுக் கொள்ள முடியாது என்பதாலும் தொடர்மாடி வீடுகள் அவர்களுக்கு வழங்கப்படுவதில்லை.

தற்போது இ. தொ. கா வின் முத்து சிவலிங்கம் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராகிய பிறகு பல தோட்டங்களில் தொடர்மாடி வீடுகள் கட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதனை தோட்டத் தொழிலாளர்கள் எதிர்க்கின்றனர். இ. தொ. கா வின் கோட்டை என்று கூறுப்பட்ட கொட்டக்கலை பெரிய மண்வெட்டி தோட்டத்திலேயே தொடர்மாடி வீடுகளை கட்டுவதற்கு தொழிலாளர்கள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்தள்ளனர். அவர்கள் வாழ்கின்ற லயங்களை விட்டு வெளியேறப் போவதில்லை என்றும் லயத்து வீடுகளை தமது சொந்த செலவில் திருத்தி சில வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பதாலும் அவற்றை அழித்துவிட்டு அவ்விடத்தில் வசதி குறைந்த தொடர் மாடி வீடுகளைக் கட்டி தமக்கு கொடுக்கத் தேவை இல்லை என்ற தமது எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். அவற்றை விலை கொடுத்து வாங்க வேண்டிய அவசியமில்லை என்றும் கூறியுள்ளார்.

வேண்டுமென்றால் தோட்டங்களிலுள்ள வேறு இடங்களில் தொடர்மாடி வீடுகளை கட்டி விரும்புகின்ற தொழிலாளர்களுக்கு கொடுப்பதை தாம் எதிர்க்கவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராகலை, ஹைபோரஸ்ட், டயகம போன்ற இடங்களிலும் தொழிலாளர்கள் தொடர் மாடி வீடுகளை கட்டுவதற்கு எதிர்ப்பை தொரிவித்து வருகின்றனர். தொடர்மாடி வீடுகளுக்குப் பதிலாக குடும்பமொன்றுக்கு 20 பேர்ச்சஸ் காணியை வழங்கினால் அதில் தங்களால் வீடுகளை கட்டிக் கொள்ள முடியும் என்றும் அவர்கள் தொரிவிக்கின்றனர்.

# மலையகத்தை உறுஞ்சும் வைத்திய அட்டைகள்

அடிக்கடி மாறும் அரசியல் சூழ்நிலைகளுக்கேற்ப அரசியல் வாதிகள் மாறி மாறி வந்து மலையக மக்களை ஏமாற்றுவது ஒரு துன்பமான வரலாறு. ஆனால் அன்றாட சீவனத்துக்கே அல்லற்படும் மலையக மக்களை அட்டைகளாக உறிஞ்சும் வைத்தியர்களின் கொடுமை நியாயங்களுக்கு முரணானது. அதுவும் உழைக்கப் பிறந்த மக்களின் ஊரான அட்டன் நகரில் நடக்கும் வைத்திய லீலா விநோதங்களைக் கூறாமல் இருக்க முடியாது.

அட்டனில் ஒரு மாவட்ட வைத்திய சாலை உள்ளது. இது அரசாங்க வைத்தியசாலை என்றாலும் (க்ளங்கன்) ஏனைய மலையக வைத்திய சாலைகளுக்குரிய மாற்றான் தாய் மனப்பான்மையிலான கவனிப்பு இருக்கவே செய்கிறது. வைத்திய சேவை வசதிகள், கட்டிட தளபாட வசதிகள், ஆளணி, அடிப்படை வசதிகள் என்று பற்றாக்குறைகளே அதிகம். இதற்குள்ளும் மலையக மக்களின் மருத்துவப் பிரச்சனைகளுக்கு ஓரளவேனும் முகம் கொடுக்கும் வகையில் அந்த வைத்தியசாலை இயங்கி வருகின்றது.

ஆனால் அங்கு கடமையாற்றும் வைத்தியர்களின் மனப்பாங்குதான் மக்களின் மனதை காயப்படுத்துவதாக உள்ளது. நீண்டகாலமாக அட்டன் நகரில் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் ஒருவர் (AMP) வாழ்ந்து வருகின்றார். அவர் அப்பிரதேச மக்களின் மனங்களை வென்றவருமாக இருக்கிறார். அதே வேளை அட்டன் நகரில் தனது தனிப்பட்ட டிஸ்பென்ஸரியையும் நடத்தி வருகின்றார். அங்கும் இவரிடம் வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகம்.

ஆனால் மலையக மண்ணிலே பிறந்து தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களில் இருந்து படித்து பட்டம் பெற்று வைத்தியர்கள் ஆகியவர்களும் (எம். பி. பி. எஸ்) அதே வைத்திய சாலையில் கடமையாற்றுகிறார்கள். இவர்களும் அட்டன் நகரில் தனியார் டிஸ்பென்ஸரிகளை நடத்துகின்றனர். ஆனால் இவர்களிடம் வரும் நோயாளர்களின் எண்ணிக்கை ஒப்பிட்டளவில் குறைவு.

இந்தக் காரணத்துக்காக இந்த வைத்தியர்கள் அரசாங்க வைத்திய சாலைக்கு வரும் அப்பாவி நோயாளர்களைப் பழிவாங்கும் அவல நிலை பல காலமாகத் தொடர்கிறது. அதிக நேரங்களில் இந்த வைத்தியர்கள் வைத்திய சாலையில் இருப்பதில்லை. நோயாளிகள் இக் கட்டான நிலையில் இருக்கும் போது அவர்களைத் தொலைபேசியில் தேடிப் பிடிப்பதே முடியாத காரியமென்று அங்குள்ள தாதி ஒருவர் அடிக்கடி சலித்துக் கொள்வார். அப்படி வைத்திய சாலையில் இவர்கள் இருந்தாலும் வரும் நோயாளர்களை சரியாகவே கவனிப்பதில்லை. தமது, பிள்ளைகள் வைத்தியர்களாக உள்ளனர் என்ற நம்பிக்கையில் மருந்து எடுக்க வரும் அனேகமான தோட்டத் தொழிலாளர்களான நோயாளிகள் பலத்த ஏமாற்றங்களுடனேயே திரும்ப நேரிடுகிறது.

நோய் பற்றி சரியாக விசாரிப்பதில்லை, உரிய பரிசோதனைகளைச் சரியாக மேற்கொள்வதில்லை. வேண்டா வெறுப்பாக மருந்து கொடுத்து அனுப்பி விடுவார்கள்.

அதேவேளை வாட்டில் இருக்கும் ஏழை நோயாளர்களுக்கும் சரியான வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்வதில்லை. சில வேளைகளில் எதுவித முன்னறிவித்தலும் ஆயத்தமும் இன்றி சில நோயாளர்களை நுவரேலியா ஆதார வைத்திய சாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி விடுவர்.

இதனால் தமது அன்றாட ஜீவனோபாயத்துக்காக அல்லலுறும் தோட்டத் தொழிலாள மக்கள் பெரும் சிரமங்களைச் சந்திக்க நேரிடுகின்றது.

அது மட்டுமல்லாமல் இரசாயன ஆய்வு கூடப் பரிசோதனைகள், 'எக்ஸ்' கதிர் பரிசோதனைகள் போன்றவற்றையும் அதே வைத்தியர்கள் தமது தனிப்பட்ட சிகிச்சை நிலையங்களில் நடத்தி வருகின்றனர். அங்கு அந்தப் பரிசோதனைகளுக்காக ஏற்படும் செலவோ கொழும்பில் ஏற்படும் செலவை விட இரண்டு மூன்று மடங்காக இருக்கும்.

இந்த அவல நிலையை யாரிடம் எடுத்துரைத்து தீர்வு காண்பது என்று தெரியாது அப்பகுதி வாழ் அப்பாவி மக்கள் தவித்துக் கிடக்கிறார்கள். இது ஒரு உண்மைச் சம்பவம். அண்மையில் நடந்தது. தோட்டத்தொழிலாளியான ஒரு கணவன் தனது மனைவியான 9மாத கர்ப்பிணியை காய்ச்சல் காரணமாக அந்த வைத்திய சாலையில் அனுமதித்தார். அவரைப் பரிசோதித்த 'மலையக மைந்தனான' அந்த டாக்டர், இது சாதாரண காய்ச்சல். பயப்பட ஒன்றும் இல்லை என்று கூறி வாட்டில் அனுமதித்தார். இது நடந்தது மாலை வேளையில். மறுநாள் கணவன் நோயாளியைப் பார்க்கப் போன போது பிள்ளை இறந்து பிறந்ததாக தகவல் கிடைத்தது.

முதல் நாள் மாலை முன்னிரவுவரை அந்தக் கர்ப்பிணியின் உறவினர்கள் வைத்திய சாலையில் தாமதித்து நின்றே சென்றனர். அதுவரை எதுவித தகவலும் தரப்படவில்லை. அன்று இரவு வேளையிலும் எந்த டாக்டரும் அந்த வைத்தியசாலையில் இருந்திருக்க வில்லை என்ற உண்மையும் பின்பே தெரிந்தது.

மொத்தத்தில் 'கஞ்சி குடிப்பதற்கிலார்- அதன் காரணங்கள் இவையெனும் அறிவுமிலார்' என்று பாரதி சொல்லிய நிலையில் வாழும் மலையக மக்களுக்கு வழிகாட்ட வேண்டிய படித்த மலையக வைத்தியர்களே அந்த மக்களின் விழிகளைப் பிடுங்கி குருடு ஆக்கும் நிலை பற்றி என்ன சொல்லிப் பாடுவது? தேன் நிலவு அரசனுக்கே விளக்கம்.

-நீள் நதியான்-

**புதிய பூமி**

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

- ★ 2005ம் ஆண்டு சந்தா செலுத்துங்கள்
- ★ விசேட நிதி உதவி வழங்குங்கள்
- ★ விடயதானங்கள் அனுப்புங்கள்
- ★ உங்கள் கருத்துக்களை தெரிவியுங்கள்

உள்நாட்டுக்கான சந்தா ரூபா 200/=
வெளிநாடுகளுக்கான சந்தா 20அ. டொலர்

காசுக்கட்டளை மூலம் அனுப்புவோர்
நிர்வாகி புதிய பூமி எனக்குறித்து
புறகோட்டை(Pttea)தபால் நிலையத்திற்கு அனுப்பவும்

வங்கி மூலம் அனுப்புவோர்
கணக்கு இல:- 0672-21-2002634-6
இலங்கை வங்கி
சுப்ப மாக்கற் கிளை
கொழும்பு-11

புதிய பூமி
47,3வது மாடி
கொ.ம.ச.க.தொகுதி
கொழும்பு-11

# நாளு நடக்கும் உலக'லே

நற்குணன்

## கூலிக்கு மாரடிக்கிறார்களா?

ஈ. பி. ஆர். எல். எவ். (பத்மநாபா) குழு அதன் மறைந்த தலைவர் பத்மநாபா நினைவாக ஒரு துண்டுப்பிரசுர அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் இந்தியாவின் குறிக்கீட்டுக்கு பத்மநாபா ஆற்றிய பங்குக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. தொடங்கிய நாள் முதல் ஈ. பி. ஆர். எல். எவ் பல கூறுகளாக பிளவுபட்டாலும் எதிரும் புதிருமாக நிற்கிற குழுக்களில் இந்தியாவின் செல்லப்பிள்ளைகளாகச் சிலவும் கொஞ்சம் எட்டத்தில் மற்றவையும் இருந்தாலும் இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி போன்றோர் பற்றிய மயக்கங்களை எல்லாருமே ஊக்குவிக்கிறார்கள். இந்தியாவை யார் ஆண்டாலும் இந்தியா இலங்கைத் தமிழர்கட்கு எதிராக எதுவுமே செய்யாது என்று விடுதலைப் புலிகளை ஆதரிக்கிற ஈ. பி. ஆர். எல். எவ் பிரிவும் வற்புறுத்துகிறது. இவர்கள் எல்லாரும் அரசியலில் அறியாப்பிள்ளைகளா அல்லது இந்திய அதிகார நிறுவனம் ஆட்டிப்படைக்கிற சூத்திரப் பாவைகளா?

இந்தியாவை இந்த நாட்டின் மீது பூரண அதிகாரம் செலுத்த வைப்பதன் மூலம் தமக்கும் தமிழர் மீதான அதிகாரத்தில் ஏதாவது பங்கு கிடைக்குமென்று கனவு காணுகிறார்களா? அல்லது இன்னமும் கூலிக்காக மாரடிக்கிறார்களா?

## உத்தரவாதமா உபத்திரவமா?

காங்கிரஸ் தலைமையில் உள்ளவர்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கொஞ்சம் அக்கறை உள்ளவராக அறியப்பட்டவர்களுள் மணி சங்கர் ஐயரும் ஒருவர். இந்திய அதிகார வர்க்கம் எவர் மூலம் எந்த விதமான அக்கறையைக் காட்டினாலும் அதன் உள்நோக்கம் இந்தியாவின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவது மட்டுமே.

அண்மையில் இலங்கை வந்த மணி சங்கர் ஐயர் இலங்கை ஒருமைப்பாட்டுக்கு இந்தியாவை உத்தரவாதமாக இருக்க முடியுமென்று கூறியுள்ளார். இதன் பொருளென்ன? இந்தியா இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக ஒரு காலத்தில் நடவடிக்கைகளை எடுத்ததன் மூலம் இதன் ஒரு பக்கத்தை நிரூபித்துள்ளதா? இப்போது அமைதிக்கு உதவுவதாகச் சொல்லிக் கொண்டு வடக்குக் கிழக்கில் அமைதியைக் குலைக்கவும் பேச்சுவார்த்தைகட்கு இடையூறு செய்வதன் மூலமும் இன்னொரு பக்கத்தை நிரூபிக்கிறதா?

இந்த நாட்டின் ஒற்றுமையை எந்தவொரு அயல்நாடும் உத்தரவாதம் செய்ய இயலாது. உத்தரவாதம் தருகிறவர்கள் செய்கிறதெல்லாம் இந்த நாட்டைத் தங்களுக்கு அடிமைப்படுத்துகிற முயற்சிகளே. அதை ஒவ்வொரு விதமாகச் சொல்ல வைக்கத் தான் பேரினவாதிகள் ஆள்மாறி ஆளை இங்கு ஆரத்தி எடுத்து வரவழைத்து மேடையேற்றுகிறார்களா?

## அப்பவே சொன்னார்களாம்!

அமைதிப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்தும் இழுக்கப்படுமானால் மீண்டும் விடுதலைப் போராட்டத்தைத் தொடங்க வேண்டி வரும் என்று பிரபாகரன் மாவீரர் நாளிற் கூறியதை வைத்து பார்ப்பனிய இந்து. விடுதலைப்புலிகள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடவில்லை என்று தாங்கள் முதலிருந்தே சொல்லி வந்ததாகப் பெருமைப்பட்டுள்ளது. அதன் எடுபிடி எழுத்தாளரும் இந்திய மேலாதிக்கப் பிரசாரகருமான 'பேராசிரியர்' சூரிய நாராயணாவும் அந்தக் கருத்தை விரிவுபடுத்தி இந்துவில் எழுதியுள்ளார். இந்துவின் விஷமம் என்றைக்கும் ஓயப்போவதில்லை.

எனினும் இந்து ஒரு நடுநிலைப் பத்திரிகை என்கிற மயக்கம் இன்னமும் பலரிடையே உள்ளது. இந்து நடுநிலைப் பத்திரிகை என்றால் த ஐலன்ட் இந்துவை வென்ற நடுநிலைப் பத்திரிகை எனலாம்.

## கப்பல் ஓட்டாத தமிழன்

முன்னாள் அமைச்சர் மகேஸ்வரன் சனாதிபதி சந்திரிக்காவுடன் நெருக்கமாகப் பழகிய காலமொன்றும் இருந்தது. சென்ற யூ என். பி. ஆட்சியின் போது சனாதிபதிக்கும் பிரபாகரனுக்கும் இடையே தூது போக அவர் முன்வந்த காலம் அது. அப்படித் தூது போகிறதற்காகத்தான் அவர் இரண்டு கப்பல்கள் வாங்கியிருக்க வேண்டும். அவர் வாங்கின கப்பல்களை வியாபாரத்துக்குப் பாவிக்கச் சனாதிபதி அனுமதி வழங்க மறுத்த பின்பே சனாதிபதியை எதிர்த்து அவர் பேசியிருக்கிறார். அவரைப் பாராளுமன்றப் படியேற விட்டதில் விடுதலைப்புலிகளுக்கும் பங்கு உண்டு. இப்போது தேசிய இனப்பிரச்சனை தொடர்பான எந்தப் பிரச்சனையிலுங் காட்டாத ஆவேசத்தை அவர் இப்போது எஸ். பி. திஸ்ஸாநாயக்கவின் சிறைத் தண்டனை பற்றிக் காட்டியுள்ளதுடன் பாராளுமன்றத்தில் தனது நடத்தைபற்றி எள்ளளவு வெட்கமும் மனவருத்தமுங் காட்டாமல், எஸ். பி. திஸாநாயக்கவைக் காண வெலிக்கடைச் சிறைக்கூடத்துக்கும் போயிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இரண்டாம் முறை தேர்தலில் நிற்க இயலாத அவருக்கு வாக்களித்துப் பாராளுமன்றத்துக்கு அனுப்பிய கொழும்பு வாழ் தமிழர்கள். எங்கே போய் முட்டிக்கொள்ளுவது என்று அலுத்துப்போய் உள்ளார்கள்.

## முதலாளியக் கொலை - கொள்ளைக்காரர்கள்

யூனியன் காபைட் கம்பெனியின் தொழிற்சாலையில் நடந்த விபத்தின் விளைவாக போபால் நகரின் மக்கள் ஆயிரக்கணக்கில் இறந்ததும் இன்னும் பல மடங்கானோர் நிரந்தர நோயாளரானதும் அவர்கட்கு இன்னமும் உரிய நட்டஈடு வழங்கப்படாதது பற்றி அண்மையில் அந்த விபத்தின் 20ம் நினைவு நாளையொட்டிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நினைவூட்டின. யூனியன் காபைடின் கவனயீனமே இவ் விபத்தின் காரணம் என்பதும் போபாலில் போன்று அமெரிக்காவின் எந்த நகரிலும் நடந்திருந்தால் இந்திய மக்கள் சார்பாகக் கேட்கப்பட்டதை விடப் பல மடங்கு அதிக நட்டஈடு எப்போதோ வழங்கப்பட்டிருக்கும். ஆனால் யூனியன் காபைட் அற்ப தொகையுடன் தப்பிவிட்டது.

யூனியன் காபைடின் பிரதான உற்பத்தி 'எவரெடி' பற்றரிகள் என்பது பற்றிப் பலர் அறிய மாட்டார்கள். யூனியன் காபைட் உற்பத்திகளைப் பகிஷ்கரிக்குமாறு உலகளாவிய பிரசாரம் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை. அதை விட முக்கியமாக சில ஆண்டுகட்கு முன்னர் டொவ் ரசாயனக் கம்பெனி யூனியன் காபைடைத் தன்னுடையதாக்கிக் கொண்டது. இதன் மூலம் நட்ட ஈட்டு வழக்கிலிருந்து நழுவும் வசதியும் ஏற்பட்டுள்ளது. இந்த டொவ் கொம்பனி தான் வியற்னாம் போரின் போது அமெரிக்க ராணுவத்துக்கு நேபாம் உட்பட்ட பல பேரழிவு ரசாயனப் பொருட்களை வழங்கியது. வியற்நாம் போர் எதிர்ப்பு இயக்கத்தினரால் மிகவும் கண்டிக்கப்பட்ட கம்பனியாகும். இவை பற்றி இப்போது அதிகம் பேசப்படுவதில்லை. ஆனால் உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் இவை பற்றி அறியாமல் இருக்கக் கூடாது. போபால் விபத்துக்குக் காரணமானவர்களுடன் தொடர்புடைய கம்பனிகள் அத்தனைக்கும் எதிரான வெகுசன இயக்கம் ஒன்று இல்லாமல் குற்றவாளிகளைப் பணிய வைக்க இயலாது.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# முன்னெச்சரிக்கை விடத் தவறியதேன்?

## அரச உயர் அதிகாரிகளின் அசமந்தத்தால் பாரிய அழிவு

இலங்கையின் கடற்கரைப் பகுதியில் ஏறத்தாழ முக்காற் பங்கைப் பாதித்துள்ள கடலெழுச்சியை முன்கூட்டியே அறியும் வாய்ப்பு இருக்கவில்லை என்பது தான் அதிகாரிகளின் வாய்ப்பாடாக உள்ளது. இனிமேற் கொண்டு நில நடுகம் பற்றிய தகவல்களையும் உடனுக்குடன் பெறும் வசதி செய்யப்படும் என்றும் அதற்கான அமைப்புக்கள் உருவாக்கப்படும் என்றும் சனாதிபதி அறிவித்துள்ளார். நிச்சயமாக இன்னுஞ் சில நிபுணர்கட்கு உயர் பதவி வாய்ப்புக்கள் உள்ளன. ஆனால் யாரும் இன்னும் பகிரங்கமாகக் கேட்காத ஒரு கேள்வியைத் தனிப்பட்ட முறையில் மக்கள் கேட்கத் தொடங்கியுள்ளனர்.

அலையெழுச்சி முதலில் அம்பாறை–மட்டக்களப்பு பகுதியையே தாக்கியது. அப்போது நேரம் 7மணிக்கும் 7.30க்கும் இடையில் காலி தாக்கப்பட்ட போது ஏறத்தாழப் 10 மணி. அப்படியாயின் குறைந்த பட்சம் 2அல்லது 2 1/2 மணி நேரமாகிலும் கழித்தே காலியில் உயிரிழப்புக்கள் நிகழ்ந்தன. திருகோணமலையோ மட்டக்களப்போ பாதிக்கப்பட்ட உடனேயே இலங்கையின் பிற பகுதிகள் எச்சரிக்கப்பட்டிருந்தால் தெற்கில் நிச்சயமாக மாத்தறைக்கு மேற்காகவும் முழு மேற்குக் கரையிலும் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டிருக்கும். யாழ்குடாநாட்டிலும் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டிருக்கும்.

இது தகவல் யுகம் என்கிறார்கள். இன்று தொலைபேசி வசதிகள் இல்லாத உரே இல்லை. பல வேறு தொலைத் தொடர்பு வசதிகள் உள்ளன. கிழக்கு மாகாணக்கரைப் பகுதியில் ராணுவம், கடற்படை,பொலீஸ், அரசாங்க நிருவாகப் பகுதிகள் என்று நிறைய உள்ளன. அங்கெல்லாம் பொறுப்புள்ள அதிகாரிகள் உள்ளனர். ஒரு அதிகாரிக்குக் கூட இந்த நிகழ்வு பற்றித் தமது மேலிடத்துக்கோ அரசாங்கத்தின் தகவல் துறைக்கோ அறிவித்திருக்க இயலாதா? உண்மையா என்ன நடக்கிறது என்று விளங்கா விட்டாலும் இது போல ஒரு பெரிய அசம்பாவிதம் பற்றி அறிந்திருந்தால் யாரும் விசாரித்து அறிய வாய்ப்பில்லையா?

முழுக் கிழக்குக் கரையையும் பாதித்த ஒரு பேரலை நாட்டின் மிகுதியை எதுவும் செய்யாது என்று எல்லாரும் நினைத்தார்களா? இன்னுஞ் சில நாட்களில் இன்றைய அதிர்ச்சியினின்றும் அல்லலினின்றும் மக்கள் சிறிது விடுபடும் போது மேற் குறிப்பிட்டவாறான கேள்விகள் எழும் எழ வேண்டும்.

எட்டு மணியளவில் நாடளாவிய முறையில் மக்கள் எச்சரிக்கப்பட்டிருப்பின் பெரும்பாலும் முல்லைத் தீவிலும் அதற்கு வடக்கிலும் அம்பாந்தோட்டையிலும் அதற்கு மேற்கிலும் உயிரிழப்புக்களிற் பெரும் பகுதி தவிர்க்கப்பட்டிருக்கும். பொருட்சேதம் தவிர்க்க இயலாதது. ஆனால் உயிர்ச்சேதம் அப்படியல்ல. இந்தப் பெரும் உயிரிழப்பில் அரைவாசிக்கு மேலான பகுதியைத் தவிர்க்கும் வாய்ப்புத் தவற விடப்பட்டுள்ளது.

அமெரிக்க கப்பல் ஒன்று இந்த அலை எழுச்சி பற்றி அது இந்தோனோஷிறியாவிற்க்கு அருகே கடந்த போதே அறிந்திருத்தது என்கிறார்கள், அந்த தகவல் ஏன் உரியாவாறு அனுப்பப்படவில்லை என்பதும் கேள்வியாகும்.

எப்படியாயினும் நமது நாட்டைக் காப்பதற்க்காக வடக்குக் கிழக்கில் முகாம் போட்டு இருக்கிற பாதுகாப்புப்படையும் பொலிசும் அரச நிருவாகமும் எவ்வாறு இந்த நாட்டின் மக்களுக்கு ஏற்பட்ட உயிராபத்தைப் பற்றி இவ்வளவு அசட்டையாக இருக்க நேர்ந்தது. அரசின் பாதுகாப்பு நிருவாக யந்திரத்தின் அதிகாரிகள் தெற்கிலும் மேற்கிலும் பல ஆயிரம் சிங்கள மக்களின் உயிரிழப்புக்குப் பதில் சொல்லியாக வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் பற்றி அவர்களிடம் யார் கேட்பார்கள். உண்மையைச் சொன்னால் இந்த நாட்டின் சுரண்டற்கார அதிகார வர்க்கத்திற்கும் அதன். அதிகாரிகட்கும் எப்போது தான் மக்கள் பற்றி அக்கறை இருந்திருக்கிறது?

# முதல் எச்சரிக்கை

கடலம்மா நீயுந்தான் கோபம் கொண்டனையோ
எத்தனை அனர்த்தம் வரினும் அஞ்சோம் தாயே!
வரும்போது எம்மைச் சுமந்தது ஒரு கருப்பை– கயவர்
துரத்தியபோது நம்மோடு வந்தது ஒரு கைப்பை
போம்போது ஏது தாயே எமக்கு?

உலகச் சனத்திற்கு தென்னாசியச் சாவு பற்றிக் கவலை
இலங்கைச் சனத்திற்கு எல்லாமே கவலை
எம்மவர்க்கே சாவு அதிகமென
அவரவர் இனத்தாரெல்லாம் தத்தம் கவலை
சிங்களர், தமிழர், முஸ்லீம் என
எல்லாமே எண்ணுக்கணக்கில் அடக்கம்
எலக்ஷன் பெறுபேறு போல்– ஐயகோ
ஏன்தான் கடலம்மா எம்மீது சீறினாய்!

நம்இயற்கை சம சீதோஷ்ண நிலையெனச்
சந்தோஷித்து அவரவர் தத்தம் கருமமேயாற்றி
இயல்பாகவே கையேந்தாமல் வாழாது
செயற்கை மோதல் செய்து- பிற
இனத்தார் மீது துவேசம் பேசி
என்சாதி உன்சாதி பணமுள்ள செருக்கேறி
இறுமாந்து வாழ்ந்த எம் மேல்
ஏன்தான் கடலம்மா கோபம் கொண்டனை?
எல்லோரையும் ஒன்றாக்கி உன் சீற்றத்தை நீ தணித்தாய்

பாரபட்சமற்ற உன் தன்மான உணர்வலையை
பயமின்றி வருவது வரட்டும் என்றிருந்தோம்
இதுவேயோர் இனக் கொடூரமாயமைந்திருப்பின்
ஓடுதற்கு இடந்தான் ஏதம்மா?
கடலாழி நீயோ பின்னிருந்து துரத்தினாய்
முன்னாலெங்கேனும் ஓடித்தப்பென்று,
நகரவிடாக் காடையர் நாற்புறமுமன்றோ
நமைத் துரத்துவார் ஓட இடமின்றி,

உன்மேல் எமக்கொரு பொல்லாப்புமில்லை
நீயோ பாவம்,
எத்தனை அணுகுண்டுப் பரிசோதனை கண்டாய்
சீற்றத்தில் உன்படை நடப்பிலே
தோற்றது கடல் நீயே என்ற உன் குழந்தைகளன்றோ!

கரை கொள்ளப் புறப்பட்ட நீ– முழுக்
கரையையும் கொள்ளாது ஏன்தான் போயினையோ?
பூகம்பப் பேரலையே,
ஆகட்டும் பார்ப்போம்,
ஆக, முதல் எச்சரிக்கை
அதில் உனக்கு வெற்றி!
அடுத்து வரும் கடல் சந்ததியர்
ஆகாயம் நோக்கி எழுவர்
அப்போது சந்திப்போம் வலுவோடு!

க.லீலாவதி

# வெளிநாட்டு உதவிகள் மக்களுக்கு கிட்டுமா அல்லது பகற் கொள்ளை போகுமா?

இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பின் உடனடி விளைவாகப் பல நாடுகளிலிருந்தும் உதவி வழங்கப்பட்டுவருகிறது. இது இலங்கைக்கு நேர்ந்த முதலாவது இயற்கையின் அனர்த்தமல்ல. 1957 வெள்ளம், 1964 புயல், 1978 புயல், 1980 வெள்ளம் என்று கடந்த சில ஆண்டுகளாக மாறி மாறி வந்த புயலும் வெள்ளமும் போக இயற்கை சீறாமலே இயற்கையின் நிகழ்வுகளையே அபாயங்களாகமாற்றுகிற அளவுக்கு நமது சுற்றாடல் சீரழிக்கப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகள் முன்னம் தெற்கில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக்கு மழையை விட மனிதரின் தவறுகள் தான் காரணமாயிருந்தன. மலைக் காடுகளையும் மண்வளத்தையும் சூறையாடுகிற பேராவலின் விளைவுகளே. இப்போது ஒவ்வொரு மழைக் காலமும் மண்சரிவையும் வெள்ளத்தையும் கொண்டு வருகின்றது. நம்மை நாமே சீரழித்துக் கொண்டு அயலவரிடம் பிச்சை கேட்கிறோம் எனினும் நாம் எதையுமே கற்பதில்லையா?

கடந்த கால அனர்த்தங்களின் விளைவுகட்கு நிவாரணமாக வந்த அயல் உதவியிற் பெரும் பகுதி அரசியல்வாதிகளின் உடந்தையுடன் சமூகவிரோதிகளால் சூறையாடப்பட்டுள்ளது. 1978 புயலுக்குப் பிறகு ஒரு அயல் அரசாங்கம் வழங்கிய காலநிலை அவதானக் கருவிகள் பல காலமாக பாவிப்பாரற்றுக் கிடக்கின்றன. 2001ம் ஆண்டு வெள்ளத்திற்கும் மண்சரிவுக்கும் பின்பு நிவாரண வேலைகட்காக அயல்நாடொன்று வழங்கிய நீரிறைக்கும் பம்புகள் இரத்தினபுரியில் வெள்ள நிவாரண வேலைக்குப் பயன்படாமல் ஒரு அரசியல் வாதியின் இரத்தினக் கல் சுரங்கத்தில் நீரிறைப்பதற்காக எடுத்துக் கொண்டு செல்லப்பட்டன. இவை ஆயிரக்கணக்கான சம்பவங்களில் ஒரு சில மட்டுமே.

மட்டக்களப்பை 1978ல் தாக்கிய புயலை அடுத்துப் பெருந் தொகையான பணம் நிவாரணநிதியாக வழங்கப்பட்டதும் அந்தத் தொகை வருவதற்கு முன்னதே அரசாங்கம் சில நிவாரண வேலையைச் செய்ததாகக் கூறி அயல் நாட்டு நிதியுதவி அனைத்தையும் சனாதிபதியின் நிதி ஒன்றை உருவாக்கி அதில் இட்டு வைத்தது. அதிலிருந்து எத்தனை எத்தனையோ பேருக்கு அள்ளிக் கொடுக்கப்பட்டுள்ளது. இன்று வரை சனாதிபதியுடைய சொந்தப் பணம் மாதிரி அது பயன்படுகிறது. பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட மக்களில் பெரும்பாலானவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நிவாராணத்திற்கு சிறுபகுதியே கிடைத்தது. இயற்கையை விடக் கொடுமையாக நடந்து கொள்ளக் கூடிய மனிதர்கள் உருவாக்கிய போரில் தொடர்ச்சியாக வடக்குக் கிழக்கு பாதிக்கப்பட்டது. அதற்கும் வெளியிலிருந்து நிவாரண நிதி வந்தது. அப்போது அமைச்சராக இருந்த அஷ்ரப் வடக்கு கிழக்கின் புனரமைப்புக்குப் பொறுப்பாயிருந்தார். அந்த நிதி அவருடைய அரசியல் தளத்தைப் பலப்படுத்த மிகவும் பயன்பட்டது. அது வேறெதற்குப் பயன்பட்டிருந்தாலும் அரச கட்டுப்பாட்டுக்குள்ளிருந்த கிழக்கு மாகாணத் தமிழர்கட்குப் பயன்படத் தவறியதுடன் வடபிரதேச முஸ்லிம்கட்கும் பயன்படவில்லை.

இந்த நாட்டுக்காக வழங்கப்படுகிற நிவாரணத்தில் மக்களுக்கான அத்தியாவசியத் தேவைகளான உணவு, உடை, உறைவிட வசதிகள் என்பன கூடக் களவாடப்படுகின்றன. நெருக்கடியான காலப்பகுதியில் கொஞ்சங்குறைவாக நடக்கும் களவுகள் நெருக்கடி தளர்ந்து வெளியிலிருந்து பொருளுதவி பெருமளவில் வரும் போது மிகவும் பெருகி விடுகின்றன.

இந்தக் கொள்ளையடிப்பில் அரசாங்க அலுவலர்களது அசமந்தமான போக்கும் ஊழலும் அரசியல் வாதிகளினதும் அவர்களது கூட்டாளிகளது மோசடிகளும் மக்களை உறுஞ்சிக் கொழுக்கிற ஒரு வணிகர் கூட்டத்தின் ஈவிரக்கமற்ற கொள்ளையடிப்பும் போல என்.ஜி.ஓக்களும் இந்த உதவி விளைச்சலில் தங்கள் பங்குக்கும் மேலாக அறுவடை செய்து கொள்ளுகிறார்கள்.

இன்றைய போர்ச் சூழல், அரச நிருவாக இயந்திரத்தின் சீர்குலைவு என்பன பல வகையான இடைத்தரகர்களுக்கு வசதியாகிவிட்டது. உதவி செய்கிற அயல்நாடு எதுவுமே தன்னால் வழங்கப்பட்ட தொகை சரியானவர்களை சென்றடைகிறதா. என்பதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. கொடுக்கிற பணத்தில் பெரும் பகுதி உதவுகிற நாட்டிற்குத் திரும்பி வருவது பற்றியே அவர்களது அக்கறை உள்ளது. சந்தைப்படுத்த முடியாது தேங்கிக் கிடக்கிற பொருட்களை உதவி என்ற பேரில் நம் மீது திணிப்பதற்கும் இயற்கையின் அனர்த்தங்கள் உதவுகின்றன.

மக்கள் விழிப்புடன் இல்லாத வரை அவர்களுடைய துன்பங்களிலும் லாபம் பெறுகிற கும்பல்கள் தட்டிக் கேட்பாரின்றி மக்களுக்குரிய பொருட்களைப் பகற் கொள்ளையிடும். எனவே மக்கள் தங்களை ஸ்தாபனப்படுத்திக் கொள்வதும் எல்லா உதவிகள் பற்றிய கணக்கு வழக்குகளைப் பற்றி கவனமாகவும் கண்டிப்பாகவும் கேள்விகளை எழுப்புவதும் இன்று மிகவும் அவசியமானது.

வெளிநாட்டு உதவி எனப்படுவதில் பெரும்பாலும் ஒரு பெரும் பகுதி கணக்குப் புத்தகங்கள் வழியே உதவி வழங்கும் நாட்டுக்கும் போய் விடுகிறது. மிஞ்சுவதையும் உள்ளூர்க் கொள்ளையர்கள் பறித்துக் கொண்டு போக விடக் கூடாது. உதவிப் பொருட்களதும் பணத்தினதும் விநியோகமும் பயன்பாடும் வெறுமனே நிர்வாகிகளிடம் விடப்படக் கூடாது. உதவி பெறும் மக்கள் அந்த அலுவல்களில் முக்கியமான பொறுப்புகளில் இருப்பது போக, ஒவ்வொரு விடயமும் பற்றி பகிரங்கமான கேள்வி எழுப்பி விசாரிக்கும் உரிமையைப் பாதிக்கப்பட்ட மக்கள் தமதாக்கிக் கொள்ள வேண்டும்



07-11-2004 அன்று மறைந்த தோழா சி. நவரத்தினத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் யாழ் ஆத்திசூடி வீதி கலைமகள் சனசமூக மண்டபத்தில் நடைபெற்றது. தீபச் சுடரை மூத்த தோழர் இ.கா. சூடாமணி ஏற்றுவதையும் பத்தனை கல்வியல் கல்லூரி விரிவுரையாளர் சி.இராஜேந்திரன் உரையாற்றுவதையும் சி.கா.செந்திவேல் தலைமை தாங்குவதையும்படத்தில் காணலாம்



14.12.2004ல் தே.க.இ.பேரவை பேராசிரியர் கைலாசபதியின் 22வது ஆண்டு நினைவுச் சொற்பொழிவை கொழும்பில் நடாத்தியது. அதற்கு சிவ.இராஜேந்திரன் தலைமை தாங்குவதையும் என்.ஆர்.வரதராஜ் நினைவுச் சொற்பொழிவு நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# மலையக மக்கள் வெகுஜனப் போராட்டங்களுக்கு தயாராக வேண்டும்

## புதிய–ஜனநாயக கட்சியின் கூட்டத்தில் அறைகூவல்

மலையகத்தில் இருக்கும் பாரம்பரிய தொழிற்சங்க, பாராளுமன்ற வாதிகளை மக்கள் நிராகரித்து வருகின்றனர். மலையகத்தில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டுவரும் புரட்சிகர மாற்று அரசியல் நடவடிக்கைகளின் மீது மக்கள் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். தொழிற்சங்களின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளது. மக்கள் பாராளுமன்றவாதிகள் மீது கேள்விகளை எழுப்பி வருகின்றனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மீதும் அதற்கு மாற்றெனக் கூறப்பட்ட மலையக மக்கள் முன்னணியின் மீதும் மக்கள் விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் செய்து வருகின்றனர். இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பனவற்றுக்கு மாறாக பரந்துபட்ட வெகுஜன இயக்கமொன்றை கட்டுவது பற்றி பரவலாக சிந்திக்கப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ஒருவர் பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கும், தோட்டத்துரைமாருக்கும் விருந்தளித்து தோட்டங்களில் இளைஞர்கள் தீவிரவாத அரசியலில் ஈடுபட்டுவருவதாகவும் 250க்கும் மேற்பட்ட மலையக இளைஞர்கள் ஆயுதப்பயிற்சி பெற்று தோட்டங்களுக்குள் ஊடுருவி இருப்பதாகவும் அவர்களிடம் கூறியுள்ளதுடன் அவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் கேட்டுக் கொண்டுள்ளார். இதன் மூலம் அரசாங்கம் மலையகத்தில் இராணுவ அடக் குமுறைகளை மேற்கொள்ளவும் இளைஞர்களை கைது செய்யவும், மலையகத்தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவும் அரசாங்கத்திற்கு அந்த அமைச்சர் உதவியுள்ளார். மலையகத்தில் அமைதியின்மையையும், பயத்தையும் பீதியையும் ஏற்படுத்தி அவர் போன்றவர்கள் மக்கள் விரோத அரசியலை முன்னெடுக்க விரும்புகின்றனர். இதனை மக்கள் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதைத் தெளிவாக கூறி வைக்க விரும்புகின்றோம்.

இவ்வாறு புதிய–ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி தோழர் இ.தம்பையா கட்சியின் மலையகப் பிராந்தியத்தின் 4வது மாநாட்டுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றும் போது தெரிவித்தார். இக்கூட்டம் அட்டன் சக்தி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

புதிய–ஜனநாயக கட்சியின் மலையகப் பிரதேச செயலாளர் தோழர் ச.பன்னீர் செல்வம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தோழர் தம்பையா தொடர்ந்து உரையாற்றுகையில்

தற்போது மலையகத்தில் இருக்கும் தொழிற் சங்கவாதிகளாலும் பாராளுமன்ற வாதிகளாலும் மக்களின் வாழ்வில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை என்பதை மக்கள் அவர்களின் அனுபத்தினூடாக கண்டறிந்துள்ளனர். அதனால் அடக்கப்படும் மலையகத் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்க அரசியல் கட்சிகள் தொழிற்சங்க

தொடர்ச்சி 11ம் பக்கம்




18–19ஆம் திகதிகளில் அட்டன் நகரில் நடை பெற்ற புதிய ஜனநாயாக கட்சியின் மலையகப் பிரதேச 4ஆவது மாநாட்டை யெட்டிய பொதுக் கூட்டம் சக்தி மண்டபத்தில் நடை பெற்ற வேளை தோழர்கள் சி.கா.செந்திவேல், இ.தம்பையா, பெ. சந்திரகுமார், சிவா ஆகியோர் உரையாற்று வதையும் தோழர் ச.பன்னீர்செல்வம் தலைமை தாங்குவதையும் வே.மகேந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# எஸ்.பிக்கு வழங்கிய தண்டனை

## ஆளும்வர்க்க உள் முரண்பாடாகும்

நுவரேலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான எஸ்.பி.திசாநாயக்கவிற்கு உயர் நீதிமன்றம் 2வருட கடுழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது. நீதிமன்றத்தை அவமதித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதனை அடுத்து நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பிலேயே அவருக்கு சிறைத்தண்டனை வழங்கப் பட்டுள்ளது. முன்பொரு முறையும் நீதிமன்றத்தை அவமதித்ததற்காக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. அப்போது அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து உயர்நீதிமன்றம் அவரை எச்சரித்து விடுதலை செய்தது.

அவர் 2000ஆம் ஆண்டு பொதுஜன ஜக்கிய முன்னணி அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தபோது நீதிமன்றங்களை இழுத்து மூடிவிடப்போவதாக பேசியிருந்தார். அப்போது ஐ.தே. கட்சியினர் அதற்கெதிராக கடுமையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டனர். அது பற்றி 2000 ஆண்டு மார்ச் மாதம் 3ஆம் திகதி பாராளுமன்ற த்தில் உரையாற்றிய ஐ.தே.கட்சியின் தலைவரும் எதிர்கட்சி தலைவரு மான ரணில் விக்கிரமசிங்கா எஸ்.பி.திசாநாயக்கவை பதவி விலக வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். நீதிமன்றத்தை அவமதித்ததற்காக மலேசியாவில் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் (சிறிய குற்றங்களாக இருந்தபோதும்) சிறையில் அடைக்கப்பட்டதை எடுத்துக்காட்டினார். ஸ்கொட்லாந்து சட்டமா அதிபரை அவமதித்ததற்காக மார்கிரட் தட்சர் பிரதமராக இருந்த காலத்தில் பிரிட்டனில் ஒரு அமைச்சர் அவரது பதவியை இராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் சுட்டிக்காட்டி இருந்தார்.

அதே ரணில் விக்கிரமசிங்ஹவும் ஐ.தே.கட்சியினரும் தான் தற்போது எஸ்.பி.திசாநாயக்கவிற்கு வழங்கப்பட்ட தண்டனை தீர்ப்பிற்கு எதிராகப் பேசுகின்றனர். ஆர்ப்பாட்டம் செய்கின்றனர். விடுவிப்போம் எனச் சூளுரைக்கின்றனர்.

ஏனெனில் இரண்டாவது முறையாக நீதிமன்றத்தை அவமதித்தபோது எஸ்.பி ஐ.தே.கட்சி அமைச்சராக மாறி இருந்தார் என்பதனாலாகும். 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பகிரங்க கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசும் போது நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசியிருந்தார். நீதிமன்றத்தீர்ப்பை நாய்த்தீர்ப்பு என்று கூறியிருந்தார்.

அவை நீதிமன்ற நடவடிக்கைகள் மீதானவிமர்சனமல்ல. ஆனால் தண்டனை தீர்ப்பு அவரையும் ஐ.தே. கட்சியையும் அரசியல் ரீதியாக பெரும் பாதிப்பிற்குள்ளாக்கியுள்ளது.

வர்க்க சமூகத்தில் நீதித்துறை மீயுயர்வானதாகவும் புனிதமானதாகவும் இருக்குமென்பதை கம்யூனிஸ்ட்டுகள் ஏற்றுக்கொள்வதில்லை. நீதித்துறை அரச யந்திரத்தை இயக்கும் இன் னொரு வர்க்க நிறுவனமாகும். சாதாரண ஜனநாயக உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கு சாதாரண மக்களுக்கு சில வேளைகளில் நீதிமன்றத்தலையீடு உதவுகின்றது. நீதிமன்றங்கள் சட்டங்களின் அடிப்படையில் இயங்குகின்றன. அச்சட்டங்களை ஆக்கும் பாராளுமன்றம் வர்க்க சமூகத்தின் நிறுவனமே. அதனால் நீதிமன்றம் அரச யந்திரத்தை பாதுகாக்கும் கடமையை கொண்டுள்ளது. அரசயந்திரம் நெகிழ்வாக இருக்கும் அளவிற்கு மட்டுமே நீதித்துறையும் நெகிழ்வுடையதாக இருக்கும். வர்க்கரீதியாக பாதிக்கப்படுபவர்களே பெரும்பாலும் நீதிமன்றத்தை அவமதிக்கும் குற்றங்களுக்கு ஆளாவதுண்டு .

இங்கு நீதித்துறை சட்டவாக்கத் துறையான பாராளுமன்றத்தின் உறுப்பினரான எஸ்.பிக்கு தண்டனை வழங்கியுள்ளதால் சிலர் இதனை சட்டவாக்கத்திற்கும் நீதித்துறைக்கு மிடையிலான போட்டியாக காட்ட முற்படுகின்றனர். சட்டவாக்கத்துறையின் கடமைகளை முன்னெடுக்க எஸ்.பி முயற்சி செய்து அதற்கு தடையாக நீதித்துறை இருந்திருந்தால் அவ்வாறு காட்ட முடியும் ஆனால் உண்மை அதுவல்ல. ஆளும் வர்க்க அதிகாரத்துவத்தினை கொண்டு செயற்பட்ட போதே அவ்வாறு நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசியுள்ளார் ஆளும்வர்க்கத்தை சேர்ந்த எஸ்.பி ஏன் இன்னொரு ஆளும் வர்க்க நிறுவனமான நீதிம ன்றத்தை அவமதித்தார்.



நீதிமன்றம் ஏன் ஆளும்வர்க்க பிரதிநிதியான எஸ். பிக்கு தண்டனை வழங்கியது போன்ற கேள்விகள் எழ இடமுண்டு. இதன் மூலம் நீதிமன்றம் வர்க்க பேதமில்லாமல் நடந்து கொண்டது என்று காட்டுவதற்கும் சிலர் முயற்சிக்கலாம்.

இது ஆளும் வர்க்கத்திற்குள் இருக்கும் முரண்பாடுகளாகும் என்றே விளங்கிக் கொள்ளப்படுகிறது. இது ஆளும் வர்க்கத்தின் நிறுவனங்களுக்கிடையேயும், தனிநபர்களிடையேயும் நிலவும் அதிகாரப் போட்டியின் காரணமாகும். ஐ.தே. கட்சி தலைமைக்கு எஸ். பி, பொ. ஜ. ஐ. முன்னணியில் இருக்கும் போது குற்றமாக தெரிந்த விடயங்கள் ஐ. தே. கட்சியில் இருக்கும் போது குற்றமாக தெரிய வில்லை. அதேபோது பொ. ஜ. ஐ. முன்னணியின் தலைமைக்கு எஸ். பி அன்று பேசியது குற்றமாகத் தெரிய வில்லை. இன்று பாரதூரமாக தெரி கிறது.

வெளிப்படையாக ஐ. ம. சு. மு. அரசாங்க எம். பிக்கள் சிலர் எஸ். பிக்கு வழங்கப்பட்ட தண்டனை குறித்து மகிழ்வடைவதாக காட்டிக் கொண்டாலும் அத்தீர்ப்பை இரத்து செய்ய பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவரப்பட்டால் நிச்சயமாக ஆதரிப்பார்கள். ஜே. வி. பி எம். பிக்களும் கூட எஸ். பிக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து கவலை தெரிவித்து ள்ளனர். இத்தண்டனைத் தீர்ப்பை ஐ.தே. கட்சியின் மீதான பழிவாங்கலாக காட்டி அரசியல் பிரசாரங்களை ஐ. தே. கட்சி செய்து வருகிறது. இதிலும் கூட ஐ. தே. கட்சியின் சாதாரண (வர்க்க ரீதியில் குறைந்தவர்) ஒருவருக்கு இவ்வாறான தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தால் ஐ. தே. கட்சி தலைமை இந்தளவுக்கு அலட்டிக் கொண்டிராது. எஸ். பி ஆளும் வர்க்கத்தை சேர்ந்தவர் என்பதனாலேயே அவருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து ஐ. தே. க. தலைமை கொதித்துப்பிரசாரம் செய்து வருகிறது.

கடந்த வருடம் அடிப்படை உரிமை வழக்கொன்றில் சட்டத்தரணியின் உதவியின்றி மனு தரும் ஒருவர் தானே வாதாடிய விதம் உயர் நீதி மன்றத்தை அவமதிப்பதாக இருந்ததாக குற்றஞ் சாட்டப் பட்டு அவருக்கு தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டது.

அவர் சிறைக்கு கொண்டு செல்லப்படும் வழியில் சிறை அதிகாரிகளால் கடுமையாக தாக்கப்பட்டார். இது சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல மனித உரிமைகள் அமைப்புகளின் கவனத்தை ஈர்ந்த அளவிற்கு ஐ. தே. கட்சியினதோ ஐ. ம. சு முன்னணியினதோ கவனத்தை ஈர்க்க வில்லை. ஏனெனில் பாதிக்கப்பட்டவர் ஒரு சாதாரண பிரஜையாவார்.

அத்துடன் ஒரு பொலிஸ் நிலையத்தில் சித்திரவதை செய்யப்பட்ட சாதாரண கைதிக்கு வழங்கப்பட்ட நட்டஈட்டுத்தொகைக்கும் ஒரு அமைச்சருக்கு வழங்கப்பட்ட நட்ட ஈட்டுத்தொகைக்கும் பாரிய வித்தியாசங்களை காண்கிறோம். இதுவும் நீதித்துறையின் கடைமைதான் இவ் வாறு நீதித்துறை மீது பல விமர்ச னங்களை முன்வைக்க முடியும். சில நீதிபதிகளின் பிறழ்வான நடத்தைகள் பற்றியும் மக்கள் அனைவ ருக்கும் தெரியும். ஒரு சாதாரண பிரஜையின் மீது தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டால் அதனை செயலற்ற தாக்க பாராளுமன்றத்தில் பிரேரணை கொண்டு வரபடமாட்டாது. சட்டங்களாக்கப்படமாட்டாது.

ஆனால் எஸ். பி. யின் வழக்கும் தண்டனை தீர்ப்பும் ஆளும் வர்க்கத்தினுள் உள்ள முரண்பாடாகும். அவற்றை அவ்வர்க்கம் இலகுவாக தீர்த்துக் கொள்ளும். அதனை பற்றி ஆளப்படும் மக்கள் கவலைப்படத் தேவை இல்லை மக்கள் மீது அவ்வாறான தீர்ப்பு வழங்கப்பட்டால் ஆளும் வர்க்கம் தலையிடப்போவதில்லை அதனை நியாயப்படுத்தும்.

**நமது விசேட நிருபர்**

எஸ். பியின் தீர்ப்பை எதிர்த்து செய்யப்படும் நடவடிக்கைகள் கூட ஆளும் வர்க்கத்திற்கு அளவானது என்பதை அவதானிக்க முடியும். மக்களை பேரணியில் கலந்து கொள்ளச் செய்வது மக்களை ஐ. தே. கட்சியின் பக்கம் வைத்திருப்பதற்கான முயற்சியாகும். நீதித்துறையின் மீது நம்பிக்க்க இழக்கும் வகையில் போராட்டங்கள் எதுவும் செய்யப்படவில்லை. செய்யப்படவும் மாட்டாது.

உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக உயர்நீதிமன்றத்திடமே மீளாய்வு மனுவை சமர்ப்பித்தல் பொதுநலவாய நாடுகளினது பாராளுமன்ற சபையிடம் முறையிடுவது ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்ற சபையிடம் முறையிடுவது சர்வதேச நீதிமன்றத்திடம் முறையிடுவது போன்ற ஆளும் வர்க்க எதிர்ப்பு நடவடிக்கைகளிலேயே ஐ.தே.கட்சி கரிசனை கொள்கிறது. பாராளுமன்றத்தில் பிரேரணையை நிறைவேற்றி குற்றத்தீர்ப்பை செல்லுபடியற்றதாக்குவதற்கான முன்னோடி நடவடிக்கைகளாகவே அவை செய்யப்படுகின்றன மக்களை அளவாக அணிதிரட்டுவது கூட அதனை இலக்காக கொண்டதே ஆகும். வேறு அர்த்தமுள்ள மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுத்து மக்கள் அவர்கள் பாதிக்கப்படும் போது அவற்றை முன்மாதிரியாக கொள்ளக்கூடாது என்பதில் ஆளும் வர்க்கம் கவனமாகவே இருக்கிறது என்பதே உண்மையாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
පුදිය පූමි
Puthiya Poomi
சுற்று12 ஜனவரி 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 76

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2435117,பாக்ஸ்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## மறுகாலனியாதிக்க எதிர்ப்பும் சுயநிர்ணய உரிமை மறுப்பும்

அமெரிக்கா தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளுக்கு எதிராக செயற்படுகிறது என்பதை மக்களின் சார்பில் வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் அமெரிக்க இராணுவ ஆய்வாளர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து இலங்கை இராணுவ முகாங்களையும் காவலரண்களையும் பார்வையிட்டு பாதுகாப்பு நிலவரங்களை ஆராய்ந்துள்ளமைக்கு கண்டனத்தை தெரிவித்துள்ளது.

அமெரிக்க இராணுவ ஆய்வாளர்களின் இந்த விஜயம் அமெரிக்க உதவியுடன் மீண்டும் யுத்தத்தை நடத்துவதற்கான இலங்கை அரசின் தயாரிப்பு நடவடிக்கையில் ஒரு அம்சமாக கருதியே எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் தமிழ் மக்கள் மீதும் நேரடியாகவும் மறைமுகமாகவும் பல கண்டனங்களை விடுத்துவந்துள்ளது. அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தொடர்ந்து அங்கு விஜயம் செய்தும் வருகின்றனர்.

யாழ்ப்பாண நூல்நிலையத்தில் அமெரிக்க தகவல் நிலையமொன்று அமைக்கப்படுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகள் மக்கள் சார்பான எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டது.

சமாதான நடவடிக்கைகளில் அமெரிக்கா உட்பட ஏனைய ஏகாதிபத்திய சக்திகள் தலையிடுகின்றபோதும் தமிழ்மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதிசெய்வதற்காக அவை தலையிட வில்லை என்பது தமிழ்மக்களின் தரப்பில் வெளிப்படையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

ஏகாதிபத்திய நாடுகளின் தலையீட்டினால் சிங்களமக்கள் பாதிக்கப்படவுள்ளதாகவும் தமிழ்மக்களுக்கு சிறப்புரிமைகள் கிடைக்கவிருப்பதாகவும் இலங்கையின் பேரினவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வருகின்றனர். சமாதான நடவடிக்கைகள் என்ற பேரிலேயே அவை தலையிடுகின்றன என்பதனால் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவும், சமாதானவழிகளில் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு எதிராகவும் இப்பேரினவாதிகள் பிரசாரம் செய்கின்றனர்.

தமிழ்மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வெவ்வேறு தளங்களில் பிரசாரம் செய்யப்படுகின்றது. தமிழ்மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் உரிமைகளை மறுத்து மீண்டும் ஒரு யுத்தத்தை திணிக்க ஏகாதிபத்தியம் முயற்சிப்பதாக பிரசாரம் செய்யப்படுகிறது. சமாதான நடவடிக்கைகளினூடாக நாட்டை பிரிப்பதற்கு ஏகாதிபத்தியம் உதவுவதாக சிங்களமக்கள் மத்தியில் பிரசாரம் செய்யப்படுகிறது.

சிங்கள மக்களுக்கோ தமிழ்மக்களுக்கோ உதவுவதற்காக ஏகாதிபத்தியங்கள் தலையிட வில்லை. மாறாக அவற்றின் ஏகாதிபத்திய அக்கறைகளை நிலைநாட்டிக் கொள்ளவே அவை தலையிடுகின்றன. அவை தலையிடுவதற்கான காரணம் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருப்பதற்கேயாகும். தற்போது சமாதான நடவடிக்கைகளுக்கூடாகவும் தலையிடுகின்றன. முன்பு யுத்தத்தை நடாத்த இலங்கை அரசிற்கு உதவுவதன் மூலம் தலையிட்டன. இனியொரு யுத்தம் தொடங்கினால் யுத்தத்திற்கு உதவுவதற்கு மேலாக யுத்தம் செய்வதிலும் ஏகாதிபத்தியம் இலங்கையில் அப்பட்டமாக தலையிடக் கூடும். உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்நாட்டில் வாழும் அனைத்து மக்களின் அபிலாஷைகளையும் பாதுகாப்பதற்கான அடிப்படைகளை கொண்டிருக்க வேண்டும். தமிழ்மக்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலிருந்து ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்னெடுக்க முடியாது.

ஜே.வி.பி, ஹெல உறுமய என்பவற்றைக் கொண்ட தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் 2005 ஆம் ஆண்டை மறுகாலனியாதிக்க எதிர்ப்பு ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளது. அதில் இந்நாட்டில் வாழும் தமிழ்மக்களை இணைத்துக் கொள்வதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் கிடையாது. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சிங்கள பௌத்தர்களை மட்டும் அணி திரட்டும் குறுகிய அரசியல் நோக்கத்தை கொண்டுள்ளது. இலங்கை மீது மறுகாலனியாதிக்கம் அல்லது ஏகாதிபத்திய பிடி இறுகுவதற்கான காரணம் தேசிய இனப்பிரச்சினை தான் என்பதை ஏற்க மறுப்பது சரியான தேசப்பற்றின் அடிப்படையுமல்ல. உண்மையான ஏகாதிபத்திய அல்லது மறுகாலனியாதிக்க எதிர்ப்பும் அல்ல. உண்மையான காரணத்தை அடிப்படையாகக் கொள்ளாமல் அனைத்து மக்களையும் இணைக்காமல் முன்னெடுக்கப்படும் ஏகாதிபத்திய எதிர்ப்பு அல்லது மறுகாலனியாதிக்க எதிர்ப்பு ஏகாதிபத்தியத்தையும் மறுகாலனியாதிக்கத்தையும் இங்கு நிலையாக்குவதற்கே துணைபுரியும். இதேபோன்று தவறுகள் பிரிட்டிஷ் காலனியாதிக்க காலத்திலும் நடந்தன. தமிழ்மக்களின் காலனியாதிக்க எதிர்ப்பும் சிங்கள முஸ்லிம் மலையகத்தமிழ் மக்களின் காலனியாதிக்க எதிர்ப்பும் சுதந்திரத்திற்கான தேசிய விடுதலைப் போராட்டம் என்ற அடிப்படையில் ஒன்றிணைக்கப்படவில்லை. குறிப்பாக நடேசஐயரின் தலைமையிலான போராட்டங்களும், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸின் போராட்டங்களும் இலங்கையின் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இணைக்கப்பட்டு அனைத்து இலங்கையர்களினதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டமாக முன்னெடுக்கவில்லை. அந்நிலை இன்றும் தொடர்வதாகவே தெரிகிறது.

சிங்கள மக்கள் மத்தியிலிருந்து தமிழ்மக்களை இணைத்துக் கொள்வதற்கான முன்னோடி நடவடிக்கைகள் மட்டுமன்றி தமிழ்மக்கள் மத்தியிலிருந்தும் அவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டம் என்பது ஏகாதிபத்தியத்திற்கும் இந்திய மேலாதிக்கத்திற்கும் எதிரானது போன்று சிங்கள மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டம் என்பது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை போராட்டத்தை ஆதரிப்பதுமாகும். நாட்டின் பிரதான பிரச்சினையான தேசிய இனப்பிரச்சினையில் சுயநிர்ணய உரிமையை மறுத்து நின்று கொண்டு உண்மையான மறுகாலனியாதிக்க எதிர்ப்பை முன்னெடுக்க முடியாது என்பதைச் சிங்கள மக்கள் உணரவேண்டும். அவ்வாறே சிங்கள மக்களின் ஆதரவு இன்றி ஏகாதிபத்திய பிராந்திய மேலாதிக்கத்தை எதிர்க்க முடியாது

என்பதைத் தமிழ்த் தேசிய இனமும், முஸ்லீம், மலையகத்தமிழ் தேசிய இனங்களும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம்.

-ஆசிரியர் குழு-

## மக்களின் உயிர்களை மதிக்காத அரசு

மக்களைக் காப்பதே அரசின் கடமை. கடந்த மூன்று தசாப்தங்களாக நாட்டின் இறைமைக்காகவும் ஒருமைப்பாட்டுக்காகவும் மக்களைக் கொல்வதே அரசின் கடமை என்பது நடைமுறையாகிவிட்டது.

1977க்குப்பின் வந்த திறந்த பொருளாதாரத்தின் கீழ் மக்களின் நலன் காக்கும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் கூட தனியார் மயமாகி விட்டன. சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, வர்த்தகம், ஊடகம் எனப் பல துறைகளும் அரசிடமிருந்து கை நழுவிட்டன. எனவே அரசுக்கும் மக் கள் நலன் என்பதற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்ற மனப்பாங்கு வளர்ந்துவிட்டதில் வியப்பில்லை. அப்பலோ, நவலோக முதலாளிகள் தொடக்கம் சர்வதேசப் பாடசாலைகள், தனியார் போக்குவரத்து, தனியார் ஊடகங்கள் வரை இறுதியாக எல்லாம் தனித்தனி மகாராஜாக்களின் தயவிலேயே மக்கள் என்றாகி விட்ட பெரும் சோகம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் ஜனாதிபதி தொடக்கம் பல அமைச்சர்களைக் காணவேயில்லை. பிரதமர் மஹிந்தராஜபக்ஸ தென்னிலங்கையர் என்பதனால் அவரது முகத்தில் சோகமேனும் தெரிந்தது, கிழக்கின் அமைச்சர் அதாவுல்லா வெளிநாட்டில் சுற்றுலா. தமிழ் பாராளுமன்ற உறுப்பினரில் சிவாஜிலிங்கம், தங்கேஸ்வரி, கஜேந்திரகுமாரைத் தவிர மற்றவர்களைக் காணவேயில்லை. சம்பந்தன் முகத்தில் சலனம் எதுவுமேயில்லை.

முல்லைத்தீவில் கடலோரம் வாழ்ந்த மக்கள் ஏற்கனவே ஓடிக்களைத்த வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்த மக்கள். யாழ்ப்பாணத்திலே நாகர் கோவில், செம்பியன் பற்று, இன்பருட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை பருத்தித்துறை எனக் கடலோரம் வாழ்ந்து தம் கதைகளை முடித்த மக்கள். போரின் அவலங்களையும், இராணுவ, கடற்படை அட்டூழியங்களையும் அன்றாடம் அனுபவித்துச் சலித்த மக்கள், திருமலைக் கடலோரம் சின்னக் கிண்ணியா, நிலாவெளி, மூதூர் மக்கள் இனக்குரோதங்களில் சாவுகளையும் சண்டைகளையும் வாழ்நாளெல்லாம் சந்தித்தும் வாழவிரும்பிய மக்கள், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மக்கள் ஆண்டாண்டு காலமாக திட்டமிட்ட குடியேற்றங்கள், இன ஒடுக்கல்களால், சூறாவளி, புயல், வெள்ளம் என அழிவுகளோடு நிச்சயமற்ற சீவிய மென்றபோதும் மீண்டும் துளிர்த்த மக்கள், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பலாங்கொடைச் சிங்கள மக்கள் பள்ளநிலங்களில் அரசுகளின் அக்கறையற்ற நடத்தைகளில் கிராமங் களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சாதாரண ஏழை எளிய மக்கள், விவசாயிகள் கடற்தொழிலாளர்கள் கொழும்பு, களுத்துறை மட்டக்குளி வரை வாழும் மக்கள், கடற்கரை யோரம் தம் தொழிலோடு வாழ்ந்த மக்கள், தம் விருப்பப்படியே கொட்டில் களை அமைத்துக் குடியேறிய மக்கள், காலாறக் கடலோரம் நடந்த மக்கள் விளையாடிய சிறுவர்கள் என எல்லா மக்களையும் அதிகாலை 6.58 மணி க்கு 1300 மைல்களுக்கப்பால் சுமத்திராவில் தோன்றிய சமுத்திரத்தின் கீழான பூகம்பம் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் சுனாமி என்ற இராட்சதக் கடலலைகளாக வந்து அழித்து முடித்து விட்டதே! பல்லாயிரம் மக்களை சிலகணப் பொழுதுகளில் தன்னோடு கூட இழுத்துச் சுழற்றி அவர்களின் கதையைத் தொலைத்துவிட்டதே! குடும்பம் குடும்பமாக- கிராமம் கிராமமாக- பெண்கள் குழந்தைகளாக- வயோதிபர் வருத்தக்காரராக- உழைப்பாள மக்களாக எல்லோரையும் காவு கொண்டு போய் விட்டதே! ஒவ்வொரு நாளும் இறந்தோரின் எண்ணிக்கை ஆயிரம் ஆயிரமாக அதிகரித்த வாறே செல்கிறதே! முடிவேயில்லாமல் குடி முழுகிக் கொண்டே போகிறதே!

**-செண்பகன்-**

காலிச் சிங்களக் கிராமங்களில் கூட நிவாரணப்பணிகள் சென்று சேரவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்கள் தலையடையாளமே அங்கே தெரியவில்லை. ஜே. வி. பி யினர் கூட தலைமறை வென்றால் ஏனைய பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் பற்றிச் சொல்லவே தேவையில்லை. அம்பாறையில் ரவூப் ஹக்கீம் உட்படச் சிலரையும் திருமலையில் சிவாஜிலிங்கமும் நிற்கின்றனர். எனினும் எம்பிமாருக்கு எத்தனை சோலி இருக்கும். அதுவும் புதுவருடம் பிறக்கும் வேளையில் அவர்களை யாரும் தேடுதல் கூடாது. அவர்களும் சிலவேளை காணாதோர் பட்டியலில் போயிருக்கலாம்.

மறப்போம் மன்னிப்போம். இவையொரு புறம் இருக்கட்டும். நாம் எழுப்பும் ஒரே ஒரு பிரதான கேள்வி தகவல் வழங்கும் அரச ஊடகமான ரூபவாஹினி, ஐ.ரி.என், ஐ சனல் ஆகியன மட்டக்களப்பில் அனர்த்தம் நடந்து 2 மணி நேரத்தின் பின்பே செய்தியை உறுதிப்படுத்தி வெளியிட்டதே! பிரதிப்பணிப்பாளர் சொல்கிறார். இரு செய்திச் சேரிப்பாளரில் ஒருவர் வெளிநாட்டில், மற்றவர் தனது உயிரைப் பாதுகாப்பதில் இருந்தாரென்று. அவ்வளவுக்கு அரச ஊடகத்தின் அசமந்தம். ஒரு நாட்டுக்குள் நடந்த சம்பவத்தையே செய்தியாக தெரிவிக்க இருமணி நேரம் எடுத்ததெனின் இந்த அரச வானொலியும், தொலைக் காட்சியும், அரசும் இருந்தென்ன செத்தென்ன?

எல்லாம் உலகமயம் என்று உச்சரித்து உலகெல்லாம் சுற்றிவரும் ஜனாதிபதி, அமைச்சர்களை, பாராளுமன்றப் படையணி கொண்ட அரசாங்கம் அதற்கு ஒரு நாடும், மக்களும் ஒரு கேடா? உலகக் கிராமம், இன்ரநெற் உலகம், மின்னியல் யுகம் என்று பீற்றித் திரிந்த அரசு இயந்திரத்திற்கு சுமத்திரா வில் வெடித்த பூகம்பம் பற்றி இலங்கை அரசுக்கோ இலங்கை மக்களுக்கோ தெரிவிக்க அவசரமும் அவகாசமும் இருக்கவில்லை. எல்லாம் உலகமயம் என்பது உலகத்தின் மொத்த வியாபாரிகளுக்கே தவிர பொதுமக்களுக்கல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்ததே!

பசுபிக் பிராந்தியத்தியத்தில் உள்ள நாடான அவுஸ்திரேலியா கூட சுனாமி பற்றிய தகவல்களைஅறிய முடிந்தது. அமெரிக்காவுக்கு தெரிந்திருந்திருந்தது. சுனாமி பற்றிய எச்சரிக்கை பற்றித் தெரிவதற்கும் குறைந்த பட்சம் இந்தியா, இந்தோனிசியா, இலங்கை உட்பட இந்து சமுத்திர நாடுகள் எதுவும் இந்த வலையமைப்பில் அங்கத்துவம் பெறவில்லையென்று அமெரிக்க விஞ்ஞானி முறைப்படுவது கூடஎமக்குச் சுடவில்லையா?

இந்தியாவில் அணுவிஞ்ஞானி அப்துல் கலாம், பொருளாதார அறிஞர் மன்மோகன் சிங் அங்கம் பெறும் இந்திய அரசுக்குக் கூட இவை முற்கூட்டித் தெரியவில்லையெனில் தென்னாசிய மக்களின் உயிர்களை என்னவென்று நினைத்து அமைதி காத்தார்கள்?

குற்றவியல் சட்டத்தில் ஓர் கூறு உள்ளது. அது என்னவெனில் 'செய்யாமை' என்ற நடத்தைக்கும் ஒருவர் குற்ற வாளியாக்கப்படலாம். எனவே பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிரைக்காக்க வேண்டிய கடப்பாட்டிலிருந்து தவறிய இலங்கை அரசு இயந்திரத்துக் கெதிரான மக்கள் இயக்கத்தை ஏற்படுத்த வேண்டும். அரசும் அரசாங்கமும் தண்டிக்கப்பட வேண்டும்.

மக்களின் வெகுஜன எழுச்சியை உருவாக்குவதன் மூலம் மட்டுமே பலி கொள்ளப்பட்ட பல்லாயிரம் உயிர்களுக்கு நாம் பதில் சொல்லமுடியும்.

## பிரதமரின் முதலைக்கண்ணீர்

பிரதமர் வடக்கு-கிழக்கின் தேவைகளைப் பற்றி அக்கறை காட்டவில்லை என்று மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் முறைப்பட்டது சர்வதேசமட்டத்திலும் செய்தியாக வெளிவந்ததால் கடற்பெருக்கால் கிடைக்க இருக்கிற அந்நியக் கொடைகள் பாதிக்கப்படலாம் என்றோ என்னவோ செவ்வாய்க்கிழமை பிரதமர் மிகவும் கவனமாக பிரதேச வேறுபாடு இல்லாமலும் இன வேறுபாடு இல்லாமலும் சமமான முறையில் உதவி பங்கிடப்படும் என்று அறிவித்துள்ளார். விடுதலைப் புலிகள் வடக்கு கிழக்கிற்கும் குறிப்பாகத் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குமான உதவிகளைத் தம்மிடமே நேரடியாக வழங்குமாறு உலக நாட்டு உதவி நிறுவனங்களிடம் கேட்டுள்ளனர். கடந்த கால அனுபவத்தை வைத்து நோக்கும் போது இது நியாயமானதாகவே தெரிகிறது. ஒரு மாதம் முன்பு மட்டக்களப்பு அம்பாறைப் பகுதி மக்கள் வெள்ளப் பெருக்காற் பாதிக்கப்பட்ட போது, அரசாங்கம் அவர்களைப் பற்றி எதுவித அக்கறையுங் காட்டவில்லை. ஒரு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் எடுத்தளவு முயற்சியைக் கூட ஒரு அரசாங்கம் எடுக்கவில்லை. அதன் பொருளென்ன?

செவ்வாய்க்கிழமை பிரதமரும் ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸவும் கிழக்கு மாவட்டங்களுக்கு தகவல்களைப் பெற்றுவரச் சென்றார்கள். அங்கு போய் எல்லாருக்கும் சமமான முறையில் உதவிகள் வழங்கப்படும் என்று கூறியுள்ளனர். அரசாங்கம் கிழக்குப் பகுதி பற்றி அக்கறை காட்டவில்லை என்பது அரச ஊடகங்களது நடத்தை மூலம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. அரசாங்கத்தினது பேரினவாத நிலைப்பாடு உலகறிந்த விடயம். எனினும் இவ்விடயத்தில் அப்பட்டமான பாரபட்சம் இருப்பதாகத் தெரியவந்தால் அவசியமான புனர்நிர்மாண நிதி உதவிகளுக்குத் தடை ஏற்படும் என்று நினைத்தே இந்த நாடகம் நடந்தது. அல்லாமல் பிரதமர் போய்ப் பார்த்து அறிய வேண்டிய தேவை இருக்கவில்லை. நிச்சயமாக விமல் வீரவன்சவுக்கு ஒரு தேவையுமில்லை. திருகோணமலையையோ மட்டக்களப்பையோ யாழ்ப்பாணத்தையோ பற்றிய தகவல்களை உண்மையிலேயே அவர்கள் அறிய விரும்பியிருந்தால் அப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலமும் அரச அதிகாரிகள் மூலமும் பொதுசன அமைப்புக்கள் மூலமும் தொலை பேசி தொலைமடல் போன்ற பல வழிகளிற் பெற இயலும்.

மட்டக்களப்புக்கு உதவி போகாததால் 50,000 பேரளவில் விடுதலைப் புலிகளது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போயுள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. இந்த நிலைமைக்குப் பிரதமரின் விளக்க மென்ன?

இயற்கையின் சீற்றத்தையும் தமிழ் மக்களைப் பணிய வைக்கும் கருவியாகப் பாவிக்கப் பேரினவாதிகள் தயங்க மாட்டார்கள். இன்றைய நெருக்கடியில் அரசாங்கத்தின் உதாசீனமான போக்கு தமிழ் மக்களிடையே அரசாங்கத்தின் மீது எதுவிதமான நம்பிக்கையுமே இல்லாமற் செய்யவே உதவும். அரசாங்கத்துக்கு அது பற்றிய கவலை உண்டோ இல்லையோ இப்போது வெளி நாடுகளுக்கு முன்னால் ஒருவகை நாடகம் ஆடும் தேவை உள்ளது.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தேசியத்தை வலுப்படுத்துவது பற்றி

-இமயவரம்பன்-

சிங்கள வெகுஜனங்களது ஆதரவு இல்லாவிடினும் புரிந்துணர்வையாவது வென்றெடுப்பதற்கு உகந்த மூலோபாயங்கள் தமிழ் விடுதலைப் மீது அடக்கு முறைப் போரைத் தொடுக்கும் வரை, இரண்டு சமூகங்களிடையிலும் பகைமை இருக்கவில்லை.

களை உருவாக்குவதில் ஒத்துழைத்தனர்.

1980களில் ஒவ்வொரு தமிழ்த்தேசிய இயக்கமும் தமிழருக்கும் முஸ்லிம் னப்படுத்த முஸ்லிம்களின் கவலைகளைப் பாவிக்க விரும்பியவர்களே ஆவர். இந்திய ஆளும் வர்க்கம், சிங்களப்பேரினவாதிகள், அரச படை வைத்திருக்க உதவுகிற தரகு வேலைகளை நடத்துகிறார்கள். மலையகத்திற் புதிதாக உருவாகி வளரும் நடுத்தர வர்க்கத்தினரி

# முஸ்லீம்- மலையகத் தமிழ்த் தேசிய இனங்களுடன் உறுதியான ஐக்கியத்தைப் பேண வேண்டும்

போராட்ட சக்திகளின் அரசியல் அணுகுமுறையில் ஒரு கணிசமான மாற்றத்தை வேண்டி நிற்கின்றன. விடுதலைப் போராட்டம் பேரினவாதச் சக்திகட்கும் அவற்றுக்கு இரையாகும் சிங்கள வெகுசனங்கட்கும் இடையிலான வேறுபாட்டுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். தமிழ்த் தேசிய அரசியலிற் பாராளுமன்ற அரசியல் நலன்கள்

**தமிழ்த் தேசியவாதத் தலைமைகள் இழைத்து வந்த தவறுகளை முதலீடாகக் கொண்ட முஸ்லீம் தலைமைகள் பதவிகளுக்குப் பேரம் பேசிக் கொண்டன**

ஆதிக்கஞ் செலுத்தும் வரை, பிற சமூகங்களுடனான பரஸ்பர புரிந்துணர்வுக்கு வாய்ப்புக் குறைவாகவே இருக்கும். எனவே, சிங்கள மக்களிற் கணிசமானோரை வென்றெடுப்பதென்பது, பெருவாரியான மக்களிடமிருந்து ஆளும் பேரினவாத மேட்டுக்குடிகளைத் தனிமைப்படுமாறு வர்க்க ஒடுக்கு முறைப் பிரச்சனைகளின் அடிப்படையில் மக்களை ஒன்றுபடுத்துகிற வெகுசன அரசியல் வேலையை வேண்டி நிற்கிறது. இதைச் சாதிப்பதற்குச், சிங்களவரிடையேயும் வடக்கு கிழக்குப் பிரதேசத்திலும் உள்ள நேர்மையான இடதுசாரி, முற்போக்கு அரசியற் சக்திகளது ஆதரவு இன்றியமையாதது.



முழு நாட்டிலும் குறிப்பாக வடக்கு கிழக்கிலும் தமிழருக்கும் முஸ்லிம்கட்குமிடையிலான உறவு கசப்படைந்ததற்குப் பல காரணங்கள் உள்ளன. 1915ல் முஸ்லிம் விரோதக் கலவரத்திற்குப் பங்களித்ததற்காக பிரித்தானியக் கொலனி ஆட்சியாளர்களாற் தண்டிக்கப்பட்ட சிங்களப் பேரினவாதிகள் மீது பரிவு காட்டுமாறு பிரித்தானிய ஆட்சியாளர்களிடம் பொன்னம்பலம் ராமநாதன் மன்றாடியமை, நிலவுடமை - முதலாளிய வர்க்கத்தினரிடையே தமிழ் - முஸ்லிம் உறவிற்குத் தீங்கு விளைவித்தது. எவ்வாறாயினும், அரசு, தமிழ்த் தேசிய இனத்தின் இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு சமஷ்டிக்கான தமிழரசுக் கட்சிக் கோரிக்கை, பேரளவிலேனும் தமிழர்களுடன் முஸ்லிம்களையும் மலையகத் தமிழரையும் ஒரு மொழி வழித் தேசிய அடையாளத்தினுள் சேர்க்க முனைந்தது. முஸ்லிம்களின் வாழ்வின் புலனீடான நிலைமைகளை அத் தலைமை அனுசரித்துப் போவது ஒரு புறமிருக்க அடையாளங் காணவே தவறியமை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது. தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றத் தேர்தல் சந்தர்ப்பவாதம் கிழக்கின் முஸ்லிம்களிடையிலிருந்து சந்தர்ப்பவாத முஸ்லிம் தலைவர்கள் உருவாவதை ஊக்குவித்தது. பாராளுமன்ற அரசியல் வாதிகட்குத் தத்தமது அதிகாரங்களைப் பேணுகிற தேவை காரணமாக, முக்கியமான சமூகப் பிரச்சனைகட்குப் பதிலாக இன அடையாளங்களின் அடிப்படையில் பிரிவுகள் ஏற்பட நேர்ந்தது.

முஸ்லிம்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமது தனித்துவமான இன அடையாளத்தை வற்புறுத்தியிருந்த போதும், பொதுப்படத் தமிழ்த் தேசியவாதிகள் தாம் வகுத்த மொழிவாரி அடையாளம் தன்னளவிலேயே தமிழ்ப் பேசும் மக்கள் அனைவரையும் உட்படுத்துகின்றது என்று பாவனை செய்ய விரும்பினர். 1976ல் தனியான ஒரு தமிழ் அரசு கோரப்பட்ட போது, முன்னைய சமஷ்டிக் கோரிக்கையின் போது போலவே, வடக்கு-கிழக்கின் முஸ்லிம்களது ஆதரவு உண்டு என்று ஊகித்த போதும், முழுநாட்டிலுமோ வடக்கு-கிழக்கிலோ இருந்த முஸ்லிம்களது நலன்கள் பற்றிக் கவனங்காட்டப்படவில்லை. முஸ்லிம்களும் பேரினவாதப் பாகுபாட்டிற்கும் ஒடுக்கு முறைக்கும் உட்பட்டிருந்தனர் என்பதும் அவர்களும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் பாதிக்கப்பட்டனர் என்பதும் பல முஸ்லிம்களைத் தமிழர் விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கத் தூண்டியதுடன் பெருந்தொகையில் இல்லாவிடினும் அந்த இயக்கங்களிற் சிலவற்றில் இணையவும் செய்தது.

தமிழர் விடுதலை இயக்கங்களுள்ளிருந்த சனநாயக விரோதப் போக்குக்கள் தமிழ் மக்களிடையிலான அரசியற் பணிகளில் அதிகாரப்பாங்கான அணுகுமுறைக்கு வழிகோலிய விதமாகவே முஸ்லிம்களுடனான உறவுகளிலும் அவ்வாறான உணர்வுக் கூர்மையற்ற போக்கிற்கே இட்டுச் சென்றன. இது முதலில் விடுதலைப் போராட்டம் பற்றிய அக்கறையற்ற முஸ்லிம் பிரிவினரினருடன் முரண்பாடுகட்கு வழியமைத்தது. தமிழரிடையே கருத்து முரண்பாடுகள் பற்றிக் காட்டப்பட்ட பொறுதியின்மை முஸ்லிம்கட்கும் விஸ்தரிக்கப்பட்டதன் விளைவாக அனுதாபமாக இருக்கக் கூடிய மக்களிடையிலும் வெறுப்புத் தோன்றலாயிற்று. அதே வேளை, முஸ்லிம்களிடையேயிருந்த சந்தர்ப்பவாதிகள், பேரினவாத விஷமிகளுடன் இணைந்து, தமிழ்ப் போராளிகளையும் அவர்களது ஆதரவாளர்களையும் தாக்கும் நோக்கிற்காக அரசாங்கத்தால் ஆயுத பாணிகளாக்கப்பட்ட முஸ்லிம் ஊர்காவற்படை கட்குமிடையிலான முரண்பாடுகளை மிகவுந் தவறாகவே கையாண்டன. 1987 முதல் 1989 வரையிலான காலத்தில் 'இந்திய அமைதி காக்கும் படை' சம்பந்தப்பட்டதன் மூலம் பிரச்சனைகள் மேலும் சிக்கலாயின. முஸ்லிம்களைப் பகைவர்களாக நோக்குவது இந்தியப் படையினரில் சிலருக்கு இயல்பாகவே அமைந்த ஒன்றானதால் முஸ்லிம்கட்கெதிரான தமிழ்ப் போராளிகளின் தாக்குதல்களுக்கு அவர்களது செயலூக்கமான ஆதரவு இல்லாத போது, அவர்களுடைய ஆசிகளாவது இருந்தன.

பெருந்தொகையான முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதை நியாயப்படத்துவோர் சிலர் என்றும் போல் இன்றுமுள்ளனர். வருத்தத்துக்குரியது என்னவெனில், முஸ்லிம்களின் படுகொலை தொடர்பாக ஒரு தமிழர் விடுதலை இயக்கம் இன்னொன்றைக் குற்றஞ் சாட்டத் தயங்காத அதே வேளை, எந்தவொரு இயக்கமுமே இரு சமூகங்கட்குமிடையிலான உறவைச் சீர்ப்படுத்த நடவடிக்கை எடுத்ததில்லை என்பதாகும்.

தமிழருக்கும் முஸ்லிம் கட்குமிடையிலான முரண்பாடுகளையும் தமிழ்த் தேசியவாத நோக்கங்கள் பற்றி முஸ்லிம் சமூகத்தினுள்ளிருந்த அச்சங்களையும், முஸ்லிம் தேசிய வாதத்தை முன்னெடுத்த ஒரு புதிய முஸ்லிம் அரசியற் தலைமை தனக்குச் சாதகமாக்கிக்கொண்டது. முஸ்லிம்களது, குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட முஸ்லிம்களது, நியாயமான கவலைகள் பற்றி அவர்கள் கவனங் காட்டினர். ஆனால் உண்மையில் அவர்கள் அரசாங்கப் பதவிகளைப் பெறுவதற்காகப் பேரம் பேசவே தமது அரசியல் வலிமையைப் பயன்படுத்தினர். அதே வேளை முஸ்லிம்கட்கு எதிரான மன விகாரங்களின் விளைவாக, 1990ல், விடுதலைப் புலிகள் வடக்கிலிருந்து முஸ்லிம்களை விரட்டிய வரலாற்றுத் தவறைச் செய்தனர்.


பிரதானமான முரண்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பாக விடுதலைப்புலிகளும் முஸ்லிம் தலைமையின் ஒரு பகுதியும் முயற்சி எடுத்த போதும், தமிழ், முஸ்லிம் தேசிய இனங்களை ஒன்றுபடுத்துகிறவிதமாகப் பிரச்சினைகள் கையாளப்படவில்லை. பிரதான முஸ்லிம் தேசியவாதக் கட்சியான முஸ்லிம் காங்கிரஸில் ஏற்பட்ட பிளவினால், போட்டியிடும் தலைவர்கள் வெளிவெளியாகவே தமிழருக்கு விரோதமான நிலைப்பாடு முதல் பேச்சுவார்த்தை மூலம் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தீங்கான நிலைப்பாடுகளையே மேற்கொண்டனர். போட்டியிடும் முஸ்லிம் தலைமைகளது தமிழர் விரோதத் தோற்றப்பாடுகள் பாராளுமன்ற அரசியற் சந்தர்ப்பவாதத்தாலும் கிழக்கின் தமிழ்ப் பாராளுமன்ற அரசியல் வாதிகளது முஸ்லிம் விரோத நிலைப்பாட்டாலும் உந்தப்பட்டவையாகும்.

இதனாற் பெரும் நன்மை கண்டோர் யாரெனின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வடக்குக் கிழக்கின் சுயாட்சிக்கான நியாயத்தைப் பலவீ களின் பெரும் புள்ளிகள் ஆகியோர் குறிப்பாக அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகட்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்ட பின்பு கிழக்கில் முஸ்லிம்கட்கும் தமிழருக்குமிடையிலான மோதல்களைத் தூண்டிவிட்டும் பங்களித்தும் உள்ளனர்.

தமிழர்களினளவுக்குச் சுயநிர்ணய உரிமைக்கு அருகதையுள்ள ஒரு தேசிய இனமாக முஸ்லிம்களை அங்கீகரிக்காமல் இம் முரண்பாட்டைத் தீர்க்க இயலாது. கிழக்கின் முஸ்லிம் தலைவர்களில் ஒரு பகுதியினர் தேசிய இனப்பிரச்சினை தாமதமின்றித் தீர்வதற்குத் தடைபோடும் நோக்கத்துடனேயே முஸ்லிம்கட்கான ஒரு சுயாட்சி அமைப்புக்கான கோரிக்கையை முன்வைக்கின்றனர் என்ற ஐயம் இருந்தாலும், அக் கோரிக்கைக்கான நியாயம் உள்ளது. தமிழர் விடுதலைச் சக்திகள் முஸ்லிம்களது அபிலாட்சைகட்குப் பகைமையுடனும் அனுதாபமின்றியும் இருப்பதாகத் தோன்றும் வரை, பேரினவாதச் சக்திகளும், பிரதேச மேலாதிக்கவாதமும், ஏகாதிபத்தியமும், தமிழர்கட்கான சுயாட்சியையும் சுயநிர்ணயத்தையும் பலவீனப்படுத்த, இரு சமூகங்கட்குமிடையிலான முரண்பாட்டைப் பயன்படுத்துவதற்கு இடமுண்டு.

தெற்கில் ஒன்றில்லாவிட்டால் மற்றப் பேரினவாதக்கட்சியுடன் இணைந்துள்ள முஸ்லிம்களின் பாராளுமன்ற அரசியல் தலைமை இல்லை என்று பாசாங்கு செய்த போதிலும், தெற்கிலுள்ள முஸ்லிம்களின் இருப்புக்குச் சிங்களப் பேரினவாதம் ஒரு மிரட்டலாகவேயுள்ளது. ஒட்டு மொத்தமான முஸ்லிம் பாராளுமன்ற அரசியல் தலைமையினது சந்தர்ப்பவாதம் நாடளாவிய முறையில் முஸ்லிம்களது ஒற்றுமைக்குத் தடையாகவேயுள்ளது. பழமைவாத முஸ்லிம் அடிப்படைவாதம் ஒரு அரசியற் சக்தியாகவும் அதிலும் முக்கியமாக முஸ்லிம்கட்கு ஒரு சமூக உபத்திரவமாகவும் எழுவதற்கு அரசியல் விரக்தி உதவியுள்ளது. இப் போக்கு ஒடுக்கப்பட்ட மக்களைப் பிளவுபடுத்தி விடுதலைக்கான அவர்களது போராட்டத்தை மேலும் பலவீனப்படுத்தும். தெற்கிற் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறைக்கு எதிராக முஸ்லிம்களை ஆதரிப்பதன் மூலமும், சிங்கள பௌத்தப் பேரினவாதிகளும் பிற்போக்கு இந்து மேட்டுக் குடியினரில் ஒரு பகுதியினரும் பிற மதச் சிறுபான்மையினருக்கு மாறாக அமைக்கிற நெறியற்ற கூட்டணியை எதிர்ப்பதன் மூலமும், தமிழர் விடுதலை இயக்கம் தன்னை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மலையகத் தமிழரின் தலைமைகளிடையே தமிழர் விடுதலைப்போராட்டத்திற்கு வெளிவெளியான பகைமை இருந்ததில்லை. எனினும் ஆதரிப்பது போன்ற பாசங்குகட்கு நடுவே, அந்தத் தலைமைகள் தமக்கும் தம்முடைய கூட்டாளிகளுக்கும் மட்டுமே நன்மை தேடும் நோக்கில் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதற்குப் பிரதி உபகாரமாகப் பேரினவாத அரசியற் சக்திகளை அதிகாரத்தில் டையே பிரதேசவாதத்தை ஊக்குவிப்பதன் மூலம், இத்தலைமை, மலையகத்தமிழ்த் தேசிய இனத்தின் பெரும்பான்மையினரான தோட்டத் தொழிலாளர்களை வெளியிலிருந்து வரும் முற்போக்குச் சிந்தனைகளினின்று காவலிட முற்படுகிறது. வடக்கு கிழக்கின் தமிழ்த் தேசியவாதிகள் இந்தத் தலைமைகளின் இரட்டை வேடத்தை அறிந்த



போதும், அண்மையில் இ. தொ. கா, யூ என். பியிடமிருந்து ஐ. ம. வி. மு ஆட்சிக்கு ஆதரவை மாற்றிய போது போல, தமது வர்க்கத்தைச் சேர்ந்த அரசியற் கூட்டாளிகளது நலன்கட்கு மிரட்டல் இல்லாத வரை. எதையுமே விமர்சிக்க முன் வருவதில்லை.

வடக்குக்கிழக்கின் தமிழ் மக்களது போராட்டத்தில் குறிப்பிடத்தக்களவில் மலையகத் தமிழர் பங்குபற்றுவது என்ற பேச்சுக்கு இடமில்லை. இருந்த போதும் தோட்டத்துறையில் நியாயமான ஊதியத்துக்காகவும் அடிப்படை உரிமைகட்குமான போராட்டத்திலும் அப்பட்டமான இனவாத வன்முறை தொடங்கி மேல்கொத்மலைத்திட்டம் வரையிலான பேரின

**பழமைவாத முஸ்லீம் அடிப்படை வாதம் ஒரு அரசியல் சக்தியாகவும் அதிலும் முக்கியமாக முஸ்லீம்களுக்கு ஒரு சமூக உபத்திரமாகவும் எழுவதற்கு கடந்த கால அரசியல் விரக்தி உதவியுள்ளது**

வாத ஒடுக்கு முறைக்கு எதிரான மலையகத் தமிழ் மக்களது போராட்டத்துக்கு ஆக்கமான ஆதரவு வழங்குமாறு தமிழ் மக்களை ஊக்குவிப்பதால் மலையகத் தமிழ்த் தலைமையின் சந்தர்ப்பவாதத் தலைமையை அம்பலப்படுதித் தனிமைப்படுத்த இயலும். தனிநபர்வாத சாகசங்களாலல்லாமல் மலையக மக்கள் நடுவிலிருந்து எழும் ஒரு வெகுசன அரசியல் இயக்கத்தாலேயே நாட்டின் சகல ஒடுக்கப்பட்ட மக்களதும் போராட்டங்கட்கு உதவ இயலும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# கல்வியும் சமூகமும் (16)

## ஒரு வரலாற்றுப்புல நோக்கு

# உயர்கல்வியை நோக்கிய நகர்வு தந்த விளைவுகள்

கொலனிய ஆட்சியின் கீழ்ப் பாடசாலைக் கல்வி மட்டுமன்றி உயர்கல்வியும் கொலனிய நிருவாக நலன்களைப் பேணுகிற நோக்கிலேயே அமைந்திருந்ததில் வியக்க எதுவுமில்லை. கொலனி ஆதிக்கத்துக்குட்பட்ட நாட்டில் உற்பத்தி, வணிகம் என்பனவற்றின் பெருக்கத்தையொட்டித் தொழில் வளர்ச்சியும் ஏற்படுகிறது. போக்கு வரத்துக்கான நெடுஞ்சாலைகள், புகையிரதச் சேவை, துறைமுகங்கள், கட்டிடங்கள் போன்றவை சார்ந்தே பொறியியல் தொழில்நுட்பத்துறை முதலில் விருத்தி பெறுகிறது. கொலனிய ஆட்சியாளர்களது மருத்துவம், சட்டம், நிருவாகமுறைகள் போன்றனவும் ஒவ்வொரு கொலனியிலும் நிலைபெறுகின்றன. இவை நிலவுடைமைச் சமுதாயத்தில் நிலை பெற்றிருந்த நடைமுறைகளின் இடத்தைப் பிடிக்கத் தொடங்குகின்றன. இதன் மூலம் ஏற்படுகிற மாற்றங்கள், வெறுமனே கொலனிய நிருவாகத்தின் கட்டாயமான திணிப்பினால் ஏற்படுவன அல்ல. கொலனிய ஆட்சியின் கீழ் உருவாகி வளருகிற புதிய இடைநிலை வர்க்கங்களுக்கு இதில் ஒரு முக்கிய பங்குண்டு. அவ்வர்க்கங்களைச் சேர்ந்தோர் கொலனிய எசமானர்களது மொழி, பண்பாடு, சமூக நடைமுறைகள் அனைத்தையும் பின்பற்றுவதற்கு இரண்டு முக்கியமான உந்துதல்கள் இருந்தன. ஒன்று கொலனிய நிருவாகத்தினரது அன்புக்கும் நம்பிக்கைக்கும் உரியோராகி, அதன்மூலம் தமது தனிப்பட்ட நிலையை மேம்படுத்துவது. மற்றது அதிகாரத்தில் உள்ளவர்களது சமூக அடையாளங்களைத் தம்முடையதாக்கி அதன் மூலம் தமது சமூகத்தில் தாழ்நிலையில் உள்ளவர்களை விடத் தம்மை உயர்ந்தோராக்கிக் கொள்வது.

எனவே, கல்வித் துறை மேலும் விரிவு பெற்றதுடன், உயர்கல்வியை நோக்கி விரிவு பெற்றபோது, அதை நாடியோரது இலக்கு, கொலனிய நிருவாகத்தினுள் தமக்காக ஒரு உயரிய இடத்தைத் தேடிக்கொள்வது தொடர்பாகவே இருந்தது. ஆங்கிலத்திற் செயற்படக் கூடியவர்களும் தங்களுக்கு விசுவாசமாக இருக்க கூடியவர்களுமானவர்களுமானோருக்கு உயர் கல்வி வாய்ப்பை வழங்கக் கொலனிய ஆட்சியாளர்கள் விரும்பினர். இவர்கள் மூலமே கொலனிகளை நீண்டகாலம் நிருவகிக்க இயலும் என்பது அவர்களது கணிப்பாக இருந்தது.

மிகவும் பொருள் வசதி படைத்தோர் தங்களது பிள்ளைகளை உயர்பாடசாலைக் கல்விக்கும் மேற்படிப்பிற்கும் இங்கிலாந்துக்கு அனுப்பினர். அவர்கள் அங்கு தமது பல்கலைக்கழகப் படிப்பைப் பெற்றனர். இந்தத் தலைமுறையினர் நடுவிலிருந்தே இலங்கையின் தேசிய அரசியலின் முதலாவது தலைமுறை உருவானது. முதலில் அது எவ்வகையிலும் கொலனிய விரோத நோக்குடையதாக உருவாவில்லை. எனினும் தங்களது பண்பாட்டு அடையாளத்தைப் பற்றிப் பெருமைப்படக் கூடிய சிலர் அங்கு தோன்றினர். இவ்வாறு கொலனிய நிருவாகமே தனக்கெதிராக எழக்கூடிய ஒரு சமூகத்தலைமையையும் உருவாக்கியது. இந்த வளர்ச்சியை இந்தியாவின் வசதிபடைத்த வர்க்கத்தினர் நடுவே அன்று உருவான போக்குக்களுடன் இணைத்து நோக்குவது பொருந்தும். இந்த வர்க்கங்களது இரண்டக நிலை கொலனி ஆட்சிக்குப் பின்பான சமூக வளர்ச்சியை அடையாளப்படுத்தியது.

> ஒன்று
> கொலனிய உயர்கல்வி மூலம்
> அன்னியரின் அன்பு நம்பிக்கையைப்
> பெற்று தமது நிலையை உயர்த்துவது
> இரண்டு
> அதிகார சமூக அடையாளங்களைத்
> தமதாக்கி தம்மை உயர்ந்தோர்
> குழாத்தினராக்கிக் கொள்வது

இதனிடையே கொலனி ஆதிக்க நாட்டில் உயர்கல்வி பெற்று மீண்டவர்கள் அரச நிருவாகம் சட்டம் போன்ற துறைகளில் தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர். அதிகாரத்தில் தமக்கும் ஒரு பங்குக்காகக் கொலனிய ஆட்சியாளர்களிடம் கெஞ்சவும் வாதிடவும் அவர்கள் முற்பட்டனர். இந்த அதிகாரப் போட்டி, பின்னர் தேசிய அரசியலின் இனவாதத்தன்மைக்குப் பங்களித்ததை நாம் அறிவோம்.

எவ்வாறாயினும் கல்வியின் பரவலான இலக்கு அரச சேவையாகவும் குறிப்பாக சிவில் சேவை எனப்படும் உயர் நிலைச் சேவையாகவுமே ஆங்கிலங்கற்ற நடுத்தர வர்க்கத்தினால் நோக்கப்பட்டது. உயர்கல்வி என்பது சிவில் சேவையில் பதவியை உறுதிப்படுத்துகிற ஒரு மார்க்கமாகக் கருதப்பட்டது. கொலனிய நிருவாகத்தினருக்கு உள்ளூரிலிருந்து நிருவாக சேவையினர் கூடிய அளவிற் தேவைப்பட்ட நிலையில் இலங்கையிலேயே மேற்படிப்பை வழங்கக் கூடிய கல்லூரிகள் நிறுவப்பட்டன.

முதலில் சமூகக் கல்வித்துறை சார்ந்த (கலைத்துறை எனப்படும்) பாடத்திட்டங்கட்கான பயற்சியே இடம் பெற்றது. பின்னர் விஞ்ஞானப் படிப்பும் இடம் பெற்றது. கொழும்புப் பல்கலைக்கழகக் கல்லூரி லண்டன் பல்கலைகழகப் பட்டத்திற்கான மாணவர்களைப் பயிற்றுவிக்கத் தோற்றுவிக்கப்பட்டது. இதுவே பின்னர் இலங்கைப் பல்கலைக்கழகமாகியது. யாழ்ப்பாணக் கல்லூரி இவ்வாறாக லண்டன் பல்கலைக்கழகப் பட்டத்திற்காக மாணவர்களைப் பயிற்றுவிக்கும் நடைமுறையைச் சுதந்திரத்தின் பின்னரும் சிலகாலம் தொடர்ந்தது.

தொழில் நுட்பம் மருத்துவம் என்பன பல்கலைக்கழகப் படிப்பை மட்டுமன்றி தொழிற் பயிற்சியையும் மனதிற் கொண்டு பயிற்றப்பட்டன. கொழும்பில் இருந்து வந்த தொழில் நுட்பக் கல்லூரி பொறியியல் பட்டப்படிப்புக்கும் கொழும்பு மருத்துவக்கல்லூரி மருத்துவப் பட்டப்படிப்பிற்கும் மாணவர்களைப் பயிற்றுவித்தன. அதற்கு முன்னர் மாணவர்கள் சொந்தச் செலவிலோ அரசாங்கத்தின் புலமைப்பரிசில் திட்டங்களின் மூலமோ இங்கிலாந்து சென்று பட்டம் பெற்று மீண்டனர். கொலனிய ஆட்சியின் தேவைகளை ஒட்டி உருவான இந்த நிறுவனங்களின் மூலம் உருவான மருத்துவர்கள், பொறியியலாளர்கள் போன்றோரிடையே தேசியவாத நோக்குடையவர்கள் சிலர் இருந்தாலும் இத்துறைகளில் இருந்தோரது சமூகப்பார்வை உயர்நடுத்தர வர்க்கத்தினது அல்லது அந்த வர்க்கத்தில் இணையத் துடிக்கும் ஒரு நடுத்தர வர்க்கத்தினரதாகவே இருந்ததில் வியப்பில்லை.

கல்வியிலும் தொழிற் திறமையிலும் மருந்துவ, பொறியியல் பட்டதா ரிகள் மட்டுமன்றிப் பிற மருத்துவத் தொழில் வல்லுநர்களும் பொறியியல் தொழில்துட்ப வல்லுநர்களும் ஆற்றல் மிக்கோராகவே இருந்தனர். அன்றைய தேவைகளை நிறைவு செய்வதற்கு அந்தத் துறைகளில் தகுதி பெற்றோருக்குத் தட்டுப்பாடு இருந்ததால்அந்த இடைவெளியை இடைநிலைத் தொழில் வல்லுநர்கள் பலர் நிரப்பினர் அவர்களது பயிற்சி முறை பெரிதும் நடைமுறை சார்ந்ததாகவும் பல்கலைக்கழகப் பயிற்சி பெற்றோரதும் முழுமையான ஒரு கல்வி முறை மூலம் பயிற்றப்பட்டோருக்குமிடையே தொழில் அணுகுமுறை வேறுபாடுகளும் வர்க்கப்பின்னணி சார்ந்த முரண் பாடுகளும் நீண்டகாலமாக இருந்து வந்தன.

மருத்துவமோ பொறியியலோ மட்டுமன்றி அரச நிருவாகமும் சட்டத்துறையும் கட்டிடக் கலைத்துறையுங் கணக்காளர் துறையுங் கூட பிரித்தானிய முன்மாதிரியைப் பின்பற்றியே செயற்பட்டன. இங்கு நம்முன்னுள்ள பிரச்சனை பிரித்தானிய முன்மாதிரியா அமெரிக்க அல்லது இன்னொரு ஐரோப்பிய முன்மாதிரியா அல்லது வேறெந்த நாட்டினதும் முன்மாதிரியா நமக்குச் சிறந்தது என்பதல்ல. தேசியத் தொழிற் பொருளாதார, சமூக வளர்ச்சிக் கேற்ற ஒரு கல்வி முறையும் உயர்கல்வி முறையும் நம்மிடம் இருந்ததா என்பதும் அவற்றை உரியவாறு விருத்தி செய்வதில் நாம் எவ்வளவு வெற்றி கொண்டோம் என்பதுமே நமது கவன த்துக்குரியன.

1948ம் ஆண்டு சுதந்திரம் கிடைத்ததாகக் கூறப்பட்ட போதும் தமது பேரினவாத அரசியலை விட்டால், இலங்கையின் ஆளும் வர்க்கம் கொலனிய நிருவாகம் நாட்டை நடத்திச் சென்ற வழியிலேயே தொடர்ந்தது எனலாம். 1956ம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றம் இலங்கையின் தேசிய உணர்வலையின் ஒரு உச்சநிலையை அடையாளப்படுத்தியது. அந்த அலையினையொட்டி எழுச்சி பெற்ற தேசிய முதலாளி வர்க்கம் ஒரு தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கைக் கொண்டிருந்தாலும் அதை முழுமைப்படுத்தும் ஆற்றலைக் கொண்டிருக்கவில்லை.

தமது அரசியல் வலிமைக்குத் தேவையாயிருந்த சிறுமுதலாளிய வர்க்கத்தையும் பிற நடுத்தர வர்க்கப் பிரிவினரையும் திருப்தி செய்யும் விதமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பல முற்போக்கானவையாக அமைந்தபோதும் அவை முழுமையான ஒரு சமூகப் பார்வையுடன் ஏகாதிபத்தியத்துடன் ஒரு பூரணமுறிவுடைய ஒரு தேசியக் கண்ணோட்டத்தில் அமையவில்லை.

பேராசிரியர் சி.சிவசேகரம்

அவ்வாறு அமைந்திருக்கவும் முடியாது. ஏனெனில் தேசிய முதலாளிய வர்க்கத்தின் தேவை அதுவல்ல. அது உழைக்கும் மக்களது வலிமை பற்றி அஞ்சுவதால் ஏகாதிபத்தியத்துடன் சமரசத்துக்கு இடம் விட்டே நடந்து கொள்கிறது. குறிப்பிட்ட உலக அரசியல் நிலவரங்கள் அதை முற்போக்கான நிலைப்பாடுகட்குள் தள்ளலாம். ஆனால் அத்திசையில் தொடர்வதற்குரிய தலைமையை அதனால் வழங்க இயலாது.


தேசிய முதலாளி வர்க்கத்தின் தடுமாற்றத்தை எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவின் நடத்தையிலிருந்தும் அறியலாம். சிங்களத்தை அரசகருமமொழி ஆக்குவது. தாய்மொழிக் கல்வி என்பனவற்றைத் தீவிரமாக முன்னெடுத்த பண்டாரநாயக்க தன் பிள்ளைகளை வெளிநாடுகளில் உயர்கல்விக்கு அனுப்பவே திட்டமிட்டிருந்தாகவும் தனது உறவினரிடம் முடிந்தால் இலங்கைப் பல்கலைக்கழகத்திற்குத் தமது பிள்ளைகளை அனுப்பாமல் இங்கிலாந்துக்கு அனுப்புமாறு ஆலோசனை கூறியதாகவும் அவரது உறவினரான யஸ்மின் டயஸ் குணரத்ன எழுதியது கவனத்துக்குரியது. தேசிய முதலாளியம் தான் போதிக்கும் தேசியவாதத்தைக் கூட முழு நம்பிக்கையுடன் போதிப்பதில்லை என்பது இன்று வரை நாம் காணக் கூடிய ஒன்று தான். இனி வருகிற கட்டுரைகளில் இலங்கையின் உயர்கல்வியை நாட்டின் தேவைகட்கு ஏற்ப அமைப்பதற்கான முயற்சிகள் பற்றியும் அவற்றின் வெற்றி தோல்விகள் பற்றியும் கவனிப்போம். ◀

# சங்கர மடத்தின் லீலைகள் அம்பலம்
# சங்கராச்சாரி சிறையில் சஞ்சலம்

மனித இனத்தின் துன்பங்களையும் துயரங்களையும் உள்ளே போட்டுப் பூட்டப் பட்டிருந்த நல்வாழ்வுச் சாபப் பெட்டியைத் (பண்டோராவின் பெட்டி எனப்படுவது) திறந்தபோது பாம்பு, தேள், பூரான் போன்ற நச்சு உயிரினங்களாக அவை வெளியே வந்ததென்று ஒரு கிரேக்க பழங்கதை மரபு கூறுவதுண்டு. அதைப் போன்று, சங்கரராமன் கொலை வழக்கை விசாரிக்கப் போக, காஞ்சி சங்கர மடம் புரிந்து வந்த ஏராளமான ஒழுக்கக் கேடுகள், அக்கிரமங்கள், அட்டூழியங்கள்– "பரிகாரமே தேட முடியாத பாவச் செயல்கள்" பற்றிய உண்மைகள் தோண்டத் தோண்ட வெளிவருகின்றன.. வெளியே, காவி கட்டிய துறவிகளாக நடித்துக் கொண்டு உள்ளே சுகபோக, பாலியல் களியாட்டங்களில் சங்கராச்சாரிகள் ஈடுபட்டிருந்தனர். ஆன்மிக – மதச் சேவைகளைப் பெயருக்குச் செய்து கொண்டு, உண்மையில் அதிகாரத் தரகு வேலைகளையும், அரசியல்வாதிகள், முதலாளிகள் மற்றும் இரகசிய உலகப் பேர்வழிகளின் செல்வங்களைப் பதுக்கி வைக்கும் கருவூலமாக சங்கர மடம் விளங்குகிறது. அரசுத் தலைவர்கள் முதல் நீதிபதிகள் – பொலீஸ் அதிகாரிகள், பெரும் தரகு–அதிகார முதலாளிகள், நிதி நிறுவனங்களின் தலைவர்கள் வரை அவரவர் தொழில்கள் தொடர்பான காரியங்களை முடித்துத் தரும் தலைமைச் செயலகமாக சங்கர மடம் இயங்கி வந்திருக்கிறது.

அதனால்தான், ஒரு சில விதிவிலக்குகள் தவிர சமூகத்தின் அனைத்துப் பிரிவு உயர்மட்டத்தினரும் ஒரு கொலைக் குற்றவாளியான ஜெயேந்திரனுக்கு சட்டத்திற்கு மேலான தனிச்சிறப்பான தகுதியில் வைத்து நடத்தப்பட வேண்டும் என்று கோருகின்றனர். இந்தக் கோரிக்கைகளை நிராகரித்து, கடும் நடவடிக்கை எடுப்பதைப் போல நடந்துவரும் ஜெயலலிதா அரசு கூட உண்மையில் ஜெயேந்திரனை அரசு மரியாதைக்கு மேல் பார்ப்பன – சனாதன தர்ம ஆசாரப்படியே நடத்துகிறது. இருந்த போதும் கொலைக் குற்றமே புரிந்தாலும் "இந்து துறவி" என்பதால் அவருக்கு இந்தியத் தண்டனைச் சட்டம் பொருந்தாது என்று கூறி வெறியாட்டம் போடுகிறது ஆர். எஸ். எஸ்.– பார்ப்பன கும்பல். காரணம், காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரன் அரசியலுக்கு அப்பாற்பட்ட மதவாதியாக இல்லை. இந்துமதவெறி பாசிச பார்ப்பன பயங்கரவாதியாகச் செயல்பட்டிருக்கிறார். ஆதீனங்கள், மடாதிபதிகள், பீடாதிபதிகளையெல்லாம் திரட்டி மதவெறி பாசிச அரசியலுக்குச் சேவை புரிந்திருக்கிறார். சங்கரராமன் கொலை வழக்கை விசாரிக்கும்போது அப்பு என்கிற கிருஷ்ணசாமியின் கிரிமினல் குற்றக் கும்பலுக்கும் – சங்கரமடத்துக்கும் உள்ள நெருக்கமான உறவுகள் தெரிய வந்தன என்று பொலீஸ் கூறுகிறது.

தொடர்ச்சி 8ம் பக்கம்



www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# இந்திய ஐ. ஓ. சீ யின் சுரண்டல் கொள்ளையால் பெற்றோல் விலை மேலும் அதிகரிக்கும் அபாயம்

அண்மையில் "லங்கா ஐ. ஓ. சீ" (IOC)எனப்படும் இந்தியக் கம்பனி இலங்கையில் அதன் ரூபா 10/= முழுப் பெறுமதியுடைய ஆயிரம் (1000) கோடி சாதாரண பங்குகளை விற்பனைக்கு விட்டுள்ளது. ஒவ்வொரு பங்குகளும் ரூ. 23/= ரூபா. 27/= ஆகிய விலை கொடுத்து இலங்கையர் வாங்க முடியுமென அறிவிக்கப்பட்டது. பங்குகளை வாங்குபவர்கள் தமக்கு இலாபகரமானதெனக் கருதும் விலையை அதாவது ரூ. 23/= 24/= 25/= 26/= 27/= குறித்து வாங்க முடியுமென அறிவிக்கப்பட்டது. அதாவது பங்குகள் பேரத்திற்கு விடப்பட்டன. அது மட்டுமல்ல விற்பனைக்கு விடப்பட்ட ஆயிரம் கோடி சாதாரண பங்குகளை ஆயிரத்து முன்னூற்றி முப்பத்தி மூன்று கோடி முப்பது இலட்சம் பங்குவரை (1333 கோடி30 இலட்சம்) கிராக்கியைப் பொறுத்து விற்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நவம்பர் 29ம் திகதி ஆரம்பமான விற்பனை அதேதினத்தில் முழுப்பங்குகளும் விற்பனையாகியமையால் அன்றைய தினமே விற்பனை முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்தியா இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த எரிபொருள் இறக்குமதி விநியோகத்தை இறுக்கமாகத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதையே இது குறிக்கிறது.

ஐ. ஓ. சீ அதன் முதற்கட்டமாக திருகோணமலையில் சீனன் குடாவில் அமைந்துள்ள 99 தாங்கிகளை 35 வருடகால குத்தகையில் பெற்றுக் கொண்டது. இதில் இறங்குதுறையும், நிலத்தடி எண்ணைய்க் குழாய்களும் அடங்கும்.

இந்திய எண்ணெய்க் கம்பனிகள் குழுமத்தின் தாய்க் கம்பனியாக இந்



இந்திய பெற்றோலியத் துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர்

தியன் ஒயில் கம்பனி (ஐ. ஓ. சீ) விளங்குகிறது. இந்தக் குழுமத்தில் ஆறு உப கம்பனிகள் உள்ளன. இதைவிட இரண்டு உபகம்பனிகள் வெளி நாடுகளில் செயற்படுகின்றன. அதில் ஒன்றுதான் லங்கா ஐ.ஓ.சி. மற்றது மொறிசியசில் இயங்குகிறது. பெற்றோலியப் பொருட்களை சுத்திகரித்தல், சந்தைப்படுத்தல் என்பன இதன் செயற்பாடாகும்.

இந்தக் கம்பனிகள் குழுமம் இந்தியாவில் 51 வீத சந்தையைக் கொண்டுள்ளது. இந்தியாவில் சுத்திகரிக்கப்படும் எண்ணெயில் 42 வீதத்தை இந்தக் கம்பனிகள் குழுமமே மேற்கொள்கிறது. உலகில் 500 இராட்சத எண்ணெய் கம்பனிகள் இயங்குகின்றன. இதில் ஐ. ஓ. சீ 189 வது இடத்தில் உள்ளது. அதன் செயற்பாடு மூலதனம் 48500 கோடி இந்திய ரூபாய்களாகும். 2003-2004ம் நிதியாண்டில் இந் தியன் ஒயில் கம்பனி 210 வீத பங்கு லாபத்தை வழங்கியது. இந்தியன் ஒயில் கம்பனியின் 82 வீதத்தை இந் திய அரசே உரிமை கொண்டுள்ளது என்பதால் அந்தக் கம்பனியின் செயற்பாடே இந்திய அரசின் செயற்பாடாகும் என்பதை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

லங்கா ஒயில் கம்பனியின் பங்குகள் விற்பனை தொடர்பான உத்தியோகபூர்வ வெளியீட்டில் இந்த லங்கா ஐ. ஓ. சீ. யானது அரசியற் தலைவீடுகளுக்கு அப்பாற்பட்ட தெனவும்- நாட்டின் வடக்கு கிழக்கையும் இது உள்ளடக்கும் எனவும் கோடிட்டுக் காட்டியுள்ளது. இவ்விடயம் இங்கு குறிப்பாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இந்தக்கம்பனியின் இலாபமானது தற்போதைய செயற்பாட்டின் மூலம் 2003-2004ம் நிதியாண்டில் 2004 மார்ச் வரை ஏழு(7) கோடி 68 இலட்சம் இலங்கை ரூபாயாகும். அதே சமயம் 2004 ஏப்ரல் தொடங்கி யூலை 31ம் வரையான நான்கு மாதங்களில் மட்டும் சுத்த இலாபமானது 85 கோடி 89 இலட்ச ரூபாய்களாகும். கம்பனியின் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படுவதால் இலாபம் பல மடங்கு பெருகும். அதுமட்டுமல்ல ஐ. ஓ. சீ முதலீட்டுச் சபையினருடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் இந்தக் கம்பனி பத்து வருடகாலத்திற்கு வருமான வரி செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. 11வது வருடத்திலிருந்து வருமான வரி 15 வீதம் மட்டுமே, முதலீட்டுச் சபையினருடன் ஒப்பந்தம் செய்துள்ளமையால் மூலதனத்தை வெளியே கொண்டு செல்ல முடியும். வெளியே மூலதனம் சென்ற பின் உள் நாட்டில் செயற்படுவதற்குத் தேவையான மூலதனத்தை எடுப்பதற்காகவே லங்கா ஐ. ஓ. சீ உள்நாட்டில் அதன் பங்குகளை விற்கின்றது.

ஐ. ஓ. சீ யின் பங்குகள் விற்பனை முடிவுற்றதும் இந்திய எண்ணெய் துறை அமைச்சர் மணி சங்கர் ஐயர் விஜயமொன்றை மேற்கொண்டார். எண்ணெய் விலை அதிகரிப்புக்கு அமெரிக்கா காரணம் என்பதை விளக்கினார். இதை ஏற்கனவே 'புதிய பூமி' யின் நவம்பர் இதழில் தெரிவித்திருந்தோம்.

இந்தியா தனது எண்ணெய் தேவையில் எழுபத்தைந்து(75) வீதத்தை இறக்குமதி செய்வதாக தெரிவித்த அவர் அமெரிக்கக் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்ட ஆசிய எண்ணெய் சந்தையை உருவாக்க வேண்டுமென்றார். அந்த ஆசிய சந்தையில் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மியன்மார் அத்துடன் 'திபெத்தும்' இணையலாம் என்றார். திபெத் சீனாவின் ஒரு பகுதி. அப்படியிருக்க திபேத்தையும் ஆசிய பிராந்திய எண்ணெய் சந்தைக்கு கொண்டு வர வேண்டுமென்பது இந்தியாவின் உள் நோக்கத்தை அம்பலப்படுத்துகிறது. அது மட்டுமல்ல இந்தியாவின் எண்ணெய் தேவை பிரமாண்டமானது. இந்தியா குறிப்பிடும் சிறிய ஆசிய நாடுகள் அனைத்தின் தேவையை விட கூடிய அளவு

-சிறீகரன்-

எண்ணெய் இந்தியாவுக்குத் தேவை. ஆசியாவுக்கான எண்ணெய் சந்தை என்பது இந்தியாவுக்கான சந்தையேயாகும். இந்தச் சந்தை வந்தால் ஆசிய நாடுகளைச் சுரண்டிக் கொழுக்கவும் எண்ணெய் ஆயுதத்தால் அவற்றை மிரட்டலாம் என்பதுமே இந்திய எண்ணை வர்த்தகத்தின் அடிப்படையாகும்.

தாராளமயம் தனியார் மயம் என்பதன் ஊடாக அந்நியக் கம்பனிகள் எவ்வளவு மோசமாக நமது நாட்டைச் சுரண்டிச் செல்கின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமே. இது போன்ற நூற்றுக் கணக்கான கம்பனிகள் நமது நாட்டின் உழைப்பு வளம், மூலவளம், நுகர்வின் ஊடான கொள்ளை லாபம் என்பனவற்றை சூறையாடிச் செல்கின்றன. நமது நாட்டின் ஆளும் வர்க்க அதிகார சக்திகள் இதற்கு முழு உடந்தையாகி நிற்கின்றன என்பதே அவல நிலையாகும். இதற்குப் பெயர் தான் நவகொலனித்துவம் என்பதாகும்.

# ஷாருக்கானும் சோமதேரரும்



ஷாருக்கான் பிரபல ஹிந்தி நடிகர். சோமதேரர் புத்தரின் பெயரால் பௌத்த அடிப்படை வாதத்தை முன் வைத்தவர். இவ்விருவரையும் மையமாக வைத்தே கடந்த டிசம்பர் 11ம் திகதி கொழும்பில் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம்- வன்முறை இவற்றின் தொடர்ச்சியாக அன்றிரவு கைக் குண்டு வீச்சு இடம் பெற்றது. அதில் இருவர் மரணமாயினர். நூறு பேர் வரை காயப்பட்டனர்.

கங்கொடவல சோம தேரர் பௌத்த சிங்கள அடிப்படை வாதக் கருத்துக்களை கௌதம புத்தரின் பெயரால் மெருகூட்டி பல தளங்களிலும் பரப்பி வந்த ஒருவர். அவர்கடந்த வருடம் டிசம்பர் 11ம் திகதி ரஷ்யாவிற்கு பயணித்த போது மாரடைப்பால் இறந்து விட்டார். அவரது இறப்பு பேரினவாத அடிப்படைவாதிகளுக்கு அதிர்ச்சி தருவதாகிக் கொண்டது. அவரது இறப்பில் கிளப்பப்பட்ட சர்ச்சை இன்னும் தீரவில்லை. அதேநேரம் அவரது முதல் வருட நினைவு தினம் டிசம்பர் 11ம் திகதி கொண்டாடப்பட்டது. சோமதேரர் நினைவு மன்றம் அதனை ஒழுங்கு செய்திருந்தது.

அதே தினத்தன்று இந்தி நடிகர் ஷாருக்கான் தலைமையிலான நடிகநடிகைகள் பாடகர்கள் நடனக்காரர் கொண்ட ஒரு பெரும் பட்டாளம் கொழும்பு குதிரைப் பந்தயத்திடலில் களியாட்ட நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டது. இதனை தனியார் வானொலி தொலைக் காட்சி நிறுவனத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். அதற்குரிய நுழைவுச் சீட்டு பத்தாயிரம், ஏழாயிரத்து ஐந்நூறு, ஐந்தாயிரம், இரண்டாயிரத்து ஐந்நூறு என வகுக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சி நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்பே மேற்படி நுழைவுச் சீட்டுகள் யாவும் தீர்ந்து விட்டன. நிகழ்ச்சியில் முப்பதினாயிரம் பேர் கலந்தும் கொண்டனர்.

மறைந்த சோமதேரரின் நினைவு நாளில் மேற்படி களியாட்ட நிகழ்ச்சி நடத்தப்படக் கூடாது என்பதே சோமதேரர் சார்பான பௌத்த பிக்குகள் பேரினவாத அடிப்படைவாதிகள் என்போரது கோரிக்கையாகும். ஆனால் அக் கோரிக்கையை களியாட்ட விழா ஏற்பாட்டாளர்கள் ஏற்க மறுத்து விட்டனர். இதன் காரணமாகவே உண்ணாவிரதம் ஆர்ப்பாட்டம் அடிதடி எனச் சென்று இறுதியில் கிரனேற் வீச்சு இடம் பெற்று இருவர் கொல்லப்பட்டனர். நல்லவேளையாக இவை அனைத்திலும் சம்பந்தப்பட்டவர்கள் பணம் படைத்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களே. அதனால் சில பேரினவாத சிங்கள ஊடகங்கள் மனதாரவிரும்பியும் புலிகள்- தமிழர்கள் என விடயங்களைத் திசைதிருப்ப முடியாமல் போய் விட்டது.

மேலும் சோமதேரர் என்ற பௌத்த அடிப்படைவாத பேரினவாதியின் மறைவு நாளில் களியாட்ட விழா நடாத்தக் கூடாது என தடை விதிப்பது எவ்விதத்திலும் நியாயமற்றது. அது ஒரு மூன்றாம்தர கலாச்சாரச் சீரழிவுக்கு மக்களைத் தூண்டக் கூடிய விடயம் என்பது வேறு விடயம். டப்பாங் கூத்தும் அரை குறை ஆடை நடனங்களும் ஆபாசப் பாடல்களும் கொண்ட அந்நிகழ்ச்சி எவருக்கும் ஆரோக்கியமான தொன்றல்ல. அதனை நடத்த வேண்டாம் என்றவர்கள் அந்த நோக்கில் விடயத்தைப் பார்க்க வில்லை. சோமதேரர் நினைவு நாளில் நடத்தப்படுவதையே அவர்கள் எதிர்த்தனர். அப்படியெனில் கொழும்பிலும் ஏனைய நகரங்களிலும் காட்டப்பட்ட சீரழிவுக் கலாச்சாரப் பரப்புரை செய்யும் சினிமாக் காட்சிகளுக்கு இந்த அடிப்படைவாதிகள் ஏன் தடைவிதிக்க மறந்தார்கள்.

எது எவ்வாறாயினும் மேற்படி சம்பவம் பற்றி ஓர் அடிப்படை உண்மையை எல்லோரும் புரிவது அவசியம். ஐக்கிய தேசியக் கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பன மறைமுக



மாகவும் தேவைப்பட்டவேளைகளில் வெளிப்படையாகவும் பௌத்த சிங்கள பேரினவாதத்தை எண்ணெய் ஊற்றி எரியச் செய்து வந்தார்கள். அதனையே மேலும் வெளிப்படையாக ஜே.வி.பி. பகிரங்க எண்ணெய் வார்ப்பின் மூலம் சுவாலை விட்டு எரிய வைத்து வருகிறார்கள். அதிலிருந்து நேரடியாகப் பௌத்த அடிப்படைவாதப் பிக்குமார் தமது கைகளுக்கு அதனை எடுப்பதற்கு சுத்தமான பௌத்த தர்மராஜ்ஜியம் எனக் கூறிக் கொண்டு ஒன்பது காவியுடைதரித்தவர்களை பாராளுமன்றத்திற்குள் அனுப்பி வைத்துள்ளனர். அன்று இடம் பெற்ற வெட்கக் கேடான சம்பவங்களின் பொறுப்புதாரிகள் மேற் கூறப்பட்டவர்கள் தான் என்பதில் ஐயமில்லை. அச்சம்பவங்களை ஆழ்ந்து நோக்கும் போது அப்பட்டமான பௌத்த அடிப்படைவாத பாசிச நடவடிக்கைகளின் ஆரம்ப வடிவம் என்றே கூறுதல் வேண்டும். பாசிசம் என்பது தனித்த ஏக ஆதிக்கம் செலுத்துவதாகும். பன்மைத்துவம் ஜனநாயகம் மாற்றுக் கருத்துக்கள் என்பனவற்றை நிராகரிக்கும் பாசிசப் போக்கின் அம்சங்களையே கடந்த 11ம் திகதி சம்பவங்களில் பௌத்த அடிப்படைவாதிகள் நடைமுறையாக்கிக் காட்டினர். இது இந்துத்துவ பாசிசத்தின் தொடர்ச்சி எனவும் காணலாம். இதையிட்டு நேர்மையான ஜனநாயக முற்போக்கு இடது சாரி சக்திகள் சிந்தித்து செயற்படவேண்டும்.

## சங்கர மடத்தின்

7பக்க தொடர்ச்சி

ஆனால் பொலிஸ் அதிகாரிகள், அரசியல் பிரமுகர்கள், மற்றும் தொழிலதிபர்களுக்கு விருந்து வைப்பதற்கென்றே நவீன வசதிகள் விருந்தினர் மாளிகைகள், நவீனகார்கள், செய்தித் தொடர்பு சாதனங்கள், அதிநவீன ஆயுதங்கள் வைத்துக் கொண்டு மிரட்டிப் பணம் பறிப்பது, ஆள் மட்டு மல்ல, பாம்புத்தோல் - போதை மருந்து முதலிய பொருட்களைக் கடத்துவது, கூலிக்குக் கொலை புரிவது என்று பல்வேறு கிரிமினல் குற்றங்கள் புரிவதையே தொழிலாகக் கொண்டி ருக்கிறது இந்தக்கும்பல்.

ஆந்திரா, மராட்டியம் மற்றும் இந்தி பேசும் மாநிலங்களில் தாம் இத்தகைய குற்றக்கும்பல்கள் ஆதிக்கம் அதிகமாக இருப்பதாக இது வரை செய்திகள் வந்தன. அவற்றுடன் போட்டி போடும் அளவுக்கு தமிழ் நாட்டிலும் இத்தகைய கும்பல்களின் ஆதிக்கம் பெருத்துவிட்டது. இந்த உண்மை வெளியே தெரியாதவாறு செய்தி ஊடக ஒத்துழைப்புடன் பொலீசும் அரசும் பாதுகாக்கின்றன. சண்முகசுந்தரம், விஜயன் போன்ற பிரபல வழக்கறிஞர்கள் தாக்கப்படும் போதும், வெங்கடேசப் பண்ணையார், வீரமணி போன்றவர்களது என்கவுண்டர்களின் போதும்தான் சில தாதாக்களின் பெயர்கள் அறிய வருகின்றன. குற்றக் கும்பல்களின் பட்டியலை வெளியிட்ட போதுகூட அப்பு போன்ற பெரிய கொடிய தாதாக்களின் பெயர்களை வெளியிடாது பொலிசுத்துறை பாதுகாக்கிறது. தமிழ் நாட்டின் அனைத்துப் பெருநகரங்களிலும் இப்படிப்பட்ட குற்றக் கும்பல்கள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.

ஓட்டுக் கட்சி அரசியல் வாதிகள், கிரிமினல் குற்றக் கும்பல்கள் பொலிஸ்- அதிகாரவர்க்கம் ஆகிய முக்கூட்டு மேலும் விரிவாகி மதவாதிகள்- நிறுவனங்கள் இணைந்த வலைப்பின்னல் மக்களை மூச்சுத் திணற இறுக்குகிறது. இனி, மக்கள் குடியுரிமை, ஜனநாயக உரிமை, மட்டுமல்ல, சுயமரியாதையுடன் வாழ வேண்டுமானால் கூட இந்த வலைப்பின்னலை அறுத்தெறிய வேண்டும். இந்த நான்கு பிரிவினரும் ஒருவரோடு ஒருவர் சமரசம் செய்து கொண்டு நிழல் சண்டை போட்டுக் கொண்டு தப்பித்துக் கொள்கின்றனரே தவிர இவர்களின் ஆதிக்கத்திலிருந்து மக்கள் விடுபட அனுமதிக்கவே மாட்டார்கள். மக்கள்தாம் புரட்சிகர அமைப்புகளில் திரண்டு இந்த நாசகார சக்திகளை அழித்தொழிக்க வேண்டும்.

நன்றி :-புதிய ஜனநாயகம்

www.tamilarangam.net

நன்றி - நூலகத்திட்டம்



# பாராளுமன்றம் யாரால் யாருக்காக நடாத்தப்படுகின்றது!



பாராளுமன்றம் கள்வர்களின் குகை என்று லெனின் கூறியிருந்தார். அது பல இடங்களில் கயமைமிக்கவர்களின் கூடாரமா என்று கேட்கும் படியாகத்தான் தெரிகிறது.

பாராளுமன்றம் என்றால் மக்களாற் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களின் அரசியல் அபிலாட்சைகளை எடுத்துரைத்து நாட்டின் சட்டங்களையும் விருத்திக்கான திட்டங்களையும் வகுக்கும் ஒரு அவை என்பது தான் அது பற்றிய பரவலான எதிர்பார்ப்பு. ஆனால் அது என்றுமே அப்படி இருந்ததில்லை. மக்களாற் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மக்களின் பிரதிநிதிகளாக அல்லாமல் நாட்டின் அதிகாரமிக்க சிறுபான்மை ஒன்றின் நலன் பேணுகிற முகவர்களாகவே பெரும்பாலும் நடந்துகொண்டுள்ளனர்.

“இந்த நாட்டை ஆளுவதுயார்?”
என்று கேட்டேன்.
“இயல்பாகவே,மக்கள்” என்றார்கள்.
“இயல்பாக மக்கள்,
உண்மையாக யார்?”
என்று கேட்டேன்.

இவை எரிஷ் ஃப்றீட் என்ற கிளர்ச்சிக்காரக் கவிஞரது சொற்கள்.

பாராளுமன்றச் சனநாயகம் பற்றி இதினும் பொழிப்பான விமர்சனம் எதையும் காணுவது கடினம். பாராளுமன்றம் என்பது ஒரு நாடக மேடை. வசனங்களை யார் எழுதி வாசித்தாலும் கதையின் முடிவு வேறெங்கேயோ எழுதி முடிவு செய்யப்பட்டது தான். இந்த நாடகம் மிகச் சிறப்பாக நடத்தப்படும் இடம், பாராளுமன்றங்களின் தாயாகக் கருதப்படும் வெஸ்ற்மின்ஸ்ற்றில் உள்ள பிரித்தானியப் பாராளுமன்றமே. அங்கு தீவிரமான கருத்து மோதல்களும் சூடான விவாதங்களும் கடுமையான கண்டனங்களும் புழங்கினாலும் பாராளுமன்ற உறுப்பினர்களால் மிகுந்த நட்புடன் கட்சி வேறுபாடு இல்லாமல் நடந்து கொள்ள முடியும்.


ஒடுக்குகிறவர்களது பிரதிநிதிகளும் ஒடுக்கப்படுகிறவர்களது பிரதிநிதிகளும் பண்பாகவும் அன்பாகவும் பழக முடியுமா? பொது வாழ்வில் கடைப்பிடிக்கப்படும் அடிப்படையான சமூக நடத்தை விதிகளைப் பேணுவதற்கு மேலாக உண்மையான மரியாதைக்கோ அன்புக்கோ அபிமானத்துக்கோ இடமில்லை. பாராளுமன்றப் பண்பாட்டு நாடகத்தைச் சில காலத்துக்கு நன்கு நடத்த முடியும். ஆயினும் அதை நீண்ட காலத்துக்கு நடத்துவதிற் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஏனெனிற், பாராளுமன்ற அரசியல் நாடகத்தை எப்போதும் ஒரே மாதிரியாக நடத்த முடியாது. பாராளுமன்றப் பிரதிநிதிகளாக உலா வந்த கனவான்களால் வெகுசனங்களுக்கு நம்பகமான முறையில் பாராளுமன்ற அரசியல் நாடகத்தை நீண்ட காலமாக நடத்த இயலவில்லை. எனவே மக்கள் மத்தியிலிருந்து மக்கள் பிரதிநிதிகள் போன்றவர்கள் உருவாக்கப்படுகின்றனர். இது அதிகாரவர்க்கம் தானாக விரும்பிச் செய்கிற காரியமல்ல. ஆனால் தனது நலன்களைத் தனது வர்க்கத்தவர்களைப் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக வைத்து முன்னெடுக்க இயலாதபோது சிறுமுதலாளி வர்க்கத்திலிருந்து தனது நலன்களைக் காக்கக் கூடிய அரசியல் வாதிகளை உருவாக்கி வளர்க்கிறது. சில சமயங்களில் வர்க்க உதிரிகளைக் கூடத் தனது கட்சியின் முன்வரிசைக்குக் கொண்டுவருகிறது.

1947 முதல் 1956 வரை யூ என்.பி. பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கட்கும், 1960க்குப் பின்பு ஏற்பட்ட மாற்றங்களின் தொடர்ச்சியாக குறிப்பாக 1977ம் ஆண்டுக்குப்பின்பு பாராளுமன்ற உறுப்பினர்களாக வந்தவர்கட்கும் வர்க்கப் பின்னணியில் மிகுந்த வேறுபாடு உண்டு. எனினும் அன்றைய யூஎன்.பியை விட இன்றைய யூஎன்.பி தீவிரமாகப் பெருமுதலாளிய நலன்களையும் ஏகாதிபத்திய நலன்களையும் முன்னெடுக்கிறது.

தேசிய முதலாளிய நலன்களை முன்னெடுத்த ஸ்ரீ.ல.சு.கட்சி 1956ல் சில கீழ்நடுத்தர வர்க்க வேட்பாளர்களை முன்னிறுத்தியது. எனினும் அக்கட்சியின் தலைமை எப்போதுமே மேட்டுக்குடிகளின் கையிலேயே இருந்து வந்தது. பின்னாளில் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரியப்படுவோரின் வர்க்கப் பின்னணியும் அமைச்சர் பதவி வகித்தோரின் வர்க்கப் பின்னணியும் பெருமளவில் வேறுபட்டவை என்று கூற இயலாது. எனினும் 1980 வரை நிச்சயமாக இரண்டு கட்சிகளும் வெவ்வேறு விதமான முதலாளிவர்க்க நலன்களைப் பேண முற்பட்டன.

பழைய இடதுசாரிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் வசதிபடைத்த உயர் நடுத்தரவர்க்க குடும்பப் பின்னணியை உடையவர்களாக இருந்தனர். ஜே.வி.பியினரது பின்னணி நடுத்தரக் கீழ் நடுத்தரப் பின்னணியாக இருந்த போதும், ஒடுக்கப்பட்ட மக்களது நலன்களைப் பழைய இடதுசாரிகள் முன்னெடுத்த அளவுக்குக் கூட முன்னெடுக்க ஜே.வி.பியினரால் இயலவில்லை.

எனவே பாராளுமன்றப் பிரதிநிதிகளது தனிப்பட்ட வர்க்க அடையாளங்களை விட ஒவ்வொரு கட்சியினதும் உலகநோக்கும் நிலைப்பாடும் சமூக நடைமுறையும் முக்கியமானவை. அதே வேளை, பாராளுமன்றப் பிரதிநிதிகளது வர்க்க அடையாளத்தை விட இன்னொரு அம்சமும் முக்கிய பங்களித்தது. தேர்தலில் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காக வேட்பாளர்கள் பொய் வாக்குறுதிகட்கும் மேலாகக் கள்ளவாக்கு லஞ்சம் மிரட்டல் போன்றவற்றையும் பயன்படுத்துவது படிப்படியாகக் கூடி வந்துள்ளது.



1977ம் ஆண்டு யூஎன்.பி ஏகப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்ற பிறகு அப்பட்டமான முறையில் தேர்தல் விதிகள் மீறப்பட்டன. ஒரு யூஎன்.பி பாராளுமன்ற உறுப்பினர் 1982 அளவில் ஒரு சாவடியில் துப்பாக்கியைக் காட்டி அலுவலர்களை மிரட்டியதும் திரிபுவாத கம்யூனிஸ்ட் தலைவர் பீற்றர் கெனமனின் வாக்கை ஒருவர் கள்ளமாக இட்டதும் தேர்தல் விதிகளைப் பகிரங்கமாகவே அவமதிக்க அன்றைய ஆட்சி கூசவில்லை என்பதை எடுத்துக்காட்டியது. சட்டத்தையும் நீதியையும் அவமதிக்கும் முறையில் நடந்து கொண்ட பொலிஸ் அதிகாரிகட்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டது முதல் நீதித்துறை நியமனங்கள் வரை, அரசாங்கம் சட்டத்தை அவமதித்து வந்தது. 1977வரை எல்லாமே சட்டப்படியும் ஒழுங்கீனங்கள் இல்லாமலும் நடந்தன என்று யாருஞ் சொல்ல முடியாது. எனினும் படிப்படியாக அதிகரித்து வந்த தேர்தல் வன்முறையும் ஒழுங்கீனங்களும் 1977க்குப் பிறகு வெளி வெளியாகவே ஏற்கப்பட்ட தேர்தல் அரசியல் நடத்தையின் ஒரு பகுதியாகிவிட்டன. 1977ம் ஆண்டுக்குப் பின்பு நடத்தவை பாராளுமன்ற அரசியலின் சீரழிவின் தொடர்ச்சியே ஒழிய எந்த விதமான திசை மாற்றமும் என்று கூற இயலாது. இவ்வாறான போக்கு உலகின் பெரிய சனநாயக நாடு எனப்படும் இந்தியாவின் பெருவாரியான மாநிலங்களிலும் காணப்படுகிறதை நாம் அறிவோம். பிற தென்னாசிய நாடுகளிற் சிலவற்றில் அதனிலும் மோசமான நிலைமையைக் காண லாம். பாராளுமன்றத்தினுள் சண்டித்தனம் அதிகமானதற்கு ஒரு காரணமாகப் பாராளுமன்ற நிகழ்வுகளைத் தொலைக் காட்சியில் காட்டுவதைச் சிலர் குறிப்பிடுகின்றனர். இது பாராளுமன்ற அரசியலின் சீரழிவின் அடிப்படையான காரணத்தை விளங்கிக்கொள்ளத் தவறியதன் விளைவுதான்.

பாராளுமன்ற சனநாயகத்தின் சீரழிவு குறித்து அதிகார வர்க்கத்துக்குக் கவலை இல்லை. எனென்றால் அதனுடைய நலன்கள் பாராளுமன்ற சனநாயகம் வரன் முறையாக நடப்பதிற் தங்கியிருக்கவில்லை. பாராளுமன்ற அரசியலின் மீது மக்கள் அவநம்பிக்கையடைவதன் மூலம் அரசியலின் மீதே நம்பிக்கை இழப்பது அதிகார வர்க்கத்துக்கு வசதியானது. இதன் மூலம் தேவையான போது ஒரு இராணுவ சர்வாதிகாரத்தை அதிக எதிர்ப்பில்லாமலே நிலைநிறுத்த இயலுமாகிவிடும்.

பாராளுமன்ற அரசியலின் சீர்குலைவுக்கு முதலாளிய பொருளாதாரத்

**—மோகன்—**

தினதும் சமூக அமைப்பினதும் சீர்குலைவுக்கும் நெருக்கமான உறவு உள்ளது. பாராளுமன்ற அரசியல் வாதிகள் குற்றச் செயல் புரிவோரின் ஆதரவிற் தங்கியிருந்த நிலையின் தொடர்ச்சியாகக் குற்றச்செயல் புரிகிறவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டே தமது அரசியல் நடவடிக்கைகளைத் தொடர முடிந்தது. தேர்தல்களில் கோடிக்கணக்கில் செலவாகும் பணத்தை வழங்குவோர் பதிலுக்கு அதற்கும் அதிகமாகவே பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்தும் அமைச்சர்களிட மிருந்தும் எதிர்பார்க்கிறார்கள்.

கள்ளச்சந்தை போதை மருந்து ஆயுதக் கடத்தல் போன்ற பல்வகையான சமூக விரோதச் செயல்கள் மூலம் பணங் குவிக்கிறவர்கட்கும் பாதாள உலகம் எனப்படும் வன்முறைக் கும்பல்கட்கும் பாராளுமன்ற அரசியல்வாதிகட்குமிடையிலான நெருக்கம் போர்ச் சூழலால் மிகவும் வலுவடைந்துள்ளது. ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தங்கக் கட்டிகளைக் கடத்திச் சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்ட பின்பும் அவருக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படாதது முதற்கொண்டு அண்மையிற் களியாட்ட விடுதியொன்றின் மீது தாக்குதல் தொடுத்த ஒரு அமைச்சர் மீது விசாரணை நடத்தப்படாதது வரை பாராளுமன்ற அரசியல் வாதிகளது அதிகாரத் துஷ்பிரயோகம் வரம்பு மீறி வருகிறது.

தட்டிக் கேட்க ஆளில்லாததால் இந்த அரசியல் சண்டியர்களது தவறான நடத்தை அந்த அதிகாரத்தின் தளமாக உள்ள பாராளுமன்றத்தினுள்ளும் கூடிக் கொண்டே போகிறது. பாராளுமன்றச் சனநாயகம், பாசாங்கான சனநாயகங் கூட அல்ல என்பது இன்றைய யதார்த்தம். அதைப் பற்றி எந்த விதமான வெட்கமும் பாராளுமன்ற அரசியல்வாதிகளிடம் இல்லை. இது பற்றி அவர்களுக்கு அக்கறையும் கிடையாது. அது நம் கவலையல்ல. அரசியல் என்பதே அருவருப்பானது. என்ற எண்ணம் மக்களிடம் ஏற்படாமல் மாற்று அரசியல் ஒன்று இன்று உருவாகத் தவறிவிட்டது தான் கவலைக்குரியது. இருப்பினும் அரசியல் என்பது சீரழிந்து நாறி நாற்ற மெடுக்கும் முதலாளித்துவப் பாராளு மன்ற அரசியலுக்கும் அப்பால் பரந்து பட்ட உழைக்கும் மக்கள் அனைவரினதும் விடுதலைக்கும் சமூகமாற்றத்திற்கும் வழிகாட்டக் கூடிய மக்கள் அரசியலாக உள்ளது என்ற உண்மையை மக்கள் மத்தியில் [illegible]த்துச் செல்ல வேண்டும்.

# இந்தியப் பாராளுமன்றத்தில் குற்றவாளிகள்?

இம்முறை இந்தியாவின் பாராளுமன்றதிற்குத் தெரிவான 540 பேர்களில் கிட்டத்தட்ட நான்கில் ஒருவர் ஏதோ ஒரு விதத்தில் குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள். சிலர் கொலைகார, வேறு சிலர் பாலியல் வன்முறையாளர். வேறு சிலர் ஊழல்மோசடி செய்தோர். பெருந்தொகைக் கப்பம் பெற்றவர்களும் உள்ளனர். இவர்கள் தான் உலகின் பெரிய ஜனநாயக நாடு எனச் சிலரால் வர்ணிக்கப்படும் இந்தியாவின் ஜனநாயத்தை வழிநடாத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள்.

கிட்டத்தட்ட இந்த விவகாரங்களில் இந்தியாவின் சகல அரசியற் கட்சிப் பா. உ. களும் சம்பந்தப்பட்டுள்ளனர். குற்றஞ் சுமத்தப்பட்டோரில் அரைவாசிப்பேர் பிரதமர் மன்மோகன் சிங்கின் முற்போக்கு கூட்டணியில் அங்கம் பெறுவோராவர். குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் ஆகக் குறைந்தது ஐந்து வருட சிறைத்தண்டனைக்குரிய குற்றவாளிகள். இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர்களில் 23.2 வீதமானவர்கள் குற்றப்பத்திரிகை பெற்றவர்கள். பிரதமர் சிங் குற்றமற்றவர் என்று ஒரு தோற்றப்பாடு உடையவர். ஆனால் அவருடைய அரசாங்கம் ராஸ்திரிய ஜனதா தள் போன்ற மாநிலக் கட்சிகளின் ஆதரவுடன் உயிர் வாழ்கிறது. தகவல்களின் படி இந்தக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பல்வேறு குற்றங்கள் சுமத்தப்பட்டவர்கள். அவர்களில் 23 எம்பிக்களில் அரைவாசியினர் குற்றவாளிகள் எனத்தீர்ப்பு வழங்கப்பட்டு மேன்முறையீடு செய்யப்பட்டவர்கள். இந்திய தேர்தல் சட்டத்தின்படி குற்றஞ் சுமத்தப்பட்டவர்கள். குற்றம் நிரூபிக்கும் வரை எம். பி.யாக இருக்கலாம். இந்தியாவின் நீதித்துறையானது தீர்ப்பு வழங்காமலே ஏகப்பட்ட வழக்குகளைக் கொண்டுள்ளது. எம். பி. மாருக்கெதிரான தீர்ப்பு வழங்குவதென்பது பல வருடங்கள் தாமதப் படுத்தப்படும் வழக்கத்தையுடையது. அண்மையில் ஊழலுக்கு எதிரான மசோதா ஒன்றை சபையில் சமர்ப்பிப்பதற்கு சிங்கின் அமைச்சரவை தீர்மானித்தது. இரண்டு அமைச்சர்கள் பிரசன்னமாயிராததால் விடயம் பரிசீலனைக்கு எடுக்கப்படவில்லை. இந்தச் சட்ட மூலமானது முப்பது வருடங்களாக விவாதிக்கப்பட்டு வருகின்றபோதும் இதுவரை அதற்கு உயிர் ஊட்டப்பட வில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களில். அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் ஐம்பது இலட்சம் ரூபாய் சொத்துக்கள் உடையவர்கள். இந்தியாவின் இருபத்தைந்து கோடி மக்கள் தினமொன்றிற்கு நூறு ரூபாய்க்கு குறைந்த வருமானத்தையே பெற்று உயிர் வாழ்கின்ற நிலையில் ஐம்பது லட்சம் ரூபாய் சொத்து என்பது எத்தனை பிரமாண்டமானது என்பதை ஊகித்துக் கொள்ளலாம். இந்தியாவில் நீண்ட கால ஆட்சி செய்த இந்தியக் காங்கிரசின் அரசியல் தலைவர்கள் பிரமுகர்கள் சகல பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்தச் சொத்துக்களின் அரைவாசிச் சொத்துக்களைக் கொண்டுள்ளனர். இந்தியாவின் பாராளுமன்ற கம்யூனிஸ்ட் அரசியல் வாதிகளே குறைந்த சொத்துடையவர்கள். அவர்களுடைய சொத்து பத்து இலட்ச ரூபாய்க்கும் கீழானது. பாராளுமன்ற அரசியலுக்கு பணம் எனும் சொத்தின் தகுதி முக்கியமானது. இந்தியாவின் இருபத்தாறு கோடி மக்கள் முழுமையான உணவோ, அடிப்படைச் சுகாதார வசதியோ, குடிநீர் வசதியோ அற்றவர்கள். அதேவேளை உறுப்பினர்களின் அடிப்படைச் சம்பளம் பன்னிரண்டாயிரம் ரூபாய்கள். அவர்களுக்கு இலவச விமான புகையிரத டிக்கட்டுக்கள், மின்சாரம், நீர் என்பவற்றுடன் குறைந்த செலவில் வீடும் கிடைக்கிறது. இவை வெளிப்படையான சட்டரீதியான வழிகளில் கிடைப்பவைகள். ஆனால் மறைமுக வழிகளில் பெறும் பணம் சொத்துக்களுக்கு அளவே கிடையாது. எம். பிக்களில் அரைவாசிப்பேர் பொது நிறுவனங்களிடமிருந்து பெற்ற பெருந்தொகைக் கடன்களை செலுத்த வேண்டியுள்ளனர். கடன் தொகையில் பதினான்கு (14) சதவீதமானவை அரச திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாகும்.

மேற்படி விபரங்களை சுயாதீன அமைப்பு ஒன்று ஆய்வுத் தகவல்களாகத் தந்துள்ளது. இதனை பாராளுமன்ற அரசியலின் பதச் சோறாக எடுத்து நோக்கினால் நமது இலங்கைத் திருநாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களின் அமைச்சர்களின் பணச்சேர்ப்பும் சொத்துக்களின் குவிப்பும் மட்டுமன்றி கொலைகள், பாலியல் வன்முறைகள், பணமோசடிகள், பாதாள உலகத்தொடர்புகள் என இன்னும் பலவற்றையும் ஊகித்துக் கொள்ளலாம். வெறும் ஊகிப்பு மட்டும் போதாது. உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் முன் இவை அம்பலப்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் பாராளுமன்ற ஜனநாயகத்தின் அம்மணத்தை மக்கள் கண்டு கொள்ள வைக்கலாம்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



இன்றைய சர்வதேசியச் சூழலில் சோஷலிச அமைப்பைப் பாதுகாத்து ஏகாதிபத்தியத்தின் சகல தடைகளையும் ஊடுருவல்களையும் எதிர்த்து கியூபா நாடு முன்னிலையில் நிற்கின்றது. கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் தோழர் ஃ பிடல் காஸ்ரோவின் வழி காட்டலில் சோஷலிசத்தின் பெறுபேறுகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

இவ் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கியூபாவின் 46வது தேசிய தினமாகும் . ஒருகோடி பன்னிரண்டு லட்சம் சனத்தொகை கொண்ட கியூப நாடு கடந்த நாற்பத்தியாறு ஆண்டுகளில் சோஷலிசத்தை உறுதியாகக் கடைப்பிடித்து முன்மாதிரி காட்டி வந்துள்ளது. அதன் பிரதான உற்பத்தியும் ஏற்றுமதியும் நிக்கல், சீனி, புகையிலையாகும். திட்டமிட்ட பொருளாதாரம் சோஷலிசப் பொருளாதாரமாக வளர்ச்சி கண்டு நிற்கிறது. இதில் குறிப்பிடவேண்டிய முக்கிய அம்சம் என்னவெனில் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக அமெரிக்கா கியூபா மீதான பொருளாதாரத் தடைகளை மேற்கொண்டு வந்த போதிலும் கியூப மக்களை அடிபணியச் செய்ய முடியவில்லை என்பதாகும்.

# எழுந்து நின்று வரும் சோஷலிச கியூபா

கியூபா நாட்டின் ஆயுதப்படைகளது பிரதான தளபதியாகவும் ஜனாதிபதியாகவும் இருந்து வரும் தோழர் ஃ பிடல் காஸ்ரோ கடந்த டிசம்பர் 5ம் திகதி தலை நகர் ஹவானாவில் இடம் பெற்ற கம்யூனிஸ்ட் இளைஞர் கழகத்தின் 8வது காங்கிரசில் விஷேட உரை ஒன்றினை நிகழ்த்தினார். அவ்வுரையில் தோழர் காஸ்ரோ கடந்த காலங்களில் வெவ்வேறு நிகழ்ச்சிகளில் தான் ஆற்றிய உரைகளில் குறிப்பிட்ட விடயங்களை மீளவும் நினைவுபடுத்தினார்.

''எண்ணக் கருத்துக்கள் பொது சேவையில் ஈடுபட்டுள்ள பிரமுகர்களைச் சுற்றி வலம் வருகின்றன என்பதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை– அதற்கு எதிர்மாறகவே விடயங்கள் இடம் பெறுகின்றன.


நான் பல எதிர்வுகளைக் கூறிவந்துள்ளேன் அவை நிரூபணமாகிவிட்டதாக மக்கள் ஏற்றுக்கொள்கின்றனர். எனது அனுபவங்களிலிருந்து பெறப்பட்டவையே அந்த எதிர்வுகளாகும். நான் இளமையிலேயே இறந்து போயிருக்க வேண்டியவன். கியூபாவின் சரித்திரத்தில் ஏராளமான புரட்சி வாதிகள் தமது இன் உயிர்களைத் தியாகம் செய்தனர். நேற்றைய எதிரிகளும் இன்றைய எதிரிகளும் இந்த இலக்கை அடைவதற்கு -என்னைக் கொல்வதற்கு- பகீரதப் பிரயத்தனம் செய்தனர். 1953லிருந்து வெற்றிகரமாக போராடி வெற்றிபெற்றேன். போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஆயுதங்களைப் பெறுவதற்காக சந்தியாகோ டீ கியூபா தளத்தைத் தாக்கி ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ளத் திட்டமிட்டோம். இந்த வெற்றியின் பெருமை எனக்குரியதல்ல. எமது இலட்சியத்திற்காக உயிர்த்தியாகம் செய்தவர்களுக்கு இந்தப் பெருமை சாரும்.

1997 ஒக்டோபர் 10ம் திகதி இடம் பெற்ற கட்சியின் 5வது மகாநாட்டில் நான் பின்வருமாறு கூறினேன்:-

''நாம் மக்களுக்கு நேரடியாகச் சேவை செய்ய வேண்டும். பத்திரிகை, தொலைக்காட்சி, மகாநாடுகள் அல்லது அரசியற் கூட்டங்கள் என்பவற்றை விட அதிகமாக வேலை செய்ய வேண்டும். ஒவ்வொருவராக தனித்தனியே மக்களை நம்பிக்கைக்கு பாத்திரமாக்கி வழிப்படுத்த வேண்டும். இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. மதங்கள் இவ்வாறு தான் தோற்றுவிக்கப்பட்டன. அதனாலேயே ஆயிரமாயிரம் வருடங்களாக அவை நிலைத்து நிற்கின்றன. புரட்சிவாதிகளாகிய நாமும் இதையே செய்ய வேண்டும். எமது ஊழியர்களும் இளைஞர்களும் இதையே செய்ய வேண்டும். எதையும் தேவையற்றவை என எண்ணிவிடக் கூடாது. அரசியல் வேலையைச் சுலபமாகச் செய்யமுடியாது. இங்கும் உலகிலும் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்வதில் நாம் முழுமையாக ஈடுபட வேண்டும். நாம் வெளிப்படையாகவும் தைரியமாகவும், உண்மையாகவும் இருக்கவேண்டும்.

எங்கள் புரட்சி தினமும் மீள இடம் பெறுகிறது. எந்த இலட்சியத்திற்காக நாம் நிற்கிறோமோ, எந்த நீதியை நாம் பாதுகாக்கிறமோ, எந்த நோக்கத்திற்காக போராடுகிறோமோ அந்த நோக்கத்தையே உலகில் உள்ள கோடானு கோடி மக்களும் கொண்டுள்ளனர் என இளைஞர்களுக்கு தோழர் காஸ்ரோ தனது உரையில் சுட்டிக்காட்டினார்.

கியூபாவின் கல்வி சம்பந்தமாகக் காஸ்ரோ தனது உரையில் ''நடுத்தர உயர் பாடசாலை மாணவர்களுக்கு சிற்றூண்டி அல்லது மதிய போசனம் இலவசமாகக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.



2004 டிசம்பர் 2ம் திகதியிலிருந்து 591 நகர்ப்புற நடுத்தர பாடசாலைகளைச் சேர்ந்த 307, 339 மாணவர்களும் 38, 246 ஊழியர்களும் இலவச சிற்றுண்டியைப் பெற்று வருகின்றனர். இத்திட்டத்தில் மேலும் 83 நடுத்தர பாடசாலை மாணவர்களும் 2005 முதல் 3 மாதத்திற்குள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இன்று ஓர் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் இருபது மாணவர்களுக்கு மட்டுமே பொறுப்பாய் இருக்கிறார். அந்த ஆசிரியரால் மாணவர்கள் மேல் பிரத் தியேக கவனம் செலுத்த முடிகின் றது. இம் மாணவர்களின் கல்விக்காக தொலைக் காட்சிப் பெட்டிகளும், வீடியோக்களும் கம்பியூட்டர்களும் வழங்கப்பட்டுள்ளன. நவீன கருவிகள் வசதியற்ற மாணவர் எவரும் இன்று கியூபாவில் இல்லை. ஆரம்ப மட்டத்திலேயே கம்பியூட்டர் விஞ்ஞானம் புகட்டப்படுகிறது.12, 958 ஆசிரியர்களுக்கு கம்பியூட்டர் விஞ்ஞானத்தில் தீவிர பாடநெறிகளில் பயிற்றுவிக்கப்பட்டு கம்பியூட்டர் நெறிபுகட்ட நியமிக்கப்பட்டுள்ளனர். ஆரம்பபாடசாலை ஆசிரியர்கள் குறித்த கம்பியூட்டர் பாடநெறி புகட்டப்படுகின்றனர். பாடசாலைகளில் 15 வயதுக்கு கீழுள்ள மாணவர்களின் நிறை, போசாக்கு சம்பந்தமாக 2001 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது அண்மையில் நாட்டின் சகல குழந்தைகள் சம்பந்தமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவற்றின் போசாக்கு நிலைமை, பாடசாலைக்கல்வி, குடும்பம், வாழும் சூழல் என்பன கவனித்து தீர்வு காணப்பட்டது. இதன் பயனாக நான்கு வருடங்களுக்கு முன் இருந்ததைவிட ஆரம்பபாட சாலை மாணவர்களில் 2.2 மடங்கு மாணவர் கணிதத்தையும், 1.5 மடங்கு மாணவர் ஸ்பானிய மொழியையும் கற்கின்றனர். சகல பிள்ளைகளும் எங்கிருந்தாலும், எந்த நிறத்தவரென்றாலும், எந்த சமூக சூழலைக் கொண்டிருந்தாலும் கற்பதற்கு சம வாய்ப்பைக் கொண்டுள்ளனர்.



ஏழாம், எட்டாம், ஒன்பதாம் தரத்திலுள்ள மாணவர்களுக்கு வித்தியாசமான கல்வி மாதிரிகள் புகுத்தப்பட்டுள்ளன. இந்த மாதிரியானது முன்னைய கல்விக் கோட்பாடுகளிலிருந்து வேறுபட்டது. இந்த நிலைகளில் வழங்கப்படும் கல்வியானது ஏனைய நாடுகளில் ஒரு நெருக்கடியைத் தோற் றவித்துள்ளது. பாடசாலை மட்டத்தில் 15 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் ஆங்கிலம் உடற்கல்வி தவிர்ந்த எல்லாப் பாடங்களையும் புகட்டுவார்.

17 லிருந்து 30 வயதுள்ளவர்களுக்கு இரண்டாம் நிலைக் கல்வியில் புதிய பாடநெறிகள் புகுத்தப்பட்டு கல்வித்தகமை உயர்த்தப்படுகிறது. 150,000 மாணவர் இத்திட்டத்தில் கல்விகற்கின்றனர். இத்திட்டத்தில் உள்ள மாணவர்களின் வயது. தேவைக்கு ஏற்பகொடுப்பனவும் மேற்கொள்ளப்படுகிறது. இவர்களில் 48, 406 பேர் பல்கலைக் கழகங்களில் படிப்பைத் தொடர்கின்றனர்.

சகலருக்குமான பல்கலைக்கழகத்தில் 2000ம் ஆண்டு ஒக்டோபர் 2ம் திகதி தொலைக்காட்சி மூலம் கல்வி புகட்டப்படுகிறது. இந்த பல்கலைக்கழகம் நாட்டில் பெரிய பல்கலைக் கழகமாக விளங்குகிறது. இப் பல்கழகத்தில் 43 பாட நெறிகள் உள்ளன. இதில் 6 பாட நெறிகள் தொலைக் காட்சி மூலம் ஒளிபரப்பப்படுகிறது. இந்தப்பல்கலைக்கழகத்தில் 777 பேராசிரியர்கள் உள்ளனர். இவர்களில் 265 பேர் கலாநிதிகளாவர். 134 பேர் முதுமானிப்பட்டதாரிகள் தரத்தை உடையவர்கள். சீனாவிடமிருந்து வருடந்தோறும் ஒரு இலட்சம் கணனிகள் கொள்வனவு செய்யப்படுகின்றது. இது சிறுவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காகப் பயன் படுத்தப்படுகிறது. கியூ பாவின் தொலைக்காட்சி வாரந்தோறும் 394 மணித்தியாலங்கள் கல்வி ஒளிபரப்பை மேற்கொள்கின்றது. இது கியூபாவின் தொலைக்காட்சி ஒளிபரப்பில்62.7 வீதமாகும்.

கியூபாவின் 23,413 டாக்டர்களும் மருத்துவ ஊழியரும் 66 நாடுகளில் மனிதாபிமான உதவிப்பணியில் ஈடுபட்டுள்ளனர். பிராந்தியத்தில் நாடான கெயிட்டியில் மாத்திரம் 450 கியூப டாக்டர்கள் பணியாற்றுகின்றனர்.

எமது இளைஞர்களில் 557, 298 பேர் இன்று இளைஞர் இயக்க அங்கத்தவர்களாக உள்ளனர். 49, 054 இளைஞர் சங்க கிளைகள் உள்ளன. இந்த இளைஞர்கள் 30 வயதையடையும் போது 100பேரில் 63 பேர் கட்சிக்கு அங்கத்தவர்களாகின்றனர். கட்சிக்கு 133, 283 புதிய உறுப்பினரை இளைஞர் அமைப்பு வழங்கியுள்ளது. 215 இளைஞர் கட்சியின் முழு நேர ஊழியர்களாகியுள்ளனர். அமெரிக்காவின் அக்கிரமிப்பு முயற்சியோ, சோஷலிச முகாமின் சிதைவோ அமெரிக்கா உலகின் ஒரே வல்லரசாகியமையோ கியூப நாட்டு மக்களின் போராட்ட உணர்வை மழுங் கடிக்கவுமில்லை பணியவைக்க முடியவுமில்லை. என்றும் தமதுரையில் குறிப்பிட்டார்

# சமாதான நடவடிக்கைகளால் பாலஸ்தீனம் எழுந்ததா வீழ்ந்ததா?

27 ஆண்டுகளுக்கு பிறகு யாசீர் அரபாத் 1994ல் யூலை மாதம் 1 ஆம் திகதி காசப் பகுதிக்கு பாலஸ்தீன அதிகார சபையின் தலைவராகவே திரும்பினார். 1993 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கையின் விளைவாகவே அது சாத்தியமானது.

ஜெருசலேமை தவிர மேற்கு கரையின் பகுதியையும், காசாவின் பகுதிகளையும் திருப்பி ஒப்படைக்க அன்றைய இஸ்ரேலிய தலைவர் றாபின் இணைக்கம் தெரிவித்திருந்தார். அரபாத் ஜெருசலேமையும் கேட்டிருந்தாலும் அது பற்றி முடிவெடுக்கப்படாமலேயே பாலஸ்தீனத்தில் இடைக்கால நிர்வாகத்தை கொண்டு நடாத்த பாலஸ்தீன அதிகாரசபை ஏற்படுத்தப்பட்டது.

இஸ்ரேலிய ஸீயோனிஸவாதிகளால் வளர்க்கப்பட்ட பாலஸ்தீன இஸ்லாமிய மத அடிப்படை வாதத்தை கொள்கையாகக் கொண்ட ஹமாஸ் இயக்கம் சமாதான நடவடிக்கைகளை எதிர்ப்பதாக ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இவ்வியக்கம் அரபாத்தின் தலைமைக்கு இடைஞ்சல் கொடுப்பதற்காகவே வளர்க்கப்பட்டது. சமாதான உடன்படிக்கைக்கு முன்னதாக சிறிது காலத்திற்கு முன்பிருந்தும் பின்னரும் கடுமையான ஆயுதத் தாக்குதல் நடவடிக்கைகளில் ஹமாஸ் இயக்கம் ஈடுபட்டு வந்தது.

அத்துடன் சோவியத்யூனியன் முற்றாக சிதைந்த பிறகு இருந்த சர்வதேச சூழல் அரபாத்தின் தலைமையில் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க கூடியதாக இருக்கவில்லை. அமெரிக்காவினதும் மேற்கு நாடுகளினதும் அழுத்தங்களும் அதிகரித்திருந்தன. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான் அரபாத் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். அந்த எதிர்பார்ப்பு சிறிதளவாது நிறைவேறியது எனலாம்.

**~இ.தம்பையா~**

சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இஸ்ரேலிய பிரதமர் றாபின் தேசத்துரோகி என்று சுட்டுக் கொல்லப்பட்டப்பிறகு பிரதமரான சிமோன் பெரஸ் பல அழுத்தங்களுக்கு மத்தியிலும் சில நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.1996 மே 29 இல் நடைபெற்ற தேர்தலில் லிக்குட் கட்சியின் தலைவர் பெஞ்சமின் நெட்டன்யாகு பிரதமராக தெரிவு செய்யப்பட்டார். அவர்சமாதான நடவடிக்கைகளை சீர்குலைத்தார். ஒஸ்லோ உடன்படிக்கையின் படி பாலஸ்தீன ஆளுகைக்கு உட்பட வேண்டிய ஹெப்பிறோன் நகரில் இஸ்ரேலிய குடியேற்றங்களை செய்தார். காசாப்பகுதியில் யுத்தத்தை திணித்தார். இதனால் அரபாத்தின் தலைமையும் ஆயுத நடவடிக்கைகளில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானது. இதனால் தொடர்ச்சியாக யுத்தம் நடத்தப்பட்டு இஸ்ரேல் பகுதியில் பாலஸ்தீனர்களுக்கு கிடைத்திருந்த வேலைவாய்ப்பு முற்றாக மறுக்கப்பட்டது.

எகுட் பராக் பிரதமரான பிறகு சில சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கு கரையில் சில பகுதிகள் பாலஸ்தீனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. தென் லெபனானிலிருந்து இஸ்ரேலியப்படை வாபஸ் பெறப்பட்டது. அத்தோடு 2003 ஆண்டு செப்டெம்பர் 13 ஆம் திகதி பாலஸ்தீன பிரகடனப்படுத்துவதாக இருந்தது. ஆனால் அமெரிக்காவில் எகுட் பராக்கிற்கும் யாசீர் அரபாத்திற்கும் இடையில் 15 நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தையில் யாசீர் அரபாத் பாலஸ்தீன பகுதிகளை உள்ளடக்கிய சுதந்திர பாலஸ்தீனத்திற்கு குறைவாக எதனையும் ஏற்றுக்கொண்ட நிலையில் பாலஸ்தீன அரசை பிரகடனம் செய்யமுடியாது என்று உறுதியாக கூறிவிட்டார். அதனால் பாலஸ்தீன சமாதான உடன்படிக்கை மேலும் அசைய முடியாத நிலையில் விடப்பட்டது. அதனால் மீண்டும் இரத்தக்களரி ஏற்பட்டது.

அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் யாசீர் அரபாத்தையே குற்றஞ்சாட்டின. ஆனால் சமாதானத்தை இறுகப்பற்றிக் கொள்வதற்கு அவருக்கு சந்தர்ப்பமே கிடைக்கவில்லை என்பது தான் உண்மை. 1993 ஆம் ஆண்டு சமாதான உடன் படிக்கை என்ற பேரில் திணிக்கப்பட்ட விடயங்களையும் கூட நடைமுறைப்படுத்த இஸ்ரேல் தயாராக இருக்கவில்லை இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல்களை எல்லாம் செல்லப்பிள்ளையின் தவறைக் கண்டிப்பது போன்ற விதத்திலேயே அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் கண்டனங்களை தெரிவித்தன. ஆனால் பாலஸ்தீனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு தாக்குதல்களையும் பயங்கரவாதம் என்று உரத்தக்குரலில் கண்டனம் தெரிவித்தன.

இடைக்கால நிர்வாக சட்டத்திற்கு முரணாக மேற்குகரையில் குடியேற்றப்பட்டிருந்த 4 லட்சத்திற்கு மேற்பட்ட இஸ்ரேலியர்களை அங்கிருந்து குடியகற்ற இஸ்ரேல் பல புதிய நிபந்தனைகளை விதித்து வந்தது. இடைக்கால நிர்வாகத்தின் கீழ் பால ஸ்தீனர்களுக்கு வேலைவாய்ப்பு உட்பட பல உரிமைகளும்



வசதிகளும் உறுதி செய்யப்படவில்லை. நாளாந்த வாழ்க்கையை நடத்துவது கடினமாகவே இருந்தது. பாடசாலை, தபாற்கந்தோர், வைத்தியசாலை, தொலைபேசி வசதிகள், மின்சாரம் வழிபாட்டிடம் போன்ற அடிப்படை வசதிகள் பாலஸ் தீனர்களுக்கு இன்னும் பூரணமாகக் கிடைக்கவில்லை. அதாவது பாலஸ்தீன அதிகார சபை நிறுவப்பட்டு பத்து வருடங்களாகி விட்ட பின்பும் யுத்த அழிவுகளிலிருந்து இன்னும் பாலஸ்தீனர்களால் மீள முடிய வில்லை. அதிருப்தியடைந்திருந்த மக்களும் இளைஞர்களும் சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் இஸ்ரேலுக்கு எதிராக திரண்டெழுந்து எதிர்ப்பு களை காட்டத்தவறவில்லை. கற்களால் தாக்குவது முதல் பல எதிர் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதுவே இன்டிஃபாடா எனப்பட்டகையில் அகப்பட்டவற்றைக் கொண்டு இஸ்ரேலியப் படையினரை

தொடர்ச்சி 11ம் பக்கம்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# பேராசிரியர் கைலாசபதியும் பின் நவீனத்துவ வாதிகளும்

அண்மையில் பேராசிரியர் கைலாசபதி நினைவுச் சொற்பொழிவு ஒன்று கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றது. சுமார் இருபத்தைந்து பேர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் 'தமிழ் இலக்கியத்தில் விளிம்பு நிலை மக்கள்' என்ற தலைப்பில் கிழக்கு பல்கலைகழகத்தை சேர்ந்த பேராசிரியை திருமதி சித்திரலேகா மௌனகுரு உரையாற்றினார்.

கைலாசபதி நினைவுப் பேருரைக்கு ''விளிம்பு நிலை மக்கள்'' என்ற விடயம் பற்றி உரையாற்றியதன் உள்நோக்கம் என்ன என்று அவதானிக்கும் போது அவ் உரையில் கைலாசாதியின் இலக்கிய அரசியல் ஆளுமையை கொச்சைப்படுத்துவதும் சிதைப்பதும்தான் காரணம் என்பதைப்புரிந்து கொள்ளமுடிகின்றது.

மாக்சிச லெனினிச வாதிகள் அடிப்படையில் வர்க்கப் பேராட்டத்தை முன்னெடுப்பவர்கள். ஆனால் அப்போராட்டத்தில் தொழிலாள விவசாய உழைக்கும் வர்க்கத்தினர் மற்றும் பெண்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் அறிவுஜீவிகள் உட்பட பல்வேறு சமூகப் பிரிவினரும் ஒன்று படுகின்றனர். ஆனால் இதனை முதன்மைப்படுத்தாது பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படும் பெண்கள் பிச்சைக்காரர்கள் போன்றவர்கள் வர்க்கப் போராட்டத்தில் இணைக்கப்படாதவர்களாக உள்ளனர். இவர்கள் ஒதுக்கப்பட்டு ஓரம் கட்டப்பட்டவர்களாக இவ் விளிம்பு நிலை மக்கள் கவனிக்கப் படாதவர்களாக உள்ளனர். இவர்களை கவனித்து அடையாளப்படுத்தி அங்கீகரித்து ஆய்வுகள் செய்யப்பட வேண்டும் என்பதே சித்திரலேகாவின் கருத்தாக அமைந்திருந்தது. இக் கருத்தின் அடிப்படையில் விளிம்பு நிலை மக்கள் எவ்வாறு தமிழ் இலக்கியத்தில் காட்டப்பட்டுள்ளார்கள் என்பதை ஆய்வுரை செய்தார் பேராசிரியை.

சித்திரலேகாவின் உரையானது பேராசிரியர் கைலாசபதி வரித்துக கொண்ட மாக்சிச உலகப்பார்வையையும் அதன் அடிப்படையிலான சமூக மாற்றச் சிந்தனை செயற்பாடு போன்ற அம்சங்களையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் சாடுவதாகவே அமைந்திருந்தது. கைலாசபதி வாழ்ந்த காலப்பகுதியில் தேசிய முதலாளித்துவ சக்திகளும் முற்போக்கு சக்திகளும் மட்டுமன்றி புரட்சிகர சக்திகளும் எழுச்சியடைந்த காலம். இக்காலகட்டத்தில் வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் சாதிய தீண்டாமைக்கு எதிரான வெகுஜனப் போராட்டங்கள் ஒரு வரலாற்று தேவையாக இருந்தது. அதனை மாக்சிச லெனினிச வாதிகளே வழிகாட்டி முன்னெடுத்தனர்.

அக்காலகட்டத்தில் கைலாசபதி வழங்கிய பங்களிப்பு மிகவும் கனதியானதாகும். இதில் வேடிக்கை யாதெனில் இதே சித்திரலேகா போன்ற இன்றைய பெண்ணிய வாதிகளும், க.சண்முகலிங்கம், மௌனகுரு போன்ற நவ மாக்சியர்கள் எனத்தம்மைக் கூறிக் கொள்பவர்களும் கைலாசபதிக்குப் பின்னால் நின்றவர்களே என்பது தான். பேராசிரியர் கைலாசபதி தான் வாழ்ந்த காலத்தின் சமூக அசைவியக்கத்தை தனது மாக்சிச உலக நோக்கின் ஊடே மிகத்தெளிவாகக் கண்டு அதன் அடிப்படையில் அரசியல் இலக்கியத் தளங்களில் பகுப்பாய்வும் போராட்டங்களும் முன்னெடுக்கப்படுவதை தனது எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் வலியுறுத்தி வந்தவர். அதற்குரிய வலுவான ஆதாரங்களும் சாட்சியங்களும் அவரது வெளிவந்த படைப்புகளில் தெளிவாக இருந்தும் வருகின்றன. அவற்றை மறைத்து அல்லது அவற்றைத்திரித்து கைலாசபதியை சிறுமைப்படுத்தும் வகையிலே நாசுக்கான ஆய்வுகள் முன்வைக்கப்படுகின்றன. அதுவும் அவரது நினைவு எனக் கூறிச் செய்யப்படுவதுதான் வேதனை தரும் விடயமாகும்.

இவர்கள் யாவற்றையும் தனித்தனியாகப் பிரித்து பின் நவீனத்துவத்தைக் காட்டி மாக்சிசம் வற்புறுத்தும் ஒட்டு மொத்த சமூக மாற்றத்தை மறுதலித்து தாங்கள் ஏதோ புதிதாக ஒன்றை கண்டு பிடித்துள்ளோம் எனப் பறை சாற்றுவதாகவே அமைந்துள்ளது. இவர்கள் உதாரணம் பெறுவது தமிழகத்தின் சீரழிந்து போயிருக்கும் அ.மாக்ஸ் ராஜ் கௌதமன் போன்ற உதிரிகளையேயாகும். இவர்கள் உலகமயமாதலில் அள்ளுண்டு மாக்சியத்திலிருந்து விலகி சீரழிந்து உதவி பெறும் உதிரிக் கனவான்களாகிப் போனவர்கள். இவர்களைப் போன்றே இலங்கையிலும் கல்வியாளர்கள் சிலரை அடையாளம் காணமுடிகின்றது. இந்த மெத்தப்படித்த மேதாவிகள் இறுதியில் எங்கே சென்று நிற்பார்கள் யாருக்கு உதவுவார்கள் என்பதை அண்மைக்காலங்களில் தெளிவுறக் காண முடிகிறது.

தவிரவும் விளிம்பு நிலைமக்கள் பற்றிப் பேசுவது இவர்கள் குறிப்பிடும் மக்களை சமூக மாற்றத்திற்கான

## ஜெ.சற்குருநாதன்

போராட்டங்களில் ஒன்றிணைய விடாது தனிமைப்படுத்துவதற்கேயாகும். இது சாராம்சத்தில் முதலாளித்துவ ஏகாதிபத்திய நலன்கட்கு உதவக் கூடியதே அன்றி சமூக மாற்றத்திற்கோ விடுதலைக்கோ வழிவகுக்க மாட்டாது என்பதே நேர்மையான மாக்சிய ஆய்வாளர்களின் கருத்தாகும். விளிம்பு நிலை மக்கள் எனச் சுட்டப்படும் மக்களின் பிரச்சி னைகளை கவனத்தில் எடுத்து அவற்றை சமூக விடுதலையுடனும் சமூகப்புரட்சியுடனும் இணைக்க வேண்டும். அல்லாது விடின் வெறும் விளிம்பு நிலை என்ற முழக்கம் அவர்களை எதிப்புரட்சியில் சேர்த்துவிடும் அபாயத்தையே கொண்டிருக்கும். எனவே இவர்களை சமூகமாற்ற போராட்டத்தில் இணைத்து புரட்சிகர சக்திகளாக மாற்ற வேண்டும். பெண்களை பால் அடிப்படையில் பிரித்து நோக்கி பெண்ணியம் என்றும் சாதி தீண்டாமையைத் தலித்தியம் என்று கூறியும் வர்க்கப் போராட்டத்திலிருந்து பிரித்துக் காட்டுகின்றார்கள். இதன் ஊடே விளிம்புநிலை மக்கள் பற்றி கைலாசபதி ஆய்வு செய்யவில்லை அல்லது எடுத்துக கூறவில்லை என்றும் சுட்டிக் காட்டுவர். கைலாசபதி இறந்து 22வருடங்கள் பின்பாக இவர்களின் இவ்வாறான கண்டுபிடிப்புகள் மூலம் கைலாசபதியை நிராகரிக்க முற்படுகிறார்கள் என்றே கூறுதல் வேண்டும். இவர்களின் இவ்வாறான சீரழிந்த போக்கு அவர்கட்கே அபத்தமாக போய்விடும் என்பதை அறியார் போலும். பெண்விடுதலை என்பது ஆணாதிக்கத்திலிருந்து மட்டுமல்ல சகல சமூக அடக்கு முறைகளிலிருந்தும் விடுதலை பெறப் போராட வேண்டும் என்பதாகும். ஆணும் பெண்ணும் சரிநிகர் சமமாக நின்று சமத்துவத்திற்கும் சமூக அநீதிகள் அடக்கு முறைகளுக்கு எதிராகப் போராட வேண்டுமே ஒழிய பெண்கள் தனியாக நின்று ஆண்களே பிரதான எதிரிகள் என்ற அடிப்படையில் போராடுவது யதார்தமற்றதும் மாக்சிச விரோத நிலைப்பாடு கொண்டதுமாகும்.

இவ்வாறான மாக்சிச உலகப் பார்வைக்கு விரோதமாக மேற்கில் இருந்து வரும் சிந்தனை வடிவங்களை உள்வாங்கி அவ் அளவு கோல்கள் கொண்டு கைலாசபதி விளிம்பு நிலை பற்றி முன்வைக்கவில்லை வளர்த்தெடுக்கவில்லை என்று கூறுவது அபத்தமேயாகும். மாக்சியத்தை மறுதலித்து கைலாசியின் இலக்கிய அரசியல் தொடர்ச்சியையும் கனதியான பங்களிப்பையும் கேள்விக்கு உட்படுத்துவது இத்தகையவர்களின் சுய அடையாளங்கள் எவை என்பதை மக்கள் மத்தியில் எடுத்துக் காட்டப்படல் வேண்டும்.

இக்கூட்டத்தில் தலைமைதாங்கிய அமைச்சுச் செயலாளர் க.சண்முகலிங்கம். விளிம்பு நிலை பற்றிய ஆய்வுகளை நவீன மாக்சிய அறிஞர்களே ஆய்வுசெய்துள்ளனர் என்றும் மரபு வழி மாக்சியவாதிகள் அவர்களை கவனத்தில் எடுக்கவில்லை எனவும் கூறி கைலாசபதியும் மரபு மாக்சிய சிறைக்குள் வைத்தே நோக்கினார் என்றும் கூறினார். என்ன செய்வது? மாக்சியத்தை அறிவு பூர்வமாகவும் போராட்ட நடை முறைகளுடனும் இணைத்து நோக்காது நுனிப்புல் மேய்ந்து கொள்பவர்களின் இன்றைய நிலை மிகவும் பரிதாபமானதாகும். ஆனால் மாக்சியம் சமூக மாற்றத்திற்கான தத்து வதுவமாகும். அது சமூத்தின் அனைத்து பிற்போக்குவாத கருத்தியல்களையும் உடைத்து புதிய மானுடம் பிறக்க வழிகாட்டும் அதி உன்னத தத்துவமாகும். அதனைப் பேராசிரியர் கைலாசபதியிடமிருந்து இவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியதாகும்.

## மலையக மக்கள்....

4ம் பக்க தொடர்ச்சி

வரையறைகளுக்கு அப்பால் பரந்துபட்ட வெகுஜன இயக்கத்தை கட்டி வளர்க்க வேண்டும்.

தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க தோட்டத்துறையில் புரட்சிகர தொழிற்சங்க இயக்கத்தை கட்டி வளர்க்க வேண்டும். இன ரீதியாக அடக்கப்படும் மலையகத்தமிழ் மக்கள் தனியான தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு ஐக்கிய இலங்கைக்குள் அவர்களின் சுயாட்சி உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மலையகப்பிராந்திய செயலாளர் தோழர் ச.பன்னீர்செல்வம் தனது தலைமையுரையின் போது போலியான தொழிற்சங்க, பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு அப்பால் புதிய-ஜனநாயக கட்சி வெகுஜன அரசியலை முன்னெடுத்து வருகிறது. அதனால் பல வெற்றிகளும் கிடைத்துள்ளன. குறிப்பாக ஹைபோராஸ்ட் பாதையை புனரமைக்கக் கோரியும், தனியார் பஸ்கட்டணத்தை குறைக்கக்கோரியும் செய்யப்பட்ட வெகுஜனப்போராட்டங்கள் வெற்றியளித்துள்ளன. அதே போன்று எதிர்காலத்தில் மக்களின் பிரச்சினைகளை வென்றெடுக்க வெகுஜன போராட்டங்களிலேயே நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். மலையகத் தமிழ் மக்களுக்கும் இந்நாட்டிற்கும் பேரழிவை ஏற்படுத்தவுள்ள மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை தடுத்த நிறுத்த பலமான வெகுஜனப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

புதிய-ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி.கா.செந்திவேல் பேசும் போது நாட்டில் தற்போது நிலவும் யுத்தமற்ற சூழ்நிலையில் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் இயல்பு வாழ்வையும் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் ஏற்படுத்த அங்கு இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இறுதி தீர்விற்கான பேச்சுவார்த்தைகளும் ஒரு கால அட்டவணையுடன் முன்னெடுக்கப்பட வேண்டும். அப்பேச்சுவார்த்தையில் மலையகத்தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்வதற்கான தீர்வுகளும் காணப்படவேண்டும். மலையகத் தமிழ்மக்கள் என்ற அடையாளத்தை மறைத்து அவர்களை இந்நாட்டிலிருந்து அந்நியமாக்கும் இந்தியத்தமிழர் என்ற அடையாளம் திணிக்கப்படக் கூடாது. அவர்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பதுடன் அவர்களின் அடையாளம் மலையகத் தமிழ்மக்கள் என்பதாகவே இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாக செம்மலர்கள் வீதிநாடகக் குழுவினரின் வீதிநாடகம் அட்டன் பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் நடைபெற்றது என்பதுடன் அக்கூட்டத்தில் புதிய ஜனநாயகக் கட்சியின் ஆசிரியர் அமைப்பைச் சேர்ந்த பெ.சந்திரகுமார் மாணவர் அமைப்பைச் சேர்ந்த ச. சுகேசனன், கட்சியின் வடபிரதேச செயலாளர் செல்வம் கா.கதிர்காமநாதன், வவுனியா அமைப்பாளர் டொன் பொஸ்கோ, அரசியல் குழு உறுப்பினர் சட்டத்தரணி சோ.தேவராஜா, புதிய மலையகம் அமைப்பாளர் வெ.மகேந்திரன், கல்வியாளர் சி.இராஜேந்திரன் அ.ந.வரதராஜ், உட்பட பலர் உரையாற்றினார்கள்.




மறைந்த தோழர் எஸ்.நவரட்ணத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் 4-12-2004 அன்று கொழும்பில் நடைபெற்ற போது தோழர்கள் இ.தம்பையா தலைமை தாங்குவதையும், சோ.தேவராஜா, உரையாற்றுவதையும் க.நடனசபாபதி "தோழர் நவம் பொதுவுடமை போராளியின் நினைவுகள்" நூலின் முதற்பிரதியை தோழர் ஏ.கே.திருச்செல்வத்திற்கு வழங்குவதையும் படத்தில் காணலாம்.

## சமாதான நடவடிக்கை...

10ம் பக்க தொடர்ச்சி

எதிர்க்கும் வெகுஜன எழுச்சிப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதனால் 2000 ஆம் ஆண்டிற்குப் பிறகு மீண்டும் பாலஸ்தீனம் பூரணமான போராட்டக்களமானது. இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலினால் ரமல்லாவிலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்க தலைமைக் காரி யாலத்திலிருந்து அரபாத் வெளியேற முடியாத அளவிற்கு நிலைமையை மோசமாக்கியது. ஆறுமாதகாலத்திற்கு மேல் எறிகணை போன்ற கடும் தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொண்டு வந்தது. ஒரு வாரத்திற்கு மேல் தலைமைக் காரியாலயத்திற்கு நீர். மின்சாரம் போன்ற வசதிகள் துண்டிக்கப்பட்டிருந்தன. உலக நாடுகளின் அழுத்தங்களின் காரணமாகவே இஸ்ரேல் அதன் தாக்குதல்களை மனமின்றி நிறுத்தியது.

மோசடிக்காரன் என்று அரபாத்தை கூறிய அமெரிக்கா இனிமேல் அவரிடம் பேசுவதற்கு எதுவும் இல்லை என்று கூறியது. இது இஸ்ரேலுக்கு ஆதரவான நிலைப்பாடாகும். அமெரிக்கா வரலாற்றுக் காலம் முழுவதுமே இஸ்ரேலுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வந்துள்ளது என்பது சொல்லித் தெரியவேண்டிய விடயமல்ல.

பாலஸ்தீன மக்களின் தேசிய அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கு குறைவான எதனையும் ஏற்காத அரபாத்தின் உறுதியை விளங்கிக் கொள்ள வேண்டும். அரபாத் இறந்து ஒரு சில மணித்தியாலங்களில் அமெரிக்க ஜனாதிபதி புஷ் கூறிய விடயங்கள் கவனிக்கத்தக்கன. சுதந்திர பாலஸ்தீன அரசு உருவாவது வெகுதூரத்தில் இல்லை என்று அவர் கூறியிருந்தார். இதில் அரபாத் எதிர்ப்பே மிகையாக இருந்தது. பாலஸ்தீன அரசை உருவாக்காமல் இருக்க முடியாது என்பதும் தொனித்ததை மறுப்பதற்கில்லை. ஆனால் அரபாத் இறுதிவரை வற்புறுத்தி நின்ற பாலஸ்தீன அரசு கிடைக்குமா என்பது சந்தேகமேயாகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் அரபாத் போராட்ட யுகத்தை, உருவாக்க வாழ்நாள் முழுவதும் அயராது உழைத்தார். அவர் பாலஸ்தீனத்தை மீட்பதை மட்டுமன்றி முழு அரபு நாடுகளிலும் உலகமேலாதிக்க சக்திகளுக்கு எதிரான விடுதலை உணர்வை மேலும் ஒருபடி வளர்த்தெடுத்துள்ளார். 1993 ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கை பாலஸ்தீனத்தை பௌதீக ரீதியாக அங்கீகரித்ததுடன் குடிபெயர்ந்திருந்த பாலஸ்தீனர்கள் மீண்டும் பாலஸ்தீனத்தில் குடியேற வழிவகுத்தது. அமைதியற்ற வாழ்க்கை தொடர்ந்தாலும் பாலஸ்தீனர்கள் அவர்களின் சொந்த மண்ணில் இருந்து கொண்டு யுத்தத்திற்கு எதிராக முகம்கொடுக்கலாயினர். தமது முழு இறைமை கொண்ட பால ஸ்தீனத்திற்காகப் போராடுவதைத் தொடர்கின்றனர்.

எந்தவொரு போராட்டத்திலும் போராடிக்கொண்டிருக்கும் போது இருப்பதை விட பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருக்கும் போது பல சிக்கல்கள் வந்தே தீரும். அதில் விட்டுக் கொடுப்புகள் தவிர்க்க முடியாததாகி விடுகின்றன. அவ்விட்டுக் கொடுப்புகளின் மூலம் போராட்டத்தின் அடித்தளத்தை சாகடிப்பதாய் அமைந்து விடக்கூடாது என்பது போராடும் சக்திகள் உறுதியாக இருக்கும் போது மேலும் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க வேண்டி வரும். அச்சிக்கல்களைச் சரியாகத் தீர்க்கும் சாதுரியமில்லா விட்டால் சமாதான நடவடிக்கைகளாலும் பயனில்லை. சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள காரணமாகவிருந்த போராட்டங்களாலும் பயனில்லை. இதனை பாலஸ்தீன மக்களின் போராட்டங்களிலும் சமாதான முயற்சிகளிலும் இருந்து படிக்கக் கூடிய அனுபவங்களாகக் கொள்ளவ் வேண்டும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று12 ஜனவரி 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 76

## புதிய- ஜனநாயக கட்சியின் வேண்டுகோள்

சுனாமி பேரழிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமளித்து உதவுவதில் புதிய-ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர்கள் அவ்வப் பிரதேச பொது அமைப்புகள் நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். தொடர்ந்தும் அப்பணிகளை முன்னெடுத்து நிர்க்கதியான மக்களுக்கு ஆறுதலாகவும் பக்க பலமாகவும் இருக்குமாறு புதிய ஜனநாயக கட்சியின் மத்திய குழு சகல பிரதேச மாவட்ட குழுக்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

# ஜே. வி. பி .மீது வடபகுதி மக்கள் தமது வெறுப்பைக் காட்டினர்

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் வடபகுதிக்கு கடந்த மாதம் 30 ஆம் திகதி சென்ற ஜே. வி. பி தலைவர்கள் மீது மக்கள் அவர்களது வெறுப்பை வெளிப்படுத்தியுள்ளனர். சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட மக்களையும் சேதங்களையும் பார்வையிடுவதற்காக பிரதமர் வடபகுதி சென்றிருந்தார். நிவாரண உதவிகளையும், புனரமைப்பு புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான உதவிகளையும் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நாட்டின் முக்கிய தலைவர்கள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று சரியான சேத விபரங்களைத் திரட்டி அனுப்ப வேண்டும். அந்த நோக்கிலேயே பிரதமர் தலைமையிலான குழு வடபகுதிக்கு சென்றுள்ளது. அக்குழுவில் ஜே. வி. பி அமைச்சர் அநுரகுமார திஸாநாயக்காவும் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சாவும் சென்றிருந்தனர். ஜே. வி. பி மீது தமிழ் மக்கள் கொண்டிருக்கும் வெறுப்பை அவர்கள் நேரடியாக பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஜே. வி. பிக்கு எதிராக மக்கள் கோஷங்களும் எழுப்பியுள்ளனர்.

புலோலியில் இருக்கும் இடம்பெயர்ந்தவர்களின் முகாமில் மக்கள் எதிர்ப்பைக் காட்டி ஜே. வி. பி தலைவர்களுடனும், அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயுடனும் இழுபறிபட்டுள்ளனர். அதனால் ஜே. வி. பியின் விமல் வீரவன்சா கீழே விழுந்துவிட்டதாக அறிய முடிந்தது. அந்தளவிற்கு தமிழ் மக்கள் பேரினவாதத்திற்கு எதிரான நிலைப்பாட்டில் உறுதியாக இருக்கின்றனர் என்பதும் நிராதரவான நிலையில் சலுகைகளை கொடுப்பதாகக் காட்டி தமிழ் மக்களை அடிமைப்படுத்த முடியாது என்பதும் மேற்படி எதிர்ப்புகளின் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது. இதனை பேரினவாதிகள் உணர்வார்களா? அவர்கள் திருந்தி செயற்படுவார்களா?

நேற்றவரை இனவாதப் பேச்சுக்களால் தமிழ் மக்களை புண்படுத்தி எதிர்த்து வந்த ஜே. வி. பி யினருக்கு தமிழ் மக்களின் பிரதேசத்தில் என்ன வேலை இருக்கிறது? தமிழ்மக்களுக்கு நிவாரண நிதி வழங்கிய மகாராஜா, கீல்ஸ் நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கூறிய விமல் வீரவன்சா எந்த முகத்துடன் தமிழ்மக்களைப் பார்க்கச் சென்றார்? தமிழ்மக்கள் வாழும் பகுதிகளில் பாரிய பாதிப்புகள் எதுவும் இல்லை எனக் கூறிவிட்டு அப்பகுதிகளை பார்க்கச் சென்றதன் நோக்கம் என்ன? வடபகுதி மக்கள் பேரினவாதம் பேசிவரும் ஜே. வி. பி தலைவர்களுக்கு நல்ல பாடத்தைப் புகட்டி திருப்பி அனுப்பியுள்ளனர். ●

## மலையகத்தில் மீண்டும் மாணிக்கல் அகழ்வுக்கு முயற்சி

பொகவந்தலாவை பகுதி மாணிக்க கல் அகழ்வு வேலைகளை செய்வதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு வழங்கி இருப்பதையும் பொருட்படுத்தாமல் அமைச்சர் றோகித்த போகொல்லாகம மாணிக்கல் அகழ்வதற்காக காணித்துண்டுகளை ஏலத்தில் குத்தகைக்கு விடுவதற்கான ஏற்பாடுகளை செய்யப்போவதாக அறிவித்துள்ளார். இது நீதிமன்றத்தீர்ப்பை அப்பட்டமாக மீறிய செயலாவதுடன் நீதிமன்றத்தை அவமதிப்பதுமாகும். மாணிக்ககல் அகழ்வினால் மண்ணரிப்பு மண்சரிவு உட்பட சூழலுக்கு பாரிய பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே மாணிக்க கல் அகழ்வை தடுக்க நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டுமெனக் கோரி மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் ரிட்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அம்மனு மீதான விசாரணையை நடத்தி இறுதி தீர்ப்பளிக்கும் வரை மாணிக்க கல் அகழ்வு வேலைகள் எதனையும் செய்யக் கூடாது என்று இடைக்கால தடை உத்தரவினை வழங்கி இருக்கிறது.

இருந்த போதும் மாணிக்க கல் போன்ற கனியங்களுக்கு பொறுப்பான அமைச்சர் ரஞ்சித் போகொல்லாகம (ஒருமாதத்திற்கு முன்பு தான் ஐ.தே. கட்சியிலிருந்து சு. கட்சிக்குதாவி அமைச்சரானவர்) பொகவந்தாலவை பகுதியில் மாணிக்க கல் அகழ்வை மேற்கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார். மாணிக்க கல் அகழ்விற்காக காணித்துண்டுகளை குத்தகைக்கும் கொடுப்பதற்கான ஏல விற்பனைச் கோரலை மேற்கொள்ளப்போவதாகவும் அறிவித்துள்ளார்.

எவ்வளவுதான் அழிவுகள் ஏற்பட்ட போதும் லாபமொன்றையே குறிகோளாக கொண்டு செயற்படுபவர்களுக்கு வேறெதுவும் பெரிதாகத் தெரிவதில்லை. மக்கள் தொடர்ந்து எதிர்ப்பியக்கத்தை பலமாகவும் உறுதியாகவும் முன்னெடுத்தாலே இவ்வாறனவர்களின் மக்கள் விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த முடியும்.

முதலாளித்துவ அரசியல் வாதிகள் தங்களின் இருப்பிற்காக எதனையும் செய்வார்கள். அவர்கள் பணம் படைத்தவர்களின் நலனிலேயே அக்கறை செலுத்துவார்கள் மக்கள் அழிந்தாலும், இயற்கை அழிந்தாலும் அவர்களுக்கு அக்கறை இல்லை. ●

### நிவாரணம் புனர்வாழ்வு.....

1ம் பக்க தொடர்ச்சி .....

பாதிக்கப்பட்ட மக்களின் அவலத்திற்கான நிவாரணம் புனர்வாழ்வு புனரமைப்பு என்ற அடிப்படையில் இணைந்து செயல்படுவதே இன்றைய அவசியத் தேவையாகும் இதனையே பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகி நிற்கும் வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்து தமிழ் முஸ்லீம் சிங்கள மக்களும் சமூக அக்கறையார்களும் மனிதநேயவாதிகளும் விரும்புகின்றனர்.

அவ்வாறே ஆளும் வர்க்க அதிகார அரசியல் போட்டி காரணமாக தெற்கில் பிளவுண்டு நிற்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் தத்துமது குறுகிய நலன்களுக்கு அப்பால் இணைந்து நின்று செயல்பட்டு நிவாரண புனர்வாழ்வு புனரமை ப்பில் ஈடுபட வேண்டும் என்பன தெற்கின் மேற்கின் மக்கள் விரும்புகிறார்கள்.

எனவே இன்றைய சூழலில் சகல தரப்பினரும் நேர்மை ஐக்கியம் புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும் என வற்புறுத்துகின்றோம். ●

### சுனாமி பற்றி அறி...

1ம் பக்க தொடர்ச்சி..

அதனால் பெரும் எண்ணிக்கையான மக்கள் அங்கு பலியாயினர். ஆக அமெரிக்க ஏகாதிபத்தியமும பாதிப்பிற்குட்பட்ட நாடுகளுக்கு முன்னெச்சரிக்கை செய்ய வில்லை என்பது மட்டுமன்றி அதன் கடற்படை தளத்தை வைத்திருக்கும் தியாகோ கார் சியா தீவு மக்களுக்கும் முன்னெச்சரிக்கை செய்யவில்லை.

சுனாமி அலை பற்றி முன்னறியும் வசதிகள் அமெரிக்காவிடமே இருக்கின்றன. இருந்தும் அதைப்பற்றி அறிவிக்காமல் அதற்குரிய ஏகாதிபத்திய நயவஞ்சகத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தோனேசிய சுமத்திரா தீவுப்பகுதி சுனாமி அலையின் ஆபத்திற்குட்பட்ட பகுதியென்றும் அங்கு முன்னறியும் நிலையங்களை அமைக்க வேண்டியது அவசியம் என்று கூறப்பட்டபோதும் அதனை அமைக்க போதிய நிதியில்லாததால் அவை அமைக்கப்படவில்லை.

ஒரு முன்னறியும் நிலையத்தை அமைக்க 250000 அமெரிக்க டொலர்கள் தேவை. அமெரிக்க பாதுகாப்பு ராணுவத் தலைமையக மான பென்டகனின் ஒரு நாள் செலவு 1500,000000 அமெரிக்க டொலர்களாகும். அதாவது அமெரிக்க பாதுகாப்பு தலைமையகம் ஒரு செக்கனுக்கு குறைவான நேரத்திற்கு செலவிடும் பணத்தில் ஒரு சுனாமி அலையை முன்னறியும் நிலையத்தை அமைக்கலாம். அவ்வாறு ஒரு நிலையம் இந்து சமுத்திரப் பகுதியில் எங்காவது அமைக்கப் பட்டிருந்தால் அழிவுக்குள்ளான பல்லாயிரக் கணக்கான மனித உயிர்களைப் பாதுகாத்திருக்க முடியும்.

அவ்வாறு அப்பாவி உயிர்களைப் பாதுகாப்பதற்கு பணம் செலவழித்து அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு பழக்கமில்லை. இருப்பினும் முன்னறிந்த தகவலைக் கூட உரிய நேரத்தில் உரிய முறையில் இந்து சமுத்திர நாடுகளுக்கு கொடுக் கவில்லை. ஏன் என்பது தான் எழுப்பப்படும் கேள்வியாகும். இதன் மூலம் மனிதகுலத்திற்கே பாரிய நயவஞ்சகத்தையும் துரோகத்தையும் அழிவையும் அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்துள்ளது. இதனை மனிதநேயத்தை நேசிக்கும் எவராலும் மன் னிக்க முடியாது. அழிவிலும் தென்னாசியாவை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவே அமெரிக்கா ஏகாதிபத்தியம் கங்கணம் கட்டி நிற்கிறது. அதனை மேற்படி சம்பவம் அம்பலப்படுத்த நிற்கிறது.

### *மனிதப் பேரழிவு*

1ம் பக்க தொடர்ச்சி

முன்னைய அரசாங்கங்களும் மக்கள் முன்னிலையில் கொலைக் குற்றவாளிகளாகவே உள்ளனர். இன்று நினைத்துப் பார்க்க முடியாதளவு மனிதப் பேரழிவு இடம் பெற்ற பின்பு மரண வீடுகளுக்குச் சென்று துக்கம் விசாரித்து அனுதாபம் தெரிவிப்பது போன்று ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அமைச்சர்கள் சென்று வருவதில் எவ்வித அர்த்தமும் இருக்க முடியாது. துக்கதினம் பிரகடனம் செய்து அஞ்சலி செய்வதெல்லாம் நடந்து விட்ட பாரிய அழிவுக்கான தவறுகளுக்குப் பரிகாரமாகாது.

இவ்வாறான அனர்த்தம் ஏற்படக் கூடிய சந்தர்ப்பம் இலங்கைக்கு உண்டு என சில வருடங்களுக்கு முன்பே தான் சுட்டிக்காட்டியதாகவும் அதற்குரிய முன் முயற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை வற்புறுத்தியதாகவும் விஞ்ஞானி ஆதர் ஸி கிளார்க் தெரிவித்திருக்கிறார். இதனை இலகுவில் நிராகரிக்க இயலாது.

அதேவேளை புவிசரிதவியல் திணைக்களம், காலநிலை அவதான நிலையம் என்பனவும் அவற்றின் அதி உயர் சம்பளம் பெறும் அதிகாரிகளும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டியவர்களே. இவர்களது பொறுப்பற்ற செயல்களுக்கு தொடர்ச்சியாகவே உடந்தையாக இருந்து வந்த அமைச்சர்கள் தமது மனசாட்சியற்ற மனித விரோத செயல்களுக்கு என்ன நியாயம் கூறுவார்கள். எந்தவொரு அமைச்சராவது மக்களிடம் மன்னிப்புக் கோரும் வகையில் இதுவரை தமது பதவிகளை இராஜினாமாச் செய்து கொள்ள முன் வரவில்லை. இவர்கள் எல்லாம் இப் பாரிய அழிவுகளுக்கு ஊடாக எவை எவற்றையெல்லாம் பெற்றுக் கொள்ளலாம் என்ற சிந்தனையிலேயே இருந்தும் வருகிறார்கள். மக்கள் மக்கள் எனக் கூறிப் பாராளுமன்ற அரசியலில் பேரினவாத முதலீட்டை செலுத்தி பதவிச் சுகம் பெற்று நிற்கும் ஜே.வி.பி யினர் மௌனம் சாதித்து வருவதன் மர்மம் தான் என்ன? பேரினவாத யுத்த அரசியலுக்கான சூழலைச் சுனாமி அனர்த்தம் கெடுத்து விட்ட அதிர்ச்சி என்றே கூறுதல் வேண்டும்.

வடக்கு கிழக்கு மக்கள் இந்தப் பேரழிவின் தாக்கத்தை தாங்க முடியாத சூழலிலேயே உள்ளனர். இருபது வருட பேரினவாத யுத்தத்தால் ஏறத்தாள ஒரு லட்சம் மக்களை பலி கொடுத்து பல ஆயிரம் கோடி பெறுமதியான சொத்துக்களை இழந்து இன்றும் அகதிவாழ்வு முடிவுறாத மக்களாகவே இருந்து வருகின்றனர். கிழக்கிலே மீண்டும் மீண்டும் புயல் வரட்சி வெள்ளம் எனத் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வாழ் விழந்து வாழும் மக்களாக உள்ள அவர்களுக்கு ஏற்கனவே நிவாரணங்களோ புனர்வாழ்வோ இது வரை முழுமையாகக் கிடைக்க வில்லை. காரணம் அரசாங்கங்களின் பேரினவாத நிலைப்பாடு தான். இந்த லட்சணத்தில் இப்போதைய சுனாமிப் பேரழிவுக்கு அரசாங்கம் உரிய பரிகாரம் வடக்கு கிழக்கிற்கு வழங்கும் என எப்படி எதிர் பார்க்க முடியும். ஒட்டு மொத்தத்தில் இப்பேரழி வால் உயிர்பறிக்கப்பட்டு உடமைகள் அழிக்கப்பட்டு எதிர்காலமே இருள் மய மாக்கப்பட்ட மக்களில் ஏகப் பெரும் பான் மை - யோர் சாதாரண உழைக்கும் மீனவர்களும் சிறுகைத் தொழிலாளர்களும் அப்பிர தேசகீழ் மத்தியதரவர்க்க மக்களாகவே உள்ளனர். எனவே வடக்கில் தொண்டமானாற்றில் இருந்து கிழக்கு தெற்கு மேற்கு நீர்கொழும்பு வரை கரை யோரங்களில் வாழ்ந்து தொழில் செய்து வந்த தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களின் பாரிய மனிதப் பேரழிவுக்கு அரசாங்கமே முழுப் பொறுப்புபாகும். ஆனால் அரசாங்கம் உரிய பொறுப்பையோ அன்றி உண்மையான உத்தர வாதத்தையோ வழங்க மாட்டாது. ஏனெனில் வடக்கு கிழக்கை அரசாங்கம் பேரினவாத நிலை கொண்டே நோக்கும் அதே வேளை தெற்கு மேற்கை வர்க்க ரீதியிலான நிலையின் ஊடேதான் கண்டு கொள்ளும் என்பதே அடிப்படையானதாகும். இந்த உண்மையை இப் பேரழிவின் ஊடாக சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக உழைக்கும் வர்க்க மக்கள் புரிந்து கொள்வது அவசியம்.

## கேளாமல் வந்த கடல்

சொல்லாமற் கொள்ளாமல்
காலைப் பொழு தொன்றில்
கடற்பரப்புக் கையுயர்த்தி
கதவுகளைத் தட்டியது.

வழிமறித்த மதில் தகர்த்து
வளவுகளில் நீரிறைத்துத்
திறவாக் கதவுகளின்
தாழுடைத்து உட்புகுந்து
கொள்ளையிட்ட பொருளெல்லாம்
அள்ளிச்சிதறி அயலெங்கும் வீசியது.

அள்ளிக் கொடுத்தாலும்
அளவாகத் தந்தாலும்
தரவே மறுத்தாலும்
கடலம்மா என்றழைத்து
கடலோரக் குடிசைகளில்
கடல் நோக்கி வாழுகிற
கடலின் குழந்தைகளைக்
கடல் கொண்டு போயிற்று

கடலாடும் தோணிகளைக்
கரை வலையைக் கடல்வலையை
கடல் கிழித்த காரணமேன்?

கடல் நின்ற தரை நடுங்கி
அதிர்ந்து குலுங்கியதில்
கடல் அஞ்சித் துள்ளியதோ?
அபயமெனக் கையுயர்த்திக்
கரை நாடி ஓடியதோ?

கண்ணீரிற் கடும் உழைப்பிற்
கொடுமைகட்கு எதிராகப்
போர்செய்து காப்பாற்றி
வைத்ததொரு வாழ்வும்
வாழ்ந்திருந்த மானிடரும்
கடலடித்து வீழ்ந்தாலும்
மீண்டும் எழுவார்
வாழ்வார், வளம்பெறுவார்,
ஓங்கும் கடலலைக்கும்
மேலாய் உயர்வார்
முகில் தொட்டு வானளைந்து
மீள்வார், போரிடுவார்
மானிடத்தை உய்விப்பார்.

-ஸ்வப்னா-

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3 மடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.